329

# ஜகன்மோகினி




அ 4 ணு April 1945

ஆண்டு 22 திங்கள் 4 22-4

OHINI." SINGAPERUMALKO




அதுதான் இந்திய ஆகாயப்படையின் பிராணம். இந்திய அதிசயத்தக்க உற்சாகம் தான் ஐ. ஏ. எப்பின் மேன்மைக்குக் காரணம். உலகின் எல்லைகள் மாறுதல் அடைந்து வரும் இந்த சரித்திரசம்பந்தமான காலில் ஆகாயத்தில் பலம் பெற்ற அதிகாரம் வகிப்பது தான் ஜெயிப்பவனுக்கும் ஜெயிக்கப்படுபவனுக்கு முள்ள வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. நேச நாட்டுகளுடன் ஐ. ஏ. எப். ஜப்பானியர்களுக்கு, நமது துணிச்சலான உற்சாகமும், பயிற்சியின் மேன்மையும் நமக்கு ஆகாயபலத்தை அளிக்கிறது என்பதை காண்பிக்கின்றனர்.

## உங்களுடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றி நினைப்பதற்கு இதுவே சமயம்!

- இந்திய ஆகாயப் படையில் அடையும் பயிற்சியும் அநுபவமும் அனேகருக்கு லாபகரமான சிவில் வாழ்க்கை நடத்த சேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பதற்கு சந்தேகமேயில்லை.
- யுத்தம் நடக்கும் வரை தங்கள் ஆதிக்கத்திலுள்ள அநேக வேலைகளை காலியாக வைத்திருப்பதாக சர்க்கார் வாக்களித்திருக்கின்றனர். இந்த வேலைகள் பிற்பாடு யுத்தசேவை செய்தவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.
- யுத்த சேவையிலிருந்தவர்களில் தேர்ந்தெடுத்தவர்களுக்கு குறிப்பிட்ட வியாபாரம் அல்லது தொழிலில் சர்க்கார் செலவில் பிரயோக பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாராகி வருகிறது.
- தற்சமயம் பல்கலைக்கழகத்திலிருக்கும் மாணவர்களுக்கு யுத்த சேவையால் யுத்தத்திற்குப் பிறகு மதிப்பு உள்ள சலுகைகளை அடைவார்கள். அதன் மூலம் அவர்கள் மேற்கொண்டு படிக்கலாம். சரியான விவரங்களை பல்கலைக்கழக அதிகாரிகளிடமிருந்து பெறலாம்.

இந்த கூப்பனை கத்தரித்து அதை உங்களுக்கு சமீபத்திலுள்ள G. D. (பைலட்டுகள்) ரெக்ரூட்டிங் ஆபிசருக்கு அனுப்புங்கள், அவர் உங்களுக்கு விண்ணப்ப பாரமும் இந்திய ஆகாயப் படையில் பைலட் சேவைக்கான விவரங்களையும் நிபந்தனைகளையும் அனுப்புவார்.

பெயர் ____________________

விலாசம் ____________________

____________________

**ஐ. ஏ. எப்க்குத் தேவையானது**

நல்ல திடசரீரமும், நல்ல பார்வை, காது கேட்குதல், $17\frac{1}{2}$ முதல் 28 வயதுக்குள் [illegible] அவர்கள் [illegible] யுத்த சேவையில் [illegible] ஏற்படும் [illegible] இருக்கவேண்டும். நல்ல பொது அறிவுள்ள பயிற்சியும் [illegible] பெற்றிருக்க வேண்டும்.

உங்களது கூப்பனை

சமீபத்திலுள்ள G. D. R. O.க்கு அனுப்புங்கள்

**ஐ. ஏ. எப். ஜி. டி. (பைலட்ஸ்) ரிக்[illegible]**
**ஆபீசர்,**

**புதுப்பேட்டை லைன்ஸ், மௌண்ட்ரோட், சென்[illegible]**
**ஐ. ஏ. எப். ஜி. டி. (பைலட்ஸ்) ரிக்ரூடிங் ஆபீஸர், கப்பன் ரோ[illegible]**

# ஜகன் மோகினி

தனிப்பிரதி அணு 4
வருட சந்தா ரூ. 3
ஜீவிய சந்தா ரூ. 50

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீராகவ கவி

Vol. 22. No. 4. தாரண பங்குனி April 1945.

மேல் அட்டைப்படம்! பித்ரு தேவோ பவ

## தந்தையே வணக்கம்

உண்ணும் அமுதினைப்போல்-கல்வி
ஊட்டி எம்மை வளர்த்தாய்
கண்ணிரண்டும் எனவே-எம்மைக்
காத்த தந்தாய் வணக்கம்!

ஆடி ஓடி யலைந்தே-எங்கள்
அன்பினுற் பாடுபட்டே,
தேடிப் பொருள்பலவும்-நாங்கள்
சேமமாய் வாழச் செய்தாய்.

விண்கண்ட தெய்வத்தினைப்-பெரியோர்
விளம்பிடவே கேட்டோம்-எங்கள்
கண்கண்ட தெய்வம் என்றே-உன்னைக்
கைதொழு தின்புறுவோம்!

எட்டுத் திசையினிலும்-உன்
இசை பெருகிடவே-நாங்கள்
பட்டம் பதவிபெற்றே-நல்ல
பண்புற வாழ்ந்திடுவோம்!

நன்றி செலுத்துகிறோம்-எந்
நாளும் உன்னை மறவோம்; மனம்
ஒன்றிச் செழித்துலகில்-அறம்
ஓங்கப் பணிபுரிவோம்...

வீடு தழைத்திடவே-கர்ம
வீரந் தழைத்திடவே சொந்த
நாடு தழைத்திடவே வாழ்ந்து
ஞாலப் புகழ் பெறுவோம்...

சுத்தானந்த பாரதி

183100.
600 008

**யோகி சுத்தானந்த பாரதி**

# கவியும் ஒழுக்கமும்

"கவி" என்றால் வெறும் பாட்டுக் கட்டுகிறவன் அன்று; வேதரிஷிகளுக்குக் கவிகள் என்று பெயர்; மிகவும் ஆழ்ந்த ஆத்ம ரகசியங்களை அறிந்தொழுகும் ஆசாரசீலருக்குக் கவிகள் என்று பெயர்.

கவிகள் எனப்படும் சில பாவலர் வாழ்வில் சில வக்கிரங்கள் காணலாம். அழகான கதைக் கவிகள் எழுதிய லஃபோந்தேன் (Le fontaine) முழுச் சோம்பேறி; ஒரு தரம் அவன் மனைவியை அழைத்துவர மாமனார் வீட்டுக்குச் சென்றான். போன பேர்வழி ஓர் ஓட்டலில் சுகமாக்க் காலம் கழித்துவிட்டு, மனைவியைப் பார்க்கக்கூட மறந்துவிட்டுத் திரும்பினான். கோல்ரிட்ஜ் அபின் சாப்பிட்டுக் கெட்டான். வெர்லேன் என்ற அற்புதமான பிரெஞ்சுக்கவி கட்குடியால் அழிந்தான்; இப்படியே குடி, விபசாரம், சூதாட்டம் முதலியவற்றால் கெட்ட பாட்டையாக்களும் உண்டு; இப்படிச் சிலர் செய்வதனால் எல்லாரும் அப்படியே செய்யவேண்டும் என்பதன்று; அதில் ஒரு பெருமையுமில்லை. ஒரு நண்பருக்கு ஒரு கவிமேல் மோகம்; அந்தக்கவி ஓயாமல் லேக்காப் போடுவார்; அசாத்திய முன்கோபி; மனைவியை அடிப்பார்; தடுத்தவருக்கும் உதை விழும். இந்தக் கவியைப் பற்றி நண்பர் புகழும்போது, "ஆஹா! ஆஹா! அவரல்லவா கவி, எதையும் செய்வார் எப்படியும் இருப்பார். அவர் ஒரு சேரிக்குப்போனார்; ஊறறுங்கள் என்று ஒரு மொந்தை போட்டார், அதற்குமேல் ஒரு பள்ளி அழுக்குக்கையால்தந்த மொச்சைக் கொட்டைச் சுண்டலை அப்படியே சாப்பிட்டு விட்டார்; உடனே க்ஷவரம் பண்ணிக்கொண்டார்; அப்படியே குளிக்காமல் ஒரு நண்பரின் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு, "சர்வம் சமம்" என்று சொன்னார்"—ஆஹா! அந்த மாதிரி யார் செய்யமுடியும்?" என்று வியந்து, ஒழுக்கமுள்ள சிலர்களையெல்லாம் "இவர்கள் மனிதர்களா! எருமைக்கடாப்போல் காலையில் தண்ணீரில் மூழ்குவதும், மடி கட்டுவதும் ஜபம்செய்வதும்...சை இவர்களாலேதான் தேசம் உருப்படாமற் போனது" என்று வாய்க்குப்பை கக்கத் தொடங்குவார்.....

கவியின் வாக்கை நான் வணங்குகிறேன்; ஆனால் அவர் புட்டி பூரணாதி போட்டதை ஏற்கமுடியாது; வாக்கு அவரது தெய்வீக குணம்; மற்றது சைத்தான் குணம். மனிதனிடம் தேவாசுர குணங்கள் உள்ளன. திவ்யகுணங்களாலேதான் கவி மலரும்; அசுர குணங்களால் முன்கோபம், அகம்பாவம், தூற்றல், குத்தல், பொறாமை, அனாசாரம் ஆகிய துர்க்குணங்கள் கிளம்பும். இந்த அசுரத்தன்மையை அடியோடொழித்து திவ்ய குண ஸம்பன்னனாக விளங்குவோனே சரியான மனிதன். மனோமய சுத்தனே மனிதன் ஆகார சுத்தமே ஸத்வ சுத்தம் என்பது உபநிஷத் வாக்கு. ஆகலால் ஏதோ சில பாவலர், ஒழுங்கு தப்பி நடந்தால் அதை நாம் முலாம் பூசிக் கொண்டாடிப் பிறருக்கும் கெட்டவழி காட்டவேண்டியதில்லை. எனக்கு யாப்பணியிலக்கணம் சொன்ன ஒரு புலவர் சிறந்த

படிப்பாளி, சபை நிரம்பிய பேச்சாளி; நன்றாகப் பாடம் சொல்லுவார். இருவரும் ஊருக்கு வெளியே காடு குளங்களிற் சென்றே படிப்பதுண்டு. ஒருநாள் அந்தி மாலையில், அவரைச் சந்தித்தபோது கண்கள் சிவந்திருந்தன; என்னைக் கண்டதும் காதல் வெண்பாக்கள் பாடத் தொடங்கினார். "ஐயா! பகவான்மேல் பாடுங்கள். இந்த அற்ப சுகங்களைப் பாடிக் கவிக்கலையைக் கெடுக்காதீர்கள்" என்றேன்—மறுபடியும் அவர் பெரிய குரலெடுத்து ஆபாசப் பாடல்களே பாடி, ஒருமாதிரி நடந்துகொண்டார். ஊன்றிப் பார்த்ததில் அவர் குடித்திருந்தார்—கள் வாடை வீசியது. விசாரித்ததில் குடி விபசாரம் உண்டெனத் தெரிந்தது. அத்துடன் அவர் உறவை விட்டுவிட்டேன். ஒருநாள் என்னைக் கண்டு, "ஏன் பாடத்திற்கு வரவில்லை?" என்று கேட்டார். "நான் வந்தேன் தங்கள் மூளைதான் எங்கோ மயங்கிக் கிடந்தது" என்று உள்ளதைச் சொன்னேன். "தம்பி உனக்குத் தெரியாதா; கம்பன், காளிதாஸன் கவிகளிற்கூட மதுபானத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. கம்பன்கூட தாசியை வைத்திருந்தான்—காளிதாஸன் சிவராத்திரியன்று தன் வைப்பாட்டி மார்பையே சிவலிங்கமாகப் பூசித்தானே!"—என்று மேற்கோள் சொல்லி மீண்டும் காதல் பேச்சுக்கு அடிப்போட்டார். எனக்கு இலக்கியங்களில் காம வேதனைகளை மிகைப்படுத்தி இருபாலாருக்கும் உள்ள உறவுகளை விகாரப்படுத்திப் பாடும் கட்டங்களே பிடிப்பதில்லை. அருள் பெற்ற ஞானிகளின் வாக்கையே நான் இன்றும் படிப்பது. அகத்துறை நூல்கள் தமிழில் அபரிமிதமாயிருக்கின்றன. வள்ளுவர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள் பாடிய பேரின்ப அகத்துறைகளைத்தான் நான் படிப்பது. நான் மிகவும் போற்றிய தமிழாசிரியர் இப்படிப் பேசியது எனக்கு மகா சங்கடமாயிருந்தது. "ஐயா, தங்கள் படிப்பை வணங்குகிறேன்; ஆனால் தங்கள் நடத்தையை நான் ஒப்பமாட்டேன். என்னிடம் சொன்னதை நீங்கள் உங்கள் மனைவிமுன் அல்லது மகள் முன் சொல்வீரா? "அடியே! நான் கள்ளுக்கடைக்குப் போய் வருகிறேன்; வேசை விடுதிக்குப் போய் வருகிறேன்" என்றால் எந்த மனைவியாவது குலப்பெண்ணாவது ஒப்புவாளா?" என்று கேட்டேன். "அவள் பேச்சைக் கிளப்பாதே; சண்டைக்கு வருவாள்; பிடாரி" என்றார்.

"ஐயா! கொண்ட மனைவியை அப்படிச் சொல்லாதீர்கள். தாங்கள் குடி, விபசாரம் வசவுகளை விட்டு ஒழுங்காய் நடந்தால் அவளும் சரியாயிருப்பாள். இராமன் இராமனானால் சீதை சீதையாயிருப்பாள்" என்றேன்.

அவர், "என் பழக்கவழக்கத்தில் நீ தலையிடக்கூடாது. பாடம் மட்டும் சொல்லிக்கொண்டு போ" என்றார். ஒருவாரம் கழித்து அவரைப் பார்த்தபோது நன்றாகக் குடித்து உளறிக்கொண்டிருந்தார். உடனே அவர் உறவினர் ஒருவரை அழைத்துவந்து ஆளை ஊருணியில் முழுக்கிக் குடம் குடமாகத் தண்ணீரை எடுத்து விட்டுத் துடைத்து வீட்டிற்குக் கொண்டு போனோம். அவர் மனைவி மக்கள் பரிதாபமாகக் கண்ணீர் விட்டு "எங்கள் நகைநட்டு புடவை ரவிக்கைகளைக்கூட அடகுவைத்துக் குடித்து இந்தப் பாவி இப்படிக் குடியைக் கெடுக்கிறான். நல்லது சொன்னால் அசாத்திய முன்கோபம் வருகிறது" என்று அழுதனர். அந்தக் காட்சியைக் கண்ட என் மனம் "புத்தகப் படிப்பன்று வித்தக ஒழுக்கமே சிறந்

தது என்றது. அன்று முதல் குடி காமம், ஒழுங்கீனங்களைக் கொண்ட படிப்பாளிகளேயோ கவிகளேயோ இலக்கியங்களேயோ நான் அணுகுவதில்லை. இதேமாதிரி சிலர் ஞானி, யோகி, சித்தர், முத்தர் என்று கஞ்சா அடிப்பதும், கள்ளுண்பதுமாயிருக்கிறார்கள். சிலர் தாந்திர சாதகர் சக்தி உபாசகர் என்று பஞ்சமகாரங்களில் வெறி கொண்டு திரிகிறார்கள். பரஸ்த்ரீகமனம் செய்கிறார்கள். கள், கஞ்சா, சுருட்டு, புகையிலை, சூதாட்டம், விபசாரம் இவை மகா பீடைகள். இவற்றை உபயோகிக்கும் இடத்தில் மூதேவிதான் நடமாடும். இவற்றைக் கொள்வோரை ஒழுக்கமுள்ளவர்கள் ஆமோதிக்க முடியாது. நானறிந்த ஒரு கவி கஞ்சா அபின் போட்டால் வெகு உற்சாகமாகப் பாட்டை அள்ளிவிடுவார். சிலர் அதற்காகவே அவருக்கு வெறியேற்றுவதுண்டு. நான் இருபதடி தள்ளியிருந்து பாட்டை மட்டும் கேட்டு வருவதுண்டு. நண்பர் 'ஏன், கிட்டவந்து கேட்கலாமே' என்றழைப்பார்கள். "ஐயா எனக்கு வேண்டியது பா மணம். பங்கி வெறியை நான் காணமாட்டேன். எனது நாட்டைச் சேர்ந்த ஒருவர் இப்படிக் கெடுகிறாரே என்று மனம் சங்கடம் செய்கிறது" என்பது வழக்கம். பங்கிப்போட்ட கவியைக் காலையில் பார்த்தால் நடைப்பிணமாகத் தானிருப்பான். முகத்தில் பிணக்களை தான், மூதேவித்தூக்கந்தான் காணும். ஞானமும் கவியும் அந்தராத்ம நாதம். பங்கியும் லேக்காவும் புட்டியும் மனிதனிடமுள்ள ராக்ஷஸப் பசியின் அனாசாரப் பழக்கம். அந்தராத்ம நாதத்தை நான் ஏற்பேன். அனாசாரத்தை நான் ஒப்பமுடியாது. இதே மாதிரி "நான் கவி ஞானி எப்படி வேண்டுமானாலும் இருப்பேன்" என்று குளிக்காமல், அனுஷ்டானங்களில்லாமல், நல்ல அனுஷ்டானங்களையும் தூஷித்துக்கொண்டு அனுஷ்டாதாக்களைக் கண்டபடி திட்டிக் கொண்டிருந்தால் அப்படிப்பட்டவன் நமது பாரத நாகரிகத்திற்கே துரோகம் செய்தவனாகிறான். திலகர், மகாத்மா காந்தி, அனிபெஸண்டு, மாளவியா, பிரதிவாதி பயங்கரமடம் அனந்தாசாரியார், மணி ஐயர், வி. கிருஷ்ணசாமி ஐயர், வ. வே. சு. ஐயர் முதலிய பெரியார்கள் சிறந்த அறிவாளிகள், தேசபக்த சிகாமணிகள்; இவர்களை நான் பார்த்திருக்கிறேன். இவர்கள் ஆசார சீலர்கள். இவர்கள் முகத்தில் தேஜஸ் உண்டு. பழைய நன்மைகளை இவர்கள் தூஷித்ததில்லை. புதிய நன்மைகளுடன் அவற்றை அனுஷ்டித்தார்கள். நாடு விட்டு நாடு வந்த அனிபெசண்டு, எப். டி. புரூக்ஸ், கிருஷ்ணப்ரேம், நிவேதிதை முதலிய எத்தனையோ வெள்ளைக்காரர்கள் நமது தேசாசாரங்களை அனுஷ்டித்து தேஜஸ்விகளாக விளங்கினார்கள். ஐரோப்பா அமெரிக்காவில் எனக்குச் சில நண்பர்கள் உண்டு. அவர்கள் நமது பாரத தர்மத்தை அனுஷ்டித்துப் போற்றி எழுதுகிறார்கள். கவி என்ற முறையில் வாக்கை மதிப்போம்; மனிதன் என்ற முறையில் ஒழுக்கத்தை மதிப்போம். "ஒழுக்கம் விழுப்பந் தரும்" என்று வள்ளுவர் சொன்னது வெறும் வார்த்தையன்று. ஒழுக்கந்தான் உயிர். ஒழுக்கங் கெட்டவன் நீளாயுளோ உடலுறுதியோ பெற்று நான் கண்டதில்லை. அனாசாரக் கவிகள் பலர் உடல் வற்றி அற்பாயுளானதை உலகம் பார்த்திருக்கிறது. திருவள்ளுவர் "கற்பவை கற்றபின் நிற்க" என்பதன் பொருள் கல்வியின் பயன் ஒழுக்கமே என்பதைக் காட்டும்.



தருகை நீண்ட தசரதன் தான்தரும்
இருகை வேழத்து இராகவன் தன்கதை
திரிகை வேலைத் தரைமிசை செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே.

கம்பர் ஸ்ரீரங்கத்தில் இராமாயணத்தை அரங்கேற்றுவதற்குமுன் நம்மாழ்வாரை வணங்குகிறார். திருக்குருகூரில் அவதரித்த நாதன் திருவடியில் தன் காவியத்தை வைத்துத் தொழுது பாடுகிறார். ஆழ்வார் பின்னால் தாசரதியே நின்று ஆசி கூறுவதே இந்த ஓவியத்தின் சிறப்பு.

பி.ஸ்ரீ

# 4. கீதை என்ற அமிர்தம்

உபநிஷதங்களைப் பல நிறம், பல தரம் உள்ள பசுக்களாகப் போற்றுவதுண்டு; அப்படிப் போற்றுகிறவர்கள் பகவத்கீதை என்ற கீதோபநிஷதத்தை அவற்றின் ஸாரமாகிய பால் என்று சொல்லிப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். அர்ஜுனனாகிய கன்றை வைத்துக்கொண்டு உபநிஷதப் பசுக்களின் பாலைக் கறந்தான் ஆயனாகிய கண்ணன் என்கிறார்கள். பசு கன்றையும் ஊட்டி நமக்கும் பால் கொடுக்கிறதல்லவா! உபநிஷதங்களாகிய பசுக்களைக் கறந்த கோபாலனே அர்ஜுனக் கன்றையும் ஊட்டி, உண்ண உண்ணத்தெவிட்டாத அந்தப் பாலமுதத்தை உலகத்திற்கெல்லாம் உபகரித்திருக்கிறான்.

இந்த அமிர்தத்தைப் பருகுவதால் நாம் அடையும் பயன் என்ன? பால் உடம்பை வளர்க்கிறது. தேவர்களின் அமிர்தமும் திவ்ய சரீரமாகிய சூட்சும உடம்பை ஊட்டி வளர்ப்பதுதான். கீதை என்ற ஞானப்பாலோ ஞானத்தை வளர்க்கிறது; உள்ளத்தைப் போஷிக்கிறது. உடம்பிற்கும் உணவு வேண்டும், உள்ளத்திற்கும் ஞான உணவு வேண்டுமல்லவா? இனி இந்த ஞானப் பாலைக் கொஞ்சம் சுவைத்துப் பார்க்கலாம்.

* * * *

கீதை கர்மத்தைச் சொல்லுகிறதா? பக்தியைக் குறிப்பிடுகிறதா? ஞானத்தைக்காட்டுகிறதா? யோகத்தை நாட்டுகிறதா? இப்படியெல்லாம் விவகாரங்கள் உண்டு. சங்கரர் ஞானசாஸ்திரமாகக் கருதினார் கீதையை; ராமானுஜர் பக்தி நூலாக மதித்தார். யோக சாஸ்திரமாகப் போற்றியவரும் உண்டு. "யுத்தம் செய்" என்று அர்ஜுனனைத் தூண்டுவதால் யுத்தம் உள்ளிட்ட கடமைகளைவற்புறுத்துங்கர்மயோக சாஸ்திரம் என்று சொன்னவர்களுமுண்டு.

இந்தக் காலத்திலும், பாலகங்காதர திலகர், மகாத்மா காந்தி முதலானவர்கள், கீதை கர்மத்தையும் கடமையையும் வற்புறுத்துகிறதென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். "ஹிருதயத்தை ஞானத்திற்கும் பக்திக்கும் அர்ப்பணமாக்கிக் கைகளைக் கடமைக்கும் கைங்கரியத்திற்கும் உரிமையாக்க வேண்டும்" என்று கீதை கூறுவதாகத் தற்கால அறிஞர்கள் ஊகிக்கிறார்கள்.

* * * *

நாமே கொஞ்சம் கீதையைப் புரட்டிப்பார்க்கலாமே: அர்ஜுனனுக்குச் சோகம் உண்டாகிறது, இரண்டு சேனைகளிலும் உள்ள உறவினர்களைக் கண்டதும். அவர்களுக்காக இரக்கப்படுகிறான். அந்த இரக்கத்தை 'இரக்கம்' இல்லை என்கிறான் கண்ணன். அது 'இழிவான ஹிருதய துர்ப்பலம்' என்கிறான். "இந்தத்துர்ப்பலத்தைஉதறித்தள்ளி ஆண்மகன் என எழுந்து நில்லு" என்று சொல்லுகிறான். அச்சமின்மையே ஞானசம்பத்திற்கு முதற்படி என்கிறான். ஞானசம்பத்தே தேவ சம்பத்து என்கிறான். ஞானம் என்பது ஞானப் பிதற்றலன்று என்று எச்சரிக்கிறான்.

இப்படி ஆரம்பமாகும் கீதா சாஸ்

திரம் இரண்டாவது அத்தியாயத்திலேயே, "யோகநெறியிலே பொருந்துக" என்று அந்த நெறியை வற்புறுத்துகிறது.

* * * *

யோகம் என்றால் என்ன? "செயல்களில் திறமையாவது யோகம்" என்கிறான் கண்ணன். கவலை முதலியவற்றால் கலங்கி விடாதபடி அறிவைத் தெளிவாக வைத்துக்கொண்டு செயல்களை யோகமாகச் செய்து சக்தியை வளர்த்துக் கொள்ளவேண்டுமென்பது கண்ணன் கருத்து.

கவலையும் கள்ளமும் மனக்கண்ணாடியை மாசடையச்செய்கின்றன. "கள்ளம் போனால் உள்ளது காணும்" என்றார் நந்தனார் ('சரித்திரக் கீர்த்தனை'யில்). கவலையையும் கள்ளத்தையும் போக்கிக்கொண்டால் மனக்கண்ணாடி தெளிவாகி ஞானக்கண்ணாடியாகிவிடும்.

இந்த நிலையை அடையும் ஞானிகள்,

காமமாதிகள் வந்தாலும்
  கணத்திலே போம், மனத்தில் பற்றார்,
தாமரை இலைத் தண்ணீர்போல்
  ஜகத்தொடும் கூடிவாழ்வார்,
பாமரர் போல்காணப்பார்,
  பண்டிதத் திறமைகாட்டார்,
ஊமரும் ஆவார், உள்ளத்(து)
  உவகையார் ஜீவன் முக்தர்

[ஊமர்—ஊமைபோல் பேசாமலிருப்பவர்.]

என்ற தனிப் பெருநிலையை அடைந்து, இந்த ஜன்மத்திலேயே விடுதலை பெறக்கூடுமென்பது அறிஞர் கொள்கை.

ஞானிகள் ஞான பண்டிதர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ள மாட்டார்களாம், ஞானக் குழந்தைகளாக இருப்பார்களாம். கற்ற கல்வியையெல்லாம், அடைந்த அனுபவங்களையெல்லாம், வண்ணான்-கழுதை அழுக்கு மூட்டை சுமப்பதுபோலச் சுமந்து திரியமாட்டார்களாம். செருக்கால், கவலையால், கள்ள நினைவுகளால் அழுக்குப் படாத குழந்தையுள்ளத்துடன் தாமரை இலையிலுள்ள தண்ணீர்த் துளிபோல் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து வருவார்களாம். பேச்சுக்கலையைப்போல் பேசாத கலையிலும் வல்லவர்கள். உள்ளத்திலிருந்து ஊறிக்கொண்டேயிருக்கும் உவகை இவர்களுடைய முகத்திலே பிரதிபலிக்கும். காமம் முதலிய உணர்ச்சிகளும் இவர்கள் உள்ளங்களிலே கணத்தில் மாய்ந்து "ஞானக்காதல், பக்திக்காதல்" என்ற வேறு காமங்களாக மாறிப் பிறக்கும்.

இத்தகைய ஜீவன்முக்த நிலையை அடையக்கூடிய யோகத்தைக் கண்ணன் கீதையில் உபதேசிக்கிறான். ஞானத்தெளிவிலே நிலை பெற்றுச் செய்யும் செயல்களெல்லாம் நல்ல செயல்கள் என்பதும், அந்தச் செயல்களின் திறமை யோகம் என்பதும், அத்தகைய யோகி ஜீவன்முக்தன் ஆவான் என்பதும் கீதையின் கருத்து.

* * * *

யோகியும் கர்மம் செய்கிறான், ஜீவன்முக்தனும் கர்மம் செய்கிறான். "எவனும் ஒரு கணமேனும் செயல் இன்றி இருத்தல் இயலாது" என்பதைக் கீதை ஒப்புக்கொள்ளுகிறது. "செய்கையின் பயனிலே பற்றுதல் இன்றித் தான் செய்ய வேண்டியதை எவன் செய்கிறானோ அவனே யோகி" என்கிறது கீதை.

உடலினால் செய்யும் செயல்தான் செயல் என்பதும் இல்லை. உள்ளத்தால் செய்யும் படிப்பு மனனம், ஜபம் எல்லாம் செயல்கள்தான். செயலுக்கு நம்மைத் தகுதியாக்குகிறது யோகம். "யோகத்தில் நின்று

தார்மிக ஏணியில் படிப்படியாக வேத காலந்தொட்டு இந்தக் காந்தியுகம்வரை நமது தர்மம் எப்படி வளர்ந்து வந்துள்ளது என்பதைக் கலாநிதி பி. ஸ்ரீ. தமது பிரத்யேகச் சிறப்பு வாய்ந்த முறையில் வெளியிடும் தொடரில் 4-வது வியாசம் இது. இது சம்பந்தமாகக் கவிச்சக்ரவர்த்தி பாரதியாரின் வசன நூல்களையும், கவியோகி சுத்தானந்த பாரதியாரின் "உபநிஷத்து ரகஸியம்", "கீதாயோகம்" (2 பாகங்கள்) முதலிய கிரந்தங்களையும் படித்துப் பயன் பெறுங்கள.

—வை. மு. ஸ்ரீ.



செயல்களைச்செய்" என்கிருன் கண்ணன். கவலைகள், துயரங்கள், பயங்கள் முதலியவற்றிலிருந்து விடுபட்டு நிற்கும் நிலை விடுதலை, முக்தி. இந்த உலகத்திலிருந்துகொண்டே, இந்த ஜன்மத்திலேயே, விடுதலை பெறலாம்.

எல்லாம் கடவுள் மயம், எல்லாச் செயல்களும் எல்லா உயிர்களும், எல்லா உருவங்களும், எல்லா நிலைமைகளும், எல்லாச் சக்திகளும் கடவுள் மயம். எனவே கவலைப்படு

வதும் அச்சமடைவதும் துயரமடைவதும் அறியாமை. ஈச்வரனையே சரணமாக அடைந்து, செயலையே தவமாகக்கொண்டு ஜீவன் முக்தி பெறவேண்டும் என்பது கீதையின் உபதேசம்.

கடவுள் உள்ளத்தில் இருக்கிறான்; உள்ளத்துக்குள்ளேயிருந்து எல்லாவற்றையும் ஆட்டிவைக்கிறான். "ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே?" என்றார் ஒரு தமிழ்த்தொண்டர். இந்த உண்மையை உணர்ந்து, அவனையே சரணமாக அடைந்து, அவனுடைய ஆக்ஞையான கடமைகளைக் கைங்கரியமாகச் செய்ய வேண்டும்; எல்லாச் செயல்களையும் அவனுக்கே சமர்ப்பித்துப் பற்று நீங்கித் தாமரை இலைத் தண்ணீர் போல ஜகத்துடன் வாழவேண்டும்—என்பது கீதா சாஸ்திரத்தின் தேர்ந்த கொள்கை. இதைச் சரணகதி தர்மம் என்றும் சொல்வதுண்டு.

* * * *

இப்படி ஈச்வர சரணாகதி செய்து கைங்கர்ய ரூபமான செயல்களை லோகோபகாரமாகச் செய்யவேண்டுமென்று கீதை வற்புறுத்துகிறது. இப்படிச் செயலைச் செம்மையாக,—அதாவது யோகமாகவும், தவமாகவும், உலகப்பணியாகவும்—செய்து, விடுதலை பெறுவதற்கு இன்றியமையாத அடிப்படை—வேதாந்தத்தையும் கீதாசாரியன் நன்கு வலியுறுத்துகிறான்.

அதாவது உலகமெல்லாம் ஓர் உயிர். அது பகவானுடைய உயிர். அந்த உயிர்கள் உலகங்களெல்லாம் நூலில் கோக்கப்பட்ட மணிகள் போல் சார்ந்திருக்கின்றன. இதன் பொருள் என்ன, பயன் என்ன? நம்முடைய ஹிருதயத்தில் அந்தர்யாமியாக இருந்து நம்மை ஆட்டி வைக்கும் புருஷோத்தமனே மற்ற ஹிருதயங்களிலும் இயற்கையிலும் வீற்றிருந்து அருளைப் பொழிந்து கொண்டிருக்கிறான் உலகமெங்கும். ஆ, என்ன மகத்தான உண்மை!

* * * *

ஐயந்திரிபிற்கு இடமில்லாமல் இந்த உண்மையை உணர்ந்து கொண்டால், இதுவே ஒழுக்கத்தின் உறுதியான அடிப்படையாக அமைந்துவிடும். ஒருவனை ஒருவன் ஏமாற்றமுடியாது. பகைத்துக் கொள்ளவும் முடியாது. பகைவரைப் பகைப்பவன்கூடத் தனக்கு ஆதாரத் தலைவனும் தன் ஹிருதய கமலவாஸியுமாகிய புருஷோத்தமனைப் பகைக்கிறவன் ஆகிறான். ஏன்? தனக்கே நண்பன் இல்லை அவன்! பிறரை வஞ்சிப்பவன் தன்னையே வஞ்சித்துக்கொள்ளுகிறான். வஞ்சிக்கிறவன் வஞ்சிக்கப்படுவான்,-கடிக்கிறவன் கடிக்கப்படுவான்!

இத்தகைய ஸௌந்தர்ய, பயங்கர உண்மையை உணர்ந்துகொண்டால்,—இந்த உண்மைப்படியே ஒழுகிவந்தால்.—ஸர்வஜன சகோதர தர்மம் இந்த உலகத்திலே நிலை பெற்றுவரும். "அனைத்துயிரும் ஒன்றே!" என்று உணர்ந்து ஒழுகுகிறவன், உண்மையான தபஸ்வி, உத்தமயோகி. இவனுடைய வாழ்வு அமிர்த வாழ்வு.

இந்த வாழ்விற்கு வழிகாட்டும் கீதாசாஸ்திரத்தை யோகசாஸ்திரம் என்றும் சொல்லலாம்; கர்மயோக சாஸ்திரம் என்றும் சொல்லலாம்; பக்திநூல் என்றும் சொல்லலாம்; ஞானநூல் என்றும் சொல்லலாம்.

---

சுலபமாகக் கீதையின் ஸாரத்தை அறிய, வாசகர்களுக்கு ராஜாஜி எழுதிய கண்ணன் காட்டிய வழி, சுத்தானந்தர் எழுதிய SRI KRISHNA AND HIS GOSPEL என்ற அரிய எளிய நூல்களை நினைப்பூட்டுகிறோம்.

—வை. மு. ஸ்ரீ.

ஸ்ரீமான் G. ரங்கசாமி ஐயங்கார் M. A. M. L.

# ஹரித்வார யாத்திரை

"அண்டகோளகைப் புறத்ததாய்
அகிலமன்றளந்த
புண்டரீகமென்பதத்திடைப்
பிறந்து, பூமகனூர்
கொண்ட தீர்த்தமாய், அரன்
கொளப்பகீரதன் கொணர
மண்டலத்து வந்தடைந்த தீம்
மாநதி மைந்த!"

[கம்பராமாயணம்]

என்று விச்வாமித்திர மகரிஷி மிதிலைக்குப்போகும்போது ராமபிரானுக்குக்கங்கையை காட்டிச்சொல்லியது ஞாபகம் வந்தது எனக்கு. அன்று அக்டோபர்மாதம் 5-ம் தேதி நானும் எனது சிநேகிதர்களும், ஸிநேகிதிகளும் ஹரித்வார்யாத்திரை புறப்பட்டோம். புறப்பட்டதிலிருந்து "கங்காமாயி" இந்திய நதிகளுக்கு தாயெனப்படும் கங்கையை எப்போது காண்போம்? இமயத்திலிருந்து இறங்கும் கங்கை அழகை எப்போது கண்டுகளிப்போம்? ஸகர புத்திரர்கள் அறுபதினாயிரம்பேரின் சாம்பலின்மீது ப்ரவஹித்து தனது மங்களமான நீரினால் ஸ்வர்க்கத்திற்கு அடையச் செய்த நீரில் எப்போது நீராடுவோம் என்றும் இந்த அவாவே எங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது.

டில்லியிலிருந்து நாங்கள் பிரயாணத்தைத் தொடங்கினோம். டேராடூன் எக்ஸ்பிரஸில் ஏறினோம். காலை 6-மணிக்கு ஹரித்வார ஸ்டேஷனை அடைந்தோம். ஸ்டேஷனிலிருந்து அரை மைல் இருக்கிறது ஹரித்வார க்ஷேத்திரம். ஸ்டேஷனில் டாங்காக்கள் அதிகம். ஒரு டாங்காவில் ஏறி சென்னை ஆள்வார் செட்டி வம்சத்தார் கட்டிவைத்திருக்கும் மதருஸ் சத்திரத்திற்குச் சென்றிறங்கினோம்.

ஹரித்வாரத்திலிருக்கும் சத்திரங்களில் மிகவும் பிரதமையானது மதருஸ் சத்திரம். தென்னாட்டாருக்கு மிகவும் சௌகரியமாய் உள்ளது. சத்திரத்திற்குள்ளேயே ஒரு பாகத்தில் கங்கைநதிக் கால்வாயின் ஒரு பாகத்தை விட்டு மிகவும் அழகாகக் கட்டியிருக்கிறார்கள். தங்குவதற்கு மேலே ஒரு ரூம் கொடுக்கப்பட்டது. அங்கிருந்து பார்த்தால் கங்கைநதி சலசலவென்று ஓடும் காட்சி மிகவும் ரமணீயமானது.

ஹரித்வாரம் புனிதமெனப்பட்ட ஏழு நகரங்களில் ஒன்றான மாயாபுரி என்னும் க்ஷேத்திரம். இது விஷ்ணுவின் இருதய ஸ்தானமெனப்பட்டிருக்கிறது. கங்கை இமாலயத்திலிருந்து கீழிறங்கியதும் காணப்படும் முதல் பட்டணம் இதுவேயாகும். இதற்கு கனகல தீர்த்தமென்றும் சொல்லப்படும்.

"ஹரத்வாரே குசாவர்த்தே
பில்வகே நீலபர்வதே!
ஸ்நாத்வா கனகலே தீர்த்தே
புனர்ஜன்ம நிவர்த்யதே!"

என்னும் ச்லோகப்படி ஹரித்வார தீர்த்தத்தில் நீராடுபவருக்கு மறுபிறப்பில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது, காளிதாஸன் இதைத்தான் 'மேகதூத'மென்ற காவியத்தில் வருணித்துள்ளான்,

காலையில் கதிரவன் தனது கிரணங்களுடன் உதிக்கும்போது கண்ட காக்ஷி விவரிக்கமுடியாதது. அநுபவிப்பவர்களுக்கே தெரியும், கதிரவனின் ஒளி ஹிமய மலைமேல் படப்பட பனிமலை உருக ஆரம்பிக்க ஹிமாலயம்பனிமலை என்பதுமறந்து வெள்ளிமலையோ என்று நமக்கு

சந்தேகம் ஏற்படும், அக்காட்சியைக் கண்டு சில நேரம் களித்துப்பின் ஹரிபாதகாட்டில் நீராடத் தடங்கினேம். இங்கு ஜலம் மார்பளவுதான் ஆழம். நதியின் வேகமும் அதிகமில்லை. ஒருவருக்கொருவர் கையை பிடித்துக்கொண்டு ஸ்நானம் செய்யலாம். நீந்தவும் நீந்தலாம். இவ்விடத்தில் எப்படிப்பட்ட கவலை கொண்டவர்களாய் இருந்தபோதிலும் மன அமைதி ஏற்படும். நீரில் இறங்கி நீராடிக் கரை போகும்போது ஏதோ மின்சாரசக்தி ஒன்று தேகம் முழுவதும் பரவியதுபோல் எனக்கொரு உணர்ச்சி ஏற்பட்டது. அதேமாதிரி எனது ஸ்நேகிதர்களும் சொன்னர்கள். அப்போதுதான் கங்கா ஜலம் மஹிமை உள்ளதென்று நமது முன்னேர்கள் சொல்லி இருப்பது சரி என்பது எனக்கு நிதர்சனமாகத் தெரிந்தது.

நீராடியதின்பிறகு மாலையில் கங்கா பூஜையின்போது வந்து காட்சிகண்டு மறுபடியும் நீராடுவதாகத் தீர்மானம் செய்து சத்திரத்திற்கு வந்து ஆகாரத்தை முடித்துக்கொண்டு மாலையில் கங்கை ப்ரவஹிக்கும் காட்சியைக் காணப் புறப்பட்டோம். ஒரு கார் ஏற்பாடு செய்துகொண்டு மலைமேல் உள்ள 'ரிஷிகேசம்' என்னும் க்ஷேத்திரத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். இது ஹரித்வாரத்திற்கு வடக்கில் 17 மைலில் இருக்கிறது. அங்கு கங்கை மிகவும் சிறிது. காவேரியில் 4-ல் 1 பங்குகூட இருக்காது. ஆனல் ஜலவேகமோ சொல்லி முடியாது. அதிலிருந்து எவ்வளவு மின்சார சக்தி வேண்டுமாகிலும் தயார்செய்யலாம். அங்கு நீராடி "லெக்ஷ்மண ஜூலா" என்னும் லெக்ஷ்மணன் தவம் செய்ததாக சொல்லப்படும் கட்டத்திற்குப் போனேம். இது ரிஷிகேசத்திலிருந்து 3 மைலில் இருக்கிறது. இங்கு லக்ஷ்மணரின் கோவில் உள்ளது. இதற்கு ஓரமாக கங்கை ஓடுகிறது. இங்கும் கங்கை அகலமில்லை. ஆனல் ஆழம் கண்டு பிடிக்கமுடியாது என்று சொல்லுகிருர்கள். இங்கு கங்கையின் வேகமே தெரியாது. குளத்தில் ஜலம் தங்கியிருப்பதுபோல் எங்களுக்கு தோன்றிற்று. இங்கு கங்கையைத் தாண்ட ஒரு ஊஞ்சல்பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இது தொங்கும் பாலம். கீழிலிருந்து கட்டைகட்டி சாதாரண பாலத்தைப்போல் கட்டப்பட்டதல்ல. அதை தாண்டி சில தூரம் நடந்தால் ரமணீயமான செடி கொடிகளடங்கிய தபோவனம், "ஸ்வர்க்காச்ரமம்" இங்கே பல சாதுக்களும், சந்நியாசிகளும் நிஷ்டையில் இருக்கிருர்கள். அங்கிருந்து கங்கையின் மறு கரையை அடைய ஓடங்கள் இருக்கின்றன. தபோவனத்தையும் அங்குள்ள நிச்சப்தமான வாழ்க்கையையும் காண்பவர்களுக்கு அதைவிட்டுவர மனம் வராது. அங்கிருந்து ஓடங்களில் கங்கையைத்தாண்டி அக்கரை வரலாம். அம்மாதிரி கங்கையை ஓடத்தில் கடந்து அக்கரை சேர்ந்து, காரில் ஏறி ஹரித்வாரத்திற்கு மாலை ஆரத்திக் காட்சிக்கு வந்துசேர்ந்தோம்.

மாலை 7மணிக்கெல்லாம் ஆரத்தியும் பஜனையும் ப்ரம்மகுண்டக் கரையில் ஆரம்பிக்கிறது. சூரிய அஸ்தமன சமயத்தில் ஸ்னனம், ஆரத்திக்காக ஜனங்கள் கூடுகிருர்கள். அப்போது பலநாட்டு ஜனங்களையும் பார்க்கலாம். கங்கா பூஜைக்கு கோவில் குருக்கள் ஆரத்தியை ஏற்றியவுடன் மற்றைய பக்தர்களும் ரோஜாப்பூக்கள்கொண்ட தொன்னைகளை வத்தியுடன் வாங்கி வாத்தியங்கள் முழங்க வேதங்கள்

கோஷ்டியாய் கோஷிக்க, ஆரத்தி முடிந்தவுடன் எல்லோரும் தத்தம் ஆரத்திகளைப் பூவுடன் கங்கையில் மிதக்கவிடுவார்கள். இப்படி விடப் பட்ட ஆரத்திகள் கங்கை எங்கும் பரவி மிதந்துகொண்டு போகும் காட்சியை என்னென்று வர்ணிப் பது. வால்மீகி ராமாயணத்தில் ராம பிரானுக்கு விச்வாமித்திரர் கங்கை யின் புகழையும் வரலாற்றையும் விவரிக்கும்போது,"அப்ரதிமதே ஜலா கங்கா" 'ஒப்பில்லாத ஒளியுடைய கங்கை' என்றும் "ஸதா அஸிதெ ஷீலே" எப்பொழுதும் புகழ் படைத்த ஜலம் என்றும், "ஸரிதாம் ச்ரேஷ்டா ஸர்வ பாப ப்ரணாஸினீ கங்கா" நதிகளில் சிறந்து எல்லா பாபங்களையும் போக்கடிக்கிற கங்கை என்றும், "நிர்மலம் கதகல்மறம்" தெளிவான தாகவும், பாபத்தைப் போக்கடிப்ப தாகவும் உள்ள கங்கா என்றும் வர்ணிப்பது சரியே. கங்கை ஜலத் திற்கு சுத்தம் செய்யும் குணம் இருக்கிறது என்று தற்கால விக் ஞான சாஸ்திரிகளும் சோதித்துப் பார்த்து ஒப்புக்கொண்டிருக்கின் றனர்.

ஆக்ராவில் ஆங்கிலேய ரஸாயன சாஸ்திரி ஒருவர் கங்கா ஜலத்தின் குணத்தை பரிசோதிப்பதற்கு பிர யோகித்த சில வழிகளைப்பற்றி (MarkTwain) மார்க்ட்வைன்என்ப வர் "More Tramps Abroad" என்னும் புத்தகத்தில் எழுதி யிருக்கிறார். அதாவது:—


அந்த விஞ்ஞானசாஸ்திரி கங்கை ஜலத்தை எடுத்து அதில் பல காலரா கிருமிகளைப் போட்டு வைத் தார். அந்த கிருமிகள் எல்லாம் 6 மணி நேரத்திற்குள் ஸாம்பிளுக் குக்கூட ஒன்றும் இல்லாமல் மடிந் தன. சாதாரண ஜலத்தை எடுத்து அதில் கொஞ்சம் காலரா கிருமிகளை போட்டுப்பார்த்தார். 6 மணிக்குள் அதில் அவைகள்கோடிக்கணக்கான கிருமிகளாக அதிகரித்தனவாம்.

"பல நூற்றாண்டுகளாக ஹிந்துக் களுக்கு கங்கையின் ஜலம் சுத்த மானது; எந்த கெட்ட வஸ்துவும் அதை அசுத்தப்படுத்தாது. அந்த ஜலம் பட்டவர்கள் எல்லோரும் சுத்தமாவார்கள் என்னும் முழு நம் பிக்கை இருக்கிறது. முன்னர் ஹிந் துக்களை இதற்காகக் கண்டு சிரித் தோம்.இப்போது அதை நாம் திருத் திக்கொள்ள வேண்டும். எப்படி அந்த காலத்தில் இந்த ஜலத்தின் ரகசியத்தைக் கண்டுபிடித்தார்கள். அப்போது அவர்களில் கிருமி விஞ் ஞானிகளிருந்தார்களா? நமக்குத் தெரியாது! நமக்குத் தெரிந்தது நாம் நாகரிக வாழ்க்கை ஆரம் பிக்கும் முன்னரே நாகரிக வாழ்க் கை அவர்களிடம் இருந்திருக்கிறது என்பதே" என்று ஆச்சரியப்படு கிறார் பெரியார் மார்க் ட்வைன்.

ஆகவே, கங்கையை காண்பதி லும்மனமும்ஸ்நானத்தினால் உடலும் சுத்தமாகிறதுஎன்றால் கங்கை உள் வெளி இரண்டையும் சுத்தி செய் யும் தன்மையுடையதல்லவா? இதன் அனுபவம் அனுபவித்தால் தான் தெரியும். ஹரித்வாரயாத்தி ரையில் எனக்கும் எனது ஸ்நேகித ஸ்நேகிதிகளுக்கும் ஏற்பட்ட இந்த அனுபவத்தை என்றும் மறக்க முடியாது.

---

குறிப்பு:—மோகினி பொங்கல் மலருக்கென்றே எழுதப்பட்ட இந்த யாத்திரைக் கட்டுரை மிகவும் தாமதித்துக்கிடைத்ததால் அதில் வெளியிட இயலவில்லை. மலர் கிடைக்காத அன்பர்களுக்குக்கூட இப்போது ஹரித்வார மகிமை தெரியலாயிற்று.




## பெண்களுக்கு சுயநலமற்றதும் கௌரவப்படுத்தக் கூடியதுமான சுயேச்சை வாழ்க்கை

ஒரு பெண் சோம்பேறியாய் வீட்டோடு இருப்பதை சமூகம் விரும்பவில்லை. தற்கால புத்திசாலி பெண்ணான உனக்கு இந்திய ஆக்ஸிலியரி நர்ஸிங் ஸர்வீஸில், மனதை ஆகர்ஷிக்கக் கூடியதும் சுவாரஸ்யமானதும் உபயோகமுள்ளதுமான வேலைகள் இருக்கின்றன. "கருணையின் தேவ தூதர்கள்" அடையாளமான வெண்மை நிற குல்லாயும் எப்ரனையும்விட எந்த உடுப்பும் அதிக கௌரவத்தை அனுபவிக்கவில்லை.

ஏ. என். எஸ்ஸில் பெரும் முதல்தரமான பயிற்சி யுத்தத்திற்குப் பிறகு உங்களுக்கு சிவில் நர்ஸிங்கில் வெற்றிகரமான வாழ்க்கையை அளிக்க சுலபமாக இருக்கும். உங்களுக்கு வேறு யோசனைகள் இருந்தால், நீங்கள் பயிற்சி அடைந்த வைத்திய அறிவு உங்கள் குடும்ப வாழ்க்கை அல்லது தேசத்தின் சமூக சேவைக்கு மதிப்பு சொல்லக்கூடாததாக இருக்கும். இந்த சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்.

தற்சமயம் ஏ. என். எஸ். சம்பளங்கள் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக பொது சேவையின் புது சம்பளங்கள். இலவச இடவசதி, சாப்பாடு, வேலையாட்களுடன் கூட மாதம் ரூ. 135 முதல் 175 வரை, அல்லது மாதம் ரூபாய் 203 முதல் 243 வரை. வேலைக்கு பிரிட்டிஷ் பிரஜை அல்லது இந்திய சமஸ்தான பிரஜையாயும் 17 முதல் 45 வயதுக்குள் இருக்கும் எந்த பெண்ணும் சேரலாம். முன் அனுபவம் தேவையில்லை. ஆனால் நர்ஸிங் அனுபவம் உள்ளவர்கள் வேலையில் உயர்ந்த கிரேடில் சேரலாம். நர்ஸுகள் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள். சாதாரணமாக, அவர்களாகவே மேல் நாட்டுக்குப்போவதாக சொன்னாலொழிய, எல்லோருக்கும் இந்தியாவிலேயே வேலைகள் கொடுக்கப்படுகின்றன.

# ஏ.என்.எஸ்

## பெண்ணிற்கு மிகவும்

### கம்பீரமான வேலை

**பூரா விவரங்களுக்கு**

—:::—

நீங்கள் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் லேடி சூபரின்டென்ட் அல்லது டைரக்டர் ஜெனரல் இந்திய மெடிகல் சர்விஸ், நியூ டில்லிக்கு நேரே எழுதுங்கள்.

AAA. 1197. A. TM.

நம் சகோதரிகளுக்கு மட்டும்

# ஸ்திரீதனம்

## சொத்து வகைகளும், உரிமைகளும்

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

அந்த அந்த பிரதேசங்களில் கையாளப்படும் முறைப்படி இந்துலாவில் ஸ்திரீதன உரிமைகள் எப்படி கூறப்பட்டிருக்கின்றன என்பதை கவனிப்போம்.

### (1) பந்துக்களிடமிருந்து :

ஒரு இந்துப் பெண்ணுக்கு அவள் கன்னிகையாகவே, மனைவியாகவோ விதந்துவாகவோ இருந்தபோது, அவளுடைய தாய் தந்தையர், தாய் வீட்டு பந்து, புருஷன், புருஷன் வீட்டு பந்து இவர்கள் பரிசாகவோ உயில் மூலமோ கொடுத்த சொத்து வகைகள் அனைத்தும் [ஸ்தாவரம்:—நிலம், வீடு முதலியன ; ஜங்கமம்:—ரொக்கம், நகை, பாத்திரங்கள்] ஸ்திரீதன சொத்து என்றும், அதில் அவளுக்கு பூரண உரிமை உண்டு என்றும் தாய பாக முறை தவிர மற்றெல்லா முறைகளும் ஒத்துக்கொள்ளுகின்றன.

ஒரு கணவனால் தன் மனைவிக்கு பரிசாகவோ உயில் மூலமோ கொடுக்கப்பட்ட ஸ்தாவர (நிலம், வீடு) சொத்தை வங்காளத்து தாய பாக முறை ஸ்த்ரீதனம் என்று ஒத்துக்கொள்ளுகிறதில்லை. ஆனபடியால் அந்த முறைப்படி மேற்படி சொத்தில் அவளுக்கு பூரண உரிமை கிடையாது. அனுபவ உரிமை யாத்திரம்தான் உண்டு.

### 2. அன்னியரிடமிருந்து

(க) ஒரு இந்து கன்னிகைக்கு அன்னியரிடமிருந்து பரிசாகவோ உயில்மூலமோ விவாக சமயத்திலோ எவ்வகை சொத்து கிடைத்தாலும் அது அவளுடைய ஸ்திரீதனம். அவளுக்குப் பூரண உரிமை உண்டு என்று எல்லா முறைகளும் ஒத்துக்கொள்ளுகின்றன,

(கா) ஒரு மனைவிக்கு அன்னியரிடமிருந்து பரிசாகவோ, உயில் மூலமோ வந்த ஸ்திரீதன சொத்துவகைகளில் அவளுக்கு பூரண உரிமை உண்டு என்பதை பம்பாய்,பனாரிஸ், மதராஸ் இந்த மாகாண முறைகள் ஒத்துக்கொள்ளுகின்றன. ஆனால் வங்காளத்தைச் சேர்ந்த தாய பாக முறையும் மிதிலை முறையும் அதை ஸ்திரீதனம் என்று ஒத்துக்கொள்ளவில்லை. தாய பாக முறைப்படி கணவனுக்கு அந்த சொத்தில் அதிகாரம் உண்டு. எனினும் கணவன் காலத்திற்குப் பிறகு, அதில் பூரண உரிமை விதந்துவுக்கு ஏற்பட்டுவிடுகிறது,

(கி) ஒரு ஹிந்து விதந்துவுக்கு அன்னியர்களால் கொடுக்கப்பட்ட சொத்து அவளுடைய ஸ்திரீதனம் என்றும் அதில் அவளுக்கு பூரண உரிமை உண்டு என்றும் எல்லா முறைகளும் சொல்லுகின்றன.

**3. ஜீவனம்சத்திற்கு** (விருத்தி) ஈடாக ஒரு இந்துப் பெண்ணுக்கு கொடுக்கப்படும் ரொக்கமோ, அல்லது ஸ்தாவர சொத்தோ அவளுடைய ஸ்திரீதன சொத்து என்றும் அதில் அவளுக்கு பூரண உரிமையுண்டு என்றும் எல்லா முறைகளும் கூறுகின்றன.

## 4 சொந்த சம்பாத்தியம்

(க) ஒரு இந்துப் பெண் கன்னிகையாகவோ விதந்துவாகவோ இருக்கும் நிலையில் தன் சொந்த முயற்சியினாலும், இயந்திரக் கலையினாலும் சம்பாதிக்கும் சொத்து அவளுடைய ஸ்திரீதனம் என்றும் அதில் அவளுக்குப் பூரண உரிமையுண்டு என்றும் எல்லா முறைகளும் சொல்லுகின்றன.

(கா) ஒரு இந்து மனைவி தன் சொந்த முயற்சியினாலும், இயந்திரக் கலையினாலும் சம்பாதிக்கும் சொத்து, பூரண உரிமையுடைய ஸ்திரீதனம் என்று பம்பாய், பனாரிஸ், மதருஸ் மாகாண முறைகள் கூறுகின்றன. ஆனால் மிதிலை தாயபாக முறைகள் ஷ சொத்தை கணவன் ஜீவிய காலத்தில் பூரண உரிமையுடைய ஸ்திரீதனம் இல்லை என்று சொல்லுகின்றன. விதந்துவானபின் அதில் பூரண உரிமை உண்டு என்று தாயபாகம் ஒத்துக் கொள்ளுகிறது.

## 5. மற்ற வகையில் வந்த ஸ்திரீதனம்

உடன்படிக்கைப்படி கிடைத்தது.

தானாக எடுத்துக்கொண்டது.

ஸ்திரீதன சொத்தைக்கொண்டு வாங்கியது.

இவை மூன்றும் பூரண உரிமை உடைய ஸ்திரீதன சொத்துக்கள் என்று எல்லா முறைகளும் கூறுகின்றன.

ஒரு இந்துப் பெண்ணுக்கு அவளுடைய ஸ்திரீதன சொத்து விஷயத்தில் உரிமைகள் எவ்வாறு அமைந்து இருக்கின்றன என்பதை ஆராய்வோம்.

மகரிஷி காத்யாயனர், நாரதர் இவர்களின் அபிப்பிராயம் கீழ் வருமாறு இருக்கிறது.

1. விவாகத்திற்கு முன்போ பின்போ, தகப்பன் வீட்டிலோ, கணவன் வீட்டிலோ, பெற்றோரிடமிருந்தோ ஒரு இந்துப்பெண்ணுக்குக்கிடைக்கும் பொருள்கள்யாவும், (ரொக்கம், நிலம், வீடு.) அனைத்தும் அன்பினால் பரிசாக அளிக்கப்பட்டவையானால், அவைகள் அவளுடைய சௌதாக்கியம்—ஸ்திரீதன சொத்து எனப்படும். அவளுக்கு அதில் எப்பொழுதும் பூரண உரிமையுண்டு. அதை அவள் விற்கவோ, பிறருக்கு கொடுக்கவோ, எழுதிவைக்கவோ கூடும். தகப்பன், சகோதரன், கணவன், புத்திரன் எவருக்கும் அந்த ஸ்திரீதனச் சொத்தை தொடவோ, உபயோகப் படுத்தவோ, பிறருக்கு கொடுக்கவோ; அதிகாரம் இல்லை.

2. தன் சொந்த முயற்சியினால், இயந்திரக் கலையினால் அல்லது அன்னியரிடம் இருந்து பெற்ற சொத்து வகைகள் கணவனின் அதிகாரத்திற்கு உட்பட்டவை.

3. தன் கணவனிடமிருந்து ஒரு மனைவிக்கு வந்த ஜங்கம சொத்தை அவன் உயிருள்ளவரை மனைவி, சிக்கனமாகக் காப்பாற்றவேணும். அவன் காலத்திற்குப் பிறகு அவள் அதை இஷ்டம்போல விநியோகப் படுத்தலாம்.

கணவனால் கொடுக்கப்பட்ட சொத்தை—வீடு, நிலம் தவிர மற்ற வைகளை ஒரு விதந்து இஷ்டப்படி விநியோகப்படுத்தலாம்.

இந்த மூன்று விதிகளை ஆராய்ந்தோமானால், ஸ்திரீதன சொத்து உரிமைகளை, பின்னும் தெளிவு படுத்த கீழ்வரும் விதம் மூன்று வகையாக பிரித்துக் கூறவேண்டும்.

முதல்வகை:—கன்னிகையாக இருக்கையில், ஒரு இந்துப் பெண், ஸ்திரீதன சொத்துவகை அனைத்தை



அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப் பாஞ்ச ஜன்யமும் பல்லாண்டே.

பக்தர்களும் மன்னரும் பின் தொடர, பெரியாழ்வார் யானைமேல் வெற்றி பவனி வருகிறார். பகவான் அவருக்குக் கருடாரூடராக சேவை சாதித்து அருளுகிறார். யானை மணிகளைத் தாளமாகக்கொண்டு பக்தமணி பல்லாண்டு பாடுகிறார்.

( 15-ம் பக்கம் தொடர்ச்சி )

யும், தன் இஷ்டப்படி வினியோகிக்கலாம்.

2 விவாகமான பெண், செளதாக்கியம் எனப்படுகிற ஸ்த்ரீதன சொத்து வகையை மாத்திரம் தன் இஷ்டப்படி வினியோகிக்கலாம்.

3. விதந்துவாக இருக்கும் இந்துப் பெண், கணவன் கொடுத்த ஜங்கம சொத்து உள்பட எல்லா வகை ஸ்திரீதன சொத்துகளையும் தன் இஷ்டப்படி வினியோகப்படுத்தலாம். ஆனால் கணவனால் கொடுக்கப்பட்ட ஸ்தாவர சொத்து (வீடு நிலம்) இவற்றை இஷ்டப்படி வினியோகிக்கும் உரிமை இல்லை.

ஸ்திரீதன சொத்து உரிமைகள் இவ்வாறாக அன்றினல் கணவனாலோ, பெற்றோராலோ கொடுக்கப்பட்ட சொத்துவகைகளில், (செளதாக்கியம் முதலின) பூரண உரிமையுடன் கூடிய பரிசுவகைகளா? அனுபவ உரிமை மாத்திரம் உடைய பரிசு வகைகளா? என்பதை ஆராய வேண்டியது அவசியம். ஒரு பெற்றோர், தன் பெண்ணுக்கு அனுபவ உரிமை மாத்திரம் உடைய பரிசாக சில சொத்து வகைகளை (வீடு நிலம்) கொடுக்கக்கூடும். அவள் காலத்திற்கு பிறகு அவை இன்னாரைச் சேர வேண்டியது என்று எழுதிவைக்கக் கூடும். அப்படிப்பட்ட நிபந்தனையுடன் கொடுத்தசொத்து செளதாக்கிய ஸ்த்ரீதனமாக இருந்தாலும், ஒரு ஸ்திரீ அதை தன் இஷ்டப்படி வினியோகிக்கமுடியாது. தன்காலம் வரை அனுபவிக்கும் உரிமைமட்டும் தான் உண்டு. அந்த சொத்தில் அவளுக்கு, அதேபோல கணவன், அன்பு பரிசாக மனைவிக்கு சில சொத்துக்களைக் கொடுக்கும்போது, ''இதில் இவளுக்கு அனுபவ உரிமை மாத்திரம்தான் உண்டு. பூரண உரிமை கிடையாது'' என்று சொல்லிக்கொடுத்தால், அப்போது அவள் அந்த ஸ்திரீதனச் சொத்தை இஷ்டப்படிவினியோகிக்கக்கூடாது; அவள் காலத்திற்குப் பிறகு அந்தச் சொத்து கணவனால் குறிப்பிடப்பட்ட வார்சுதாரருக்குப்போய்ச் சேரும். (தொடரும்)

---

## புதிய முயற்சியில் பெரிய வெற்றி

தமிழ்ப்புத்தக உலகிலேயே ஒரு புதிய முயற்சி தாரண வருஷ ஆரம்பத்தில் ''நந்தவனம்'' என்ற மகுடத்துடன் தொடங்கியது. அதுவரை, முற்றிலும் ஸ்த்ரீ எழுத்தாளர்களின் விஷயதானங்களைமட்டுமே கொண்டு புத்தகங்கள் வெளிவந்ததேயில்லை. நந்தவனத்தின் வெற்றி தமிழ்ப்பெண் சக்தியின் மகத்தான வெற்றி. 6 ருதுமலர்கள் மூலம் 100 ஸ்த்ரீ எழுத்தாளிகளின் புத்தப்புதிய கற்பனைலங்காரங்களைத் தமிழுலகிற்குச் சமர்ப்பிக்கும் பெரும் பாக்கியம் மோகினிக்கே கிடைத்தது.

தாரண ருதுமலர் தொகுதி முற்றும் சேர்ந்து முழு புத்தகமாக கிளேஸ் பதிப்பு மட்டும் வெளியிடுகிறோம். சுமார் 700 பக்கங்கள் கொண்ட விஷய மேன்மை பொருந்திய இந்த நூலில் சுமார் 100 படங்கள் (பல கலர்களில்) வெளியாகி, அழகுக்கு அழகு செய்து, ஸ்வர்ணத்தில் வைரம் பதித்தது போன்று சோபிக்கின்றன. தனித்தனியே ருதுமலர்களை வாங்காதவர்கள் அதே விலையில் அதாவது ரு. 9/—க்கே இந்த அரிய நூலைப் பெறலாம். மனதுக்கு ஆனந்தம். கண்களுக்குக் கவர்ச்சி. கற்பனைக்குத் தூண்டுகோல். உடனே முந்துங்கள்.

# அணுஜீவ உலகமும், மானிடவாழ்க்கையும்

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M. B., BS. D. T. M.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### ராபர்ட் காச்

இவர் 1843-ஆம் வருஷம் பிறந்தார். இவர் ஒரு ஜெர்மன் டாக்டர். வைத்திய சாஸ்திரம் கற்றுப் பரிசு பெற்றார். வைத்தியத் தொழிலில் இறங்கினார்: என்றாலும் இவருக்கு அவ்வளவு பிடித்தமாயில்லை. தொத்து நோய்களுக்குக் காரணமான அணு ஜீவன்களைப் பற்றி ஆராய்வதிலேயே இவருக்கு விசேஷித்த விருப்பம். கி. பி. 1876-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 30-ஆம்தேதி இவருடைய பெயர் முதல் தடவையாக வெளிப்பட்டது. இதன் பிறகு வர வரப் பிரக்கியாதி பெற்று, இவரின்றி அணு ஜீவ விஞ்ஞானமே கிடையாது என்று சொல்லும்படி அவ்வளவு மகோன்னத நிலை அடைந்து அழியாப்புகழும் பெற்றார்.

ஆந்த்ராக்ஸ் (Anthrax) என்னும் ஒருவகையான கொடிய நோய் ஆடு மாடுகளுக்குள்ளே வெகுவாகப் பரவி வந்தது. இந்த நோயினால் இறந்த ஆடு மாடுகளின் இரத்தத்தில் கம்பி போன்ற ஒருவகையான அணு ஜீவன்களை அணுதர்சினியின் மூலமாகப் பார்க்கலாம்.

இந்த அணுஜீவன்களே ஆந்த்ராக்ஸ் நோய்க்குக் காரணம் என்று ஏற்கெனவே டவெயின் (Davine) என்பவர் கண்டிருந்தார். ஆந்த்ராக்ஸ் அணு ஜீவன்களிலே மற்ற சாதாரண அணுஜீவன்களில் காணப்படாத விசேஷ குணம் ஒன்று உண்டு. டின்டல்முறையைப் பற்றிச் சொன்ன இடத்திலே அணுஜீவன்கள் அணுபீஜங்களில்இருந்து தோன்றின என்று பார்த்தோம். இந்த அணு பீஜங்களை விஞ்ஞானிகள் ஸ்போர்ஸ் (Spores) என்று குறிப்பிடுகிறார்கள் என்றும் நமக்குத் தெரியும். ஆந்த்ராக்ஸ் நோய்க்குக் காரணமான அணுஜீவன்களும் அணுபீஜ வகுப்பைச் சார்ந்தவை. ஆந்த்ராக்ஸ் நோயினால் வருந்தும் பிராணிகள் உயிரோடு இருக்கும்போது, அவற்றின் இரத்தத்தை அணுதர்சியின் கீழே வைத்துப் பரிசோதித்தால், அந்த ரத்தத்தில் இந்நோய்க்குக் காரணமான அணு ஜீவன்கள் கம்பிபோன்ற நீண்ட வடிவமுடையனவாகத் தெரியும். இந்த நோயினால் வருந்தும் பிராணிகளுடைய இரத்தம் வெளிப்பட்டு எங்கேயாவது சிந்தி உலர்ந்துவிட்டால், இந்த உலர்ந்த ரத்தத்தில் உள்ள அணுஜீவன்களின் நீண்ட வடிவம் மாறி உருக்குறுகி அண்டவ்ருத்தமாகிவிடுகின்றன. இவை கொதிக்கும்வெந்நீரிலும்சாவதில்லை. உணவில்லாமல் நெடு நாட்கள் உயிரை உள்ளே அடக்கிக்கொண்டு வாழ முடியும். இந்த விஷயங்கள் அனைத்தையும், ராபர்ட் காச் ப்ரஸ்லா (Breslaw) நகரத்திலே விஞ்ஞான நிபுணர்கள் நிறைந்த ஸபையிலே பிரத்தியக்ஷப் பரிசோதனை மூலமாக ருஜுப்படுத்தினார். அன்றைக்கு ராபர்ட் காச் ஆந்த்ராக்ஸ்நோயைப்பற்றி எழுதிவைத்த வரலாறுகள் இன்றளவும் கூட்டவோ குறைக்கவோ முடியாதபடி

முடிவான விஞ்ஞானமாக விளங்குகின்றன. இந்த நோயை ஆராய்ச்சி செய்வதற்காக மிகவும் நுட்பமான சில கருவிகளும் செய்தார்.

மேலும், இந்த ஆந்த்ராக்ஸ் அணுபிஜங்களை வேறு அணுஜீவன்களோடு சம்பந்தப்படாதபடி தடுத்து, தேவையான உணவு கொடுத்துப் பயிர்ச்சிக்கருவிகளிலே வைத்து ஆராய்ந்து, இவற்றின் குணவிசேஷங்களையெல்லாம் திட்டவட்டமாகத் தெரிந்து வெளியிட்டார். இப்படியே இதர அணுஜீவன்களையும் தனித்தனியே பயிர்ச்சிக்கருவிகளில் வைத்துக் காப்பாற்றி ஒவ்வொரு அணு ஜீவனின் தனித்தனி குண விசேஷங்களையும் திட்டவட்டமாக ஆராய்ந்தறிந்தார். அணு ஜீவ ஆராய்ச்சிக்குத் தேவையான கருவிகள் உண்டுபண்ணுவதிலே இவருக்கு அசாதாரணமான திறமையும் இருந்தது இவர் தமக்கு முன்னே தோன்றிய அணு ஜீவ விஞ்ஞானிகள் செய்த ஆராய்ச்சிகளையும் கருவிகளையும், தமது ஆராய்ச்சிக்கு உத்தமமான முறையிலே பயன்படுத்திக்கொண்டார்.

லுவன்ஹுக் உண்டுபண்ணின அணுதர்சிகள் அமைப்பு முறையிலே எவ்வித முன்னேற்றமும் அடையாமல் நெடுங்காலம் இருந்து வந்தன. 19–ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஆப் (Abbe) என்பவரும் காரல்ஸைஸ் (Carl Zeiss) என்பவருமாக ஒன்று சேர்ந்து அணுதர்சியைப் பலவாறுகச் சீர்திருத்திப் புதிய அணு தர்சி ஒன்றைச் சிறந்த முறையில் அமைத்தார்கள், இவ்விருவரும்செய்த அணுதர்சி கண்ணுக்குப் புலப்படாத பொருள்களை தொள்ளாயிரம் மடங்கு பெருக்கிக்காட்டி பரிசோதிக்கப்படும் பொருள்களைக் கண்ணுக்குத் தெளிவாகப் புலப்படுத்தின. இதன் மூலமாய் பாக்டீரியாக்கள் போன்ற அணுஜீவன்களையும் வெகு ஸ்பஷ்டமாகப் பார்க்க முடிந்தது இந்த அணு தர்சி ராபர்ட் காச்சினுடைய ஆராய்ச்சிக்குப் பேருதவியாக இருந்தது.

இப்படி இருக்கையில், வேய்கர்ட் (Weigert) என்னும் சாஸ்திரியார் நோயினல் இறந்துபோனவர்களுடைய அவயவங்களை மிகவும் நுண்ணிய பாகங்களாக அறுத்து, அவற்றிற்கு வர்ணம் ஏற்றி புதிய அணுதர்சிக்குக் கீழே வைத்துப் பரிசோதித்து இறந்துபோனவர்களுடைய நோய்களைப்பற்றி ஆராய்ந்தார். இப்படி வர்ணம் ஏற்றும் முறையை ராபர்ட் காச் தெரிந்துகொண்டு அணுஜீவன்களுச்கும் வர்ணம்ஏற்றி அணுதர்சியின் கீழே வைத்துப் பார்த்தபோது, அணுஜீவன்களுடைய உடல் கூறுகள் எல்லாம் வெகு தெளிவாகத் தெரிந்தன. இன்னும் பல வேறு உபாயங்களைக் கையாடினர். அணுஜீவன்களை ஒவ்வொன்ருக அணுதர்சியின் கீழே வைத்துப் பார்ப்பதைவிட, அவை ஒவ்வொன்றையும் தனித்தனி இனமாகப் பிரித்து வளரச்செய்து, அந்த அந்த இனக்கூட்டமாக அணுதர்சியின்கீழ் வைத்துப் பார்த்தால், ஒவ்வொரு அணுஜீவ இனத்தின் குண விசேஷங்கள் வெகு ஸ்பஷ்டமாகத் தெரியும் என்றும் கண்டார்.

ஆகார் ஆகார் சீழ் பிடிப்பதற்குக் காரணமான அணுஜீவன்கள் ஒரு விதமாக வளரும். டைபாய்டு ஜுரத்திற்குக் காரணமான அணுஜீவன்களின் வளர்ச்சி மற்றொரு விதம். கப ஜுரத்திற்குக் காரணமான அணுஜீவன்களின் வளர்ச்சி இன்னொரு விதம். இந்த அணுக்கள் திரவப்பொருள்களில் இருந்தால்

நன்றாகப் பார்க்கமுடியாது. அதனாலே ஆராய்ச்சியும் அசாத்தியம். இவை வளரும் இடங்கள் கன பதார்த்தங்களாக இருக்கவேணும். ஆகையால், இந்த அணுக்களை வளர்க்கப் பலவிதமான பொருள்களைப் பிரயோகித்துப் பார்த்தார். அவற்றை வளர்க்கும் பொருள்களுக்கு இருக்கவேண்டிய ஒரு முக்கிய லக்ஷணம் ஒளி ஊடு உருவும் தன்மை. அதாவது, கண்ணாடி போல இருப்பது. இப்படிக் கண்ணாடி போன்ற பொருளிலே அணு ஜீவன்களுக்குத் தேவையான உணவுப் பொருளையும் தயாரித்துக் கொடுக்கவேண்டும். டாக்டர் காச் இதற்கெல்லாம் என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்த போது, இவருக்கு ஆராய்ச்சியிலே துணைவராக இருந்த டாக்டர் ஹெஸ் (Hess) என்பவருடைய மனைவியார் இவருக்கு ஒருயோசனை சொன்னார். அந்த அம்மையார் சொன்ன பொருள் அணு ஜீவ சாஸ்திர ஆராய்ச்சிக்குப் பேருதவியாக இருந்துவருகிறது. கடலிலே இருந்து ஆகார் ஆகார் என்னும் ஒருவகைக் கடற்காளான் கடைகளில் விற்பனையாகிறது. இதை ஒரு வகையான அல்வாச் செய்வதற்கு உபயோகிப்பார்கள். இந்த ஆகார் ஆகாரை அணு ஜீவன்கள் வளர்க்க உபயோகிக்கலாம் என்று ஹெஸ் அம்மையார் தெரிவித்தார்.

ஆகார் ஆகார் எளிதில் இளகக்கூடியது. அப்படியே வெகு சீக்கிரம் கட்டியாகும். அதில் நீர் அதிகமாக இருந்த போதிலும், கட்டியாகி விடும். அணு ஜீவன்களுக்குத் தேவையான உணவுகளையும் உப்புகளையும் நீரிலே கரைத்து ஆகார் ஆகாரோடு சேர்த்து கட்டியான பதார்த்தமாக்கி அதிலே அணுஜீவன்களை வளர்த்தால், அவை வளரும் இடம்கண்ணாடிபோல ஒளியூடுருவும் பொருளாக இருப்பதினாலே, அணு தர்சியின் உதவி இல்லாமலே ஒரு தனிப்படையான அணு ஜீவனின் குடும்ப வளர்ச்சியைத் தெளிவாகப் பார்க்கலாம். இப்படிப் பக்குவம் செய்த ஆகார் ஆகாரைக் கண்ணாடி பாத்திரங்களில், காற்றிலுள்ள இதர அணுஜீவன்கள் பாதியாத படிப் பத்திரமாக வைத்துக் காப்பாற்றலாம். பாத்திரங்களின் கண்ணாடி மூடிகளைத் திறவாமலே உள்ளே இருக்கும் ஆகார் ஆகார் மீது விதைத்திருக்கும் அணுஜீவன்கள் குடும்பக் குவியலாக வளருவதையும் தேவையானபோதெல்லாம் கவனிக்கலாம். அணுஜீவ வளர்ச்சிக்குத் தேவையான உஷ்ணத்தினால் ஆகார் ஆகாரும் இளகிவிடாது. இந்த ஆகார் ஜப்பான் தேசத்திலிருந்து பெரும்பாலும் ஏற்றுமதியானபடியால், இந்த உலக மகா யுத்தத்தில் மிகவும் அருமையான பொருளாகிவிட்டது.

இந்த அருமையான ஆகார் ஆகாரினாலும், தாமாகவே கண்டுபிடித்த பல நூதனக் கருவிகளினாலும், டாக்டர் காச் பல ஆராய்ச்சிகள் செய்தார். அணுஜீவ சாஸ்திரமும் வெகு விரைவாக முன்னேற்றமடைந்தது. அநேக தொத்துநோய்களுக்கு மூலகாரணமான அணு ஜீவன்களை மேலே சொன்ன கருவிகளின் மூலமாகவும் பிரயோகங்களின் மூலமாகவும் கண்டறிந்தார். இவர் கண்டுபிடித்தவைகளிலே, க்ஷயம், காலரா, சீழ் கட்டுதல் முதலான ரோகங்களுக்குக் காரண பூதமான அணு ஜீவன்கள் முக்கியமானவை. இந்த அணுஜீவன்களினால் உண்டாகும் நோயாளிகளுடைய உடம்பிலே, இவை வாழும்

துர்நீரிலிருந்து பிரித்துஎடுத்து, தனிக் குலமாக வளரச்செய்து, எலி, சீமைப்பெரிச்சாளி (Guineapig) போன்ற சிறிய பிராணிகளுடைய உடம்பிலே ஒவ்வொரு அணுஜீவனைக் புகுத்தி மனிதர்களுக்கு வரும் அதே நோய்கள் வரும்படிச் செய்தார். இந்தவிதமாக மனிதர்களுக்கு வரும் நோய்களுக்குக் காரணம் அணுஜீவன்களே என்று நிலை நாட்டினர்.

---

ஸ்ரீமதி ரங்கப்ரியை — குடும்ப வைத்தியம்

# 4. வெற்றிலை கஷாயம்

கமலம்:—பாட்டி! உங்களுக்கு எப்போது பார்த்தாலும் சிரமத்தைக் கொடுக்கிறேன். பெரிய உபகாரியாதலால் நீங்கள் வெகுகாலம் க்ஷேமமாய் இருக்கவேண்டும் என்று பகவானைக் கோருகிறேன். நீங்கள் சொன்ன மருந்தைக் கொடுத்ததில் மகாமாயி இறங்கி ஜலம்விட்டு குழந்தை சௌக்கிமாயிருக்கிறது. என் கைக்குழந்தைக்கு தினத்திற்கு ஐந்தாறு தடவை வயிற்றுப் போக்கும் கொஞ்சம் ஜுரமுமாய் இருக்கிறது. அதற்கு ஏதாவது ஒரு மருந்து சொல்லுங்களேன்.

பாட்டி:—ஆஹா! அப்படியே சொல்கிறேன். கவனமாய்க் கேட்டு நினைவில் வைத்துக்கொள் கமலம். ஒரு வயதுக்குட்பட்ட சிறிய குழந்தையாயிருந்தால் பெரிதாக மூன்று வெற்றிலை, இரண்டு டீஸ்பூன் மிளகு, சுண்டைக்காய் பிரமாணம் சுண்ணும்பு இதுகளை ஒரு முறத்தில் போட்டு உள்ளங்கையால் நன்ருய்த் தேய்க்கவேண்டும். வெற்றிலையும் சுண்ணும்பும் மிளகோடு மிளகாய் ஒத்துப்போய்விடும். பிறகு அடுப்பில் மண்வாணயைப் போட்டு முறத்திலிருக்கும் மிளகைக்கொட்டி சிவக்க வறுத்துக்கொண்டு இரண்டு டீஸ்பூன் சீரகம் சேர்த்து பளபள வென்று வெடிக்கும்போது ஆழாக்கு ஜலம்விட்டு அரை ஆழாக்காக காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு வடிகட்டி பாட்டலில் கொட்டி மூன்று நாளைக்கு தினம் இரண்டு வேளை விகிதம் ஒவ்வொரு பாலாடை போட்டு. ஜுரம் பேதி இரண்டும் நன்ருய் தணிந்துவிடும். பயப்படாதே. கொஞ்சம் பெரிய குழந்தைகளுக்கு இம்மாதிரி இரட்டத்தனை சேர்த்துக் கொடுக்கவேண்டும். இன்னும் அதற்குமேல் பெரியவர்களுக்கு நாலத்தனை கொடுக்க வேண்டும். எல்லாருக்கும் இதைக் கொடுத்தால் சீக்கிரத்தில் குணமாய் விடும் விலையும் சரசம். குணமும் அதிகம். உன் சொந்த அனுபவத்தில் பார்த்துக்கொள்.

கமலம்:—பாட்டி! சரி அப்படியே செய்கிறேன். மஞ்சள் குங்குமம் வாங்கிக்கொண்டு போங்கள்.

---


## நந்தவனம்—சிசிர ருதுமலர்

உயரிய கிளேஸ் பதிப்பு—ரூ. 1—8—0
மலிவு அன்ப்ளீச்ட் பதிப்பு—ரூ. 1—2—0

வழக்கம்போல் பல அழகிய படங்களுடன் வெளிவருகிறது. உங்கள் பிரதியைப் பதிவு செய்தாயிற்ரு?



சூடாமணி

## 3. மூன்று உண்மைகள்

கும்பகாத சர்மாவுக்குப் பிரதம மந்திரி உத்தியோகம் கிடைத்தவுடனே நரிக்குலத்தலைவரான சம்பு ஐயருக்குக் கஷ்டகாலம் தொடங்கி விட்டது. காரணம்? பொறாமை! தம்முடைய நரிகளையெல்லாம் ரகசியக் கூட்டமாகத் திரண்டு கூடி வரச் செய்தார் காட்டில் ஒரு மூலையிலே. அந்தக் கூட்டத்தில் குரங்குகளை ஒரே அடியாக நிந்தித்துப் பேசினார். நரிக்குலத்தாருக்குக் குரங்குகளிடம் கடுங்கோபமும் வெறுப்பும் ஏற்படும்படி வாசாலமாகப் பேசினார். சிங்க மகாராஜாவின் அரசாட்சியையே தலைகீழாகக் கவிழ்த்துவிட அந்த ரகசிய ஸபையில் பல தீர்மானங்கள் நிறைவேறின. அவைகளில் முக்கியமானவை;—

1. காடெங்கும் கும்பகாதசர்மாவுக்கு "துரும்புகாதக் குரங்கர்" என்று மகாராஜா பட்டப் பெயர் சூட்டியிருப்பதாக விளம்பரங்கள் எழுதி ஒட்ட வேண்டியது.

2. கும்பகாத சர்மா புதிதாக எந்தச் சட்டங்களை வகுத்தாலும் அவைகளை மீறி நடக்க வேண்டியது.

3. கும்பகாத சர்மா எந்தச் சீர்திருத்தங்கள் செய்யப் புறப்பட்டாலும் அவை ஒன்றுமே நிறைவேறாதபடிச் செய்துவிட வேண்டியது.



4. நரிக் குலத்தார் எந்த வரியும் செலுத்தக் கூடாது.

ஸி. ஐ டிப்பார்ட்மெண்டுக்குப் புதிய அதிகாரியாக வந்த முயலண்ணா இந்த ரகசியக் கூட்டத்தில் நிறைவேறின சகல தீர்மானங்களையும் கும்பகாத சர்மாவுக்கு அன்றிரவே தெரி

வித்துவிட்டார். சம்பு ஐயரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் ஜெயிலில்போடவும், அவர்களுடைய வீடு, வயல் தோட்டங்களை யெல்லாம் பறி முதல் செய்யவும் போலீஸ் கமிஷனர் பெருச்சாளி நாயக்கருக்கு உடனே உத்தரவு அனுப்பினார் கும்பநாத சர்மா.

நரிக்குலத்தார் இரவெல்லாம் தூங்காமல் "கும்பநாத சர்மாவுக்குக் குறும்புநாதக்குரங்கர் என்ற பட்டப் பெயர் சூட்டியிருக்கிறார் நமது சிங்கமஹாராஜா!" என்று விளம்பரங்கள் அச்சடித்து, மரங்களிலும் செடிகளிலும் கொடிகளிலும் தொங்கவிட்டார்கள். இந்த வேலைக்கு ரொம்ப உதவி செய்தவர்கள் கரடிராயரும், ஓநாய் மாமா கோணப்பல்லருந்தான்.




நரிக்குலத்தார் தாங்கள் நினைத்ததை நிறைவேற்றி விட்டதாக நினைத்துக் கொண்டு சந்தோஷமாக தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குப் போய்ப் படுத்துத் தூங்கிவிட்டார்கள். பெருச்சாளிச் சிப்பாய்கள் காலை மூன்று மணிக்கெல்லாம் சம்பு ஐயரையும் அவருடைய தோழர்களையும் பிடிக்கப் புறப்பட்டார்கள். இந்தச் சமாச்சாரம் சம்பு ஐயருக்கும் அவருடைய நண்பர்கள் கோணப் பல்லருக்கும் கரடிராயருக்கும் தெரிந்துவிட்டது. உடனே இருவரும் குடல் தெறிக்க ஓடிவந்து சம்பு ஐயரிடம் சொன்னார்கள். சம்பு ஐயர் தமது தோழர் இரண்டு பேரையும் கூட்டிக் கொண்டு காட்டை விட்டு ஓட்டம் பிடித்தார்.



ஓடும் வழியிலே கும்பநாத சர்மாவுடைய பங்களா வாசலில் குறும்பாயி பால்காரன் பால டார்ஜாலன் பால் கறக்கிறதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். சம்பு ஐயருக்கு ஓடிஓடி ரொம்பக் களைப்பாக இருந்த்து. கொஞ்சம் பால்குடித்தா களைப்புத் தீரும் போலிருந்தது. உடனே இதைப்பற்றி தமது தோழர்களோடு ஆலோசனை பண்ணினார். அப்போது கரடி ராயரும், கோணப் பல்லரும்,

"நீர் சொல்லுகிறபடி செய்கிறோம், எங்களுக்கும் பங்கு தர வேண்டும். நாங்களும் களைத்துப்போயிருக்கிறோம்" என்றார்கள்.

"ஆஹா! அதற்கென்ன? உங்களுக்கு உள்ளே இருப்பது வேணுமா, வெளியே இருப்பது வேணுமா?" என்றார் சம்பு ஐயர்.

இரண்டு தோழர்களும், "வெளியே இருப்பது எங்களுக்கு வேண்டும்" என்றார்கள்.

"அப்படியே தருகிறேன். சொன்னபடியே செய்யுங்கள்" என்றார் சம்பு ஐயர்.

உடனே கரடி ராயரும் கோணப்பல்லரும் பங்களாவுக்குப் பின் பக்கத்தில் பதுங்கி நின்று கொண்டு, "தீ! தீ! நெருப்பு! பங்களாவில் நெருப்பு!" என்று கத்தினார்கள். குறும்பாயியும் பால்காரன் மார்ஜாலனும் கறந்த பால் தவலையை வெளியே வைத்துவிட்டு பங்களாவுக்குள் ஓடினார்கள். சம்பு ஐயர் தவலையில் இருந்த பாலைக்குடித்தார். அதற்குள்ளாக கரடி ராயரும் கோணப்பல்லரும் தங்கள் பங்குக்காக ஓடிவந்தார்கள். சம்பு ஐயர், "இந்தாருங்கள்! பாலுக்கு வெளியே உள்ளது பாத்திரம்! எடுத்துக் கொள்ளுங்கள்" என்று பாத்திரத்தை எறிந்து விட்டு ஓட்டம் பிடித்தார். நண்பர்கள் இருவரும், பாத்திரத்தை



ஏமாந்த பார்வையோடு ஒரு தரம் பார்த்து, அதை பங்களா வாசலிலே வீசி எறிந்தார்கள். சம்பு ஐயருடைய நம்பிக்கைத் துரோகத்திற்குச்சரியான தண்டனை கொடுக்கவேண்டும் என்று எண்ணி, அவரைப் பிடிக்க ஓடினார்கள்.

தோழர்கள் இருவரையும் பிடிக்க குறும்பாயியும் மார்ஜாலரும் ஓடி வந்தார்கள். இவர்களைத் தொடர்ந்து போலீஸ் கமிஷனரும் சிபாய்களும் ஓடி வந்தார்கள். சம்பு ஐயர் உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு காட்டுக்கும் நாட்டுக்கும் நடுவில் ஓடின நதிக்கரைக்கு வந்துவிட்டார். அங்கே தேரை அப்பர் பிரயாணிகளைக் கடத்திவிடப் படகை வைத்துக்கொண்டிருந்தார். சம்பு ஐயர் அவரிடம்,

"அப்பா தேரையப்பா! என்னை அக்கரைக்குச் சீக்கிரம் ஓட்டிக்கொண்டு போகவேணும்" என்றார்.

"கட்டணம் ஒரு பணம் தந்தால் படகை ஓட்டுகிறேன்" என்றார் தேரையப்பர்.



அதற்குச் சம்பு ஐயர், "காசைப் பார்க்கிலும் ரசமான மூன்று உண்மைகள் சொல்லுகிறேன், என்னைப் படகில் ஏற்றி அக்கரைக்குக் கொண்டுபோனால்" என்றார். தேரை அப்பர் அந்த மூன்று உண்மைகளையும் தெரிந்து கொள்வதாக சம்பு ஐயரைப் படகில் ஏற்றிக் கொண்டார். படகு நதியில் கொஞ்ச தூரம் போனதும், சம்பு ஐயர்,

"சம்பா அரிசியைப் போலவே நல்லதுதான் சம்பாக் கோதுமை என்கிறார்கள் சிலர். ஆனால், உண்மை என்னவென்றால், சம்பாக் கோதுமை சம்பா அரிசியைவிட ரொம்பப் போஷிப்பானது என்பதுதான்" என்றார். தேரையப்பர் "அப்படியா" என்றார்.

படகு நடு ஆற்றில் சென்றதும், சம்பு ஐயர்,

"பட்டப் பகல் மாதிரி நிலவு வீசுகிறது என்று சொல்லுவார்கள். உண்மை என்ன தெரியுமோ? நிலவு பட்டப் பகல் மாதிரிப் பிரகாசமாக ஒருபோதும் இராது என்பதுதான்" என்றார். "அப்படியா?" என்று தலையை அசைத்தார் தேரைஅப்பர்.

படகு மறு கரை சேர்ந்ததும், சம்பு ஐயர், "ஐயா, தேரையப்பரே! உம்முடைய வேட்டியும் சட்டையும் கந்தல். இதன் உண்மை என்ன தெரியுமோ? என்னைப்போல காசு தராத ஆசாமிகளைப் படகில் ஏற்றி ஓட்டி வந்தால் சட்டையும் வேட்டியும் இன்னும் ரொம்பக் கந்தலாய் விடும்'; என்று சொல்லிக் கொண்டே மறு கரையில் குதித்து ஓட்டம் பிடித்தார். தேரை அப்பர் "ஆமாம்! உண்மைதான்" என்றார்.

---




183160



## பாசுரமும் ஓவியமும்

மூன்றுவது சித்திரம் — பெரியாழ்வார் திருமொழி

### சித்திர விளக்கம்—பூச்சூட்டல் 7-வது பாசுரம்

குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல எம்கோவே!
மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லஎன்மைந்தா!
இடந்திட்டுஇரணியன்நெஞ்சை இருபிளவாகமுன்கீண்டாய்!
குடந்தைக்கிடந்தஎம்கோவே! குருக்கத்திப்பூச்சூட்டவாராய்.





## 4. வாழ்வும் தாழ்வும்.

"வாழ்வும் தாழ்வும் அமைவது பகவத் சங்கல்பத்தின் எதிரொலியேயன்றோ? பூர்வஜன்ம ஸுக்ருதத்தால் உயர் வாழ்வு பெற்றவன் தன் செறுக்கால் அழிந்து தாழ்வு பெறுவதைக் கண்கூடாகக் காணவில்லையா நாம்? அதேபோல் மிகவும் தாழ்ந்த நிலையில் தவித்து உருகும் எளியன் உயர்பதவியை அடைவதும் உண்டல்லவா! உயர் வாழ்வு வாழ்பவன் தாழ்வு பெற்று நொந்திருப்பவர்களைத் துன்புறுத்தலாகாது. ஏனெனில் அது சர்வேச்வரனுக்குப் பெரும் அதிருப்தியையே விளைவிக்கும். தெய்வதண்டனையென்பது இக் கலிகாலத்திலும் ப்ரத்யக்ஷமாகத் தென்படுகிறது. எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வம் அடிக்கும் என்ற முதுமொழி இதுவரை பொய்த்ததில்லை."

இவ்வாருக த்ரிவிக்ரம பாகவதர் விவரித்துக்கொண்டே போனது சபையில் பெரியபரபரப்பை உண்டு பண்ணியது. அதே சமயம் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்குமென்பதுபோல், இவை யாவும் தன்னைக் குறித்தே பாகவதரால் சொல்லப்படுகின்றன என்ற எண்ணத்தைக் கிளப்பிவிட்டது கோபிநாத சாஸ்திரிகளின் உள்ளத்தில். "சன்மார்க்க சபை என்று பெயரை வைத்துக் கொண்டு ஒருவரையொருவர் குறை கூறி இழிவுப்படுத்துவதுதான் இந்த ஊர் ஆசாமிகளின் வேலையாய்விட்டது. இந்த ஊருக்கே புதிதாகிய இந்த பாகவதருக்கு நேற்று நடந்த சம்பவத்தைச் சொல்லிவிட்டு இம்மாதிரி பேசும்படி வத்திவைத்துவிட்டார்கள்போலிருக்கிறது போக்கிரிகள்!" என்று தனக்குள் எண்ணினார். முகத்தை முன்னூறு கோணலாக்கிக்கொண்டார். சபையிலேற்பட்ட பரபரப்பும் தன்னைக்குறித்துதான் என்று தெரிந்துகொண்டார். இருப்பினும் வாயைத் திறக்காது, ஒருவரையும் பார்க்காது, முகத்தில் பொறுமையை வரவழைத்துக் கொண்டு மேலும் கேட்கலானார்.

"எளியன் என்று நாம் இழிவாக நினைக்குமிடத்தில் உண்மையாகவே மிகவும் விசேஷமிருக்கக்கூடும். நந்தனின் மகிமை வெளியாகும் நிமிடம்வரை அவனை எல்லோரும் எப்படி நடத்தினார்கள்! நந்தனைப் பற்றி இன்று எல்லோரும் எவ்



24 MAY 194
MADRAS

வளவு கொண்டாடுகிறோம்! வேதியர் முதலில் எப்படியெல்லாம் அவனைத் திட்டி திட்டமிட்டார், பிறகு எவ்வளவு பணிவுடன் போற்றினார்? நாளை நடப்பதை யாரறிவார் என்ற மானிட அநித்ய நிலையை யாரும் மறக்கலாகாது. இந்த நாராயணகிரி ஸன்மார்க்க சபையார் புரிந்துவரும் அரிய தொண்டை நான் மிகவும் பாராட்டுகிறேன். சமீபத்திலுள்ள நரஸிங்கம்பட்டி சமஸ்தானத்திலிருப்பதுபோன்ற சில அபிவிருத்திகளை இந்த சமஸ்தானத்திலும் சீக்கிரமே செய்யவேண்டுமென நீங்கள் பிரஜைகளெல்லோரும் — உங்கள் மன்னர் சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும்......இந்த கிராமத்திலேயே இந்த சபையுடன் ஒத்துழைக்காது சில மிராசுதார்கள் விலகியிருப்பதாக அறிகிறேன். ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே அன்றி அனைவர்க்கும் தாழ்வே !"

பல அரிய நீதிகளை வெளியிட்டு பாகவதர் உபந்நியாஸத்தைச் சுருக்கவே முடித்தார், கோபிநாத சாஸ்திரியின் மனதில் எண்ணற்ற அலைகள் மோதவாரம்பித்துவிட்டன, தனது கடின மனதும் கொடியநடையும் தன்மீது எத்தகைய தெய்வ தண்டனையைச் சுமத்துமோ என்ற கவலை ஏற்பட்டது.

* * * *

"என்ன பாபம் செய்தோமோ, பகவானுக்குப் பொறுக்கவில்லைபோலிருக்கிறது! அதனால்தான் என்னையும் கீழே தள்ளி, உன் மண்டையிலும் இப்படியொரு காயத்தை ஏற்படுத்தித் தண்டித்துவிட்டார்.

யாரைச் சொல்லி என்ன பிரயோஜனம்! பெரிய பண்ணை ஐயருக்கு ஏன் அப்பேர்ப்பட்ட கோபத்தைக் கொடுக்கவேண்டும்!...ஹூம். கூனிக்கும் கைகேயிக்கும் கொடிய எண்ணம் ஏற்படவில்லையா? அதன் பலன் தசரதன் புத்ரசோகத்துடன் அவஸ்தைப்படவில்லையா? அவ்வளவு உயர்ந்த இடத்திலேயே அப்படியிருக்க இந்த அல்பப்புழு எப்படித் துடித்தால் என்ன! நீ துடிப்பதைக்கண்டு எனக்கு சகிக்கவில்லையே!” என்று கதறியவாறே மூர்ச்சித்தான் வீரபத்திரன்.

சாஸ்திரியின் சீற்றத்தால் மாரியம்மா முகத்தில் ஏற்பட்ட ஆத்திர முத்திரைக்கு வேதகிரி முனுசாமிப் பண்டிதன்தான் பச்சிலை மருந்து கொடுத்திருந்தான். சீக்கிரமே ரணம் ஆறிவிடும் என்று தைரியம் கூறி வந்தான். வீரபத்திரனின் கால் உள் ரணத்தை மட்டும் அவனால் குணப்படுத்த முடியவில்லை: அந்த நிலையைத் தாண்டிவிட்டதாக வருந்தினான்.

இத்தகைய நிலையில்தான் வீரபத்திரன் கதறியது, மூர்ச்சித்தது. புத்ரசோகம் என்பதைக் குறித்தே மனதில் நினைத்தவாறு மூர்ச்சித்ததால் அதே விஷயம் அவனுக்கு பிரக்ஞையற்ற நிலையில்கனவுபோல் தோன்றியது போலும்! சற்று தெளிந்ததும் வெறிபிடித்தவன்போல் “காளியம்மா! மாரியம்மா! நான் தசரதமகாராஜாவையேபார்த்தேன்! ரொம்ப வாடி வதங்கி உருகிப்போய் விட்டார். எவ்வளவோ புண்ணியம் பண்ணி நல்ல நிலையிலிருந்த அவ



ருக்கே அப்பேர்ப்பட்ட கஷ்டம் வந்துவிட்டதே! விதி யாரைத்தான் விடும்? பிள்ளையைக் காட்டுக்கு அனுப்பிவிட்டது சகிக்கவில்லே... பொண்ணு! உனக்கு இப்படி ஆபத்து வந்துவிட்டது என் பாபந் தான்; எனக்கு சகிக்கவே இல்லே! இதோ பாரு. இப்பதான் ஒரு பயங் கரக் கனவு கண்டேன்: ஆனல் அதுப்பிரகாரம் நடக்கும் என்று நான் நம்பவில்லே... நீங்கள் இரண்டு பேரும் என் மனசுக்குத் துளிகூட பிடிக்காத காரியத்தை செய்யப் போகிறீர்களாம்!... அப்படியும் நடக் குமா? என் பிராணன் இப்போதே போய்விடலாமே!..." என்றெல் லாம் சம்பந்தா சம்பந்தமின்றிப் பிதற்றினன். அவர்களிருவருக்கும் கவலேயே அதிகரித்தது.

* * * *

"இதோ பாரு மாரியம்மா! நான் சொல்றதை விவரமாக்கேளு. இது வரைக்கும் உனக்கு நல்ல கால மாம். இப்போதான் கொஞ்சநாளாய் உனக்குப் போராத தசை நடக்கு தாம். அதன்பலன்தான் உன்னேயும் என்னேயும் இப்படி வாட்டுதாம். இப்போதான் நம்ம ஜோஸியஅய்யர் எனக்குச் சொப்பனத்திலே வந்து சொல்லிப்பூட்டாரு. என் காலம் முடிஞ்சுபோச்சாம். அந்த நாராய ணன் என்னேக் கூப்பிட்டாரு. நான் சீக்கிரம் போயிடுவேன். நீ இனிமே இந்த ஊரிலே தங்காதே! கெடுதல் பண்ணுரேன்னு பெரிய பண்ணே அய்யரிடம் த்வேஷம் வைக் காதே. நம்ம சேரி முறட்டு ஆள்க ளாலே அவருக்குக் கெடுதல் பண் ணுதே. ப்ரம்மத்வேஷம் கூடாது. நரசிங்கம்பட்டிக்குப் போயிடுங்க. பகவான் இருக்கார், எல்லாத்தையும் பாத்துக்க. அங்கே நம்ம சினேகி தங்க ஒத்தாசையிலே ஏதாச்சும் வேலேசெய்து பொழை. உன் படிப்பை மேலே கவனி. தகாத காரியம் எதுவும் எப்போதும் செய் யாதே.நான் நிம்மதியா போறேன்." என்று படபடத்துக்கூறி கண்ணே மூடிக்கொண்டான். "நாராயணு! நாராயணு!" என்று கதறினன். ஒலி யும் மறைந்தது; அவன் மூச்சும் நின்றது.

சற்று நேரத்திற்கெல்லாம் அலறி யடித்துக்கொண்டு எழுந்து "மாரீ! காளீ! இன்னமே ஒரு நிமிஷம்கூட இந்த ஊரிலே இருக்கக்கூடாது. இங்கே இருந்தா வீணு ப்ரம்ம த்வேஷம் வந்துடும்... ஐயோ! பயங் கர சொப்பனம். பெரிய அய்யரை நம்ம ஆளுங்க படுகாயப்படுத்திப் புட்டாங்களே... கூடாது, கூடாது! நாம் இங்க இருக்கவே கூடாது. நம்மாலே அவருக்குக் கெடுதல் கூடாது... நம்ம முனுசாமி பண்டி தன் வண்டிலேயே நம்ம இப்பவே நரசிங்கப்பட்டணம் போயிடலாம். நம்ம மேஸ்திரி ஐயா தயவுலே அங்கே ஆஸ்பத்திரிக்கு போகலாம். உனக்கு சீக்கிரம் குணமாயிடும். வண்டியைக் கட்டுங்கோ" என்று கெஞ்சினன்.

வீரபத்திரன் திடீர் திடீரென்று கண்ட கனவுகளும் அதனல் அவன் மனம்போன போக்கும் ஒரு சமயம் அழுத்தந்திருத்தமாகவும், ஒருசமயம் கொச்சையாகவும் பேசியதும் சேரி மக்களே மிகவும் உருக்கியது. உடனே நரசிங்கப்பட்டணம் போனல் வீரபத்திரனுக்கும் ஆஸ் பத்திரியில் சிகிச்சை செய்யலாம், தேறிவிடுவான் என்ற எண்ணத்தில் அவன் நண்பர்கள் எல்லோருமாகச் சேர்ந்து முனுசாமி வண்டியில் அம் மூவரையும் ஏற்றிச்சென்று சர்க் கார் ஆஸ்பத்திரியில் கொண்டுவிட் டார்கள். மாரியம்மாவின் காயம்



ஆறிக்கொண்டே வந்ததுபோல், வீரபத்திரனின் உள்ரணம் பரவிக்கொண்டே வந்தது. நான்காம்நாளே நாராயணன் திருவடிநிழலில் ஒதுங்கிக்கொண்டான், தன் இரு கண்மணிகளையும் கதறவிட்டு.

* * * *

இந்தத் துக்க சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. தண்ணீரிலிருந்து தரையில் தள்ளப்பட்ட மீன்களைப்போல் தத்தளித்தனர். சோகபிம்பங்களாகிய தாயும் மகளும் நரசிங்கபட்டிக்கு வந்து இத்தனை நாட்களாயினவெனினும் அமைதி ஏற்படவில்லை. சத்திரத்தில் தங்கி அன்னதானம்பெற்று, வேலை கிடைக்குமோவென்று சுற்றலானார்கள். சுற்றுவதற்குத்தான் சக்தியேது?

வாழ்வும் தாழ்வும் அலைகளின் ஏற்றத்தையும் இறக்கத்தையும் போலல்லவா இருக்கின்றன! இவர்களது பூர்விக கிராம வாழ்க்கைக்கும் பிறகு கிடைத்த பட்டண வாழ்க்கைக்கும், பிறகு தந்தையின் பிரிவால் ஏற்பட்டுள்ள தாழ்வுக்கும்—ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசம்! இருவரும் விசனச்சிலைகள் போல் அசைவற்று, ஜீவனற்று, கலங்கியவண்ணமே காணப்பட்டனர். எப்போது பார்த்தாலும் அவர்கள் வாய் முணுமுணுத்தது. இதே வார்த்தைகள்தான்: "அன்று வாழ்வு; இன்று தாழ்வு! நாளை ?"



சாக்ஷாத் பரந்தாமனையே புத்திரனாக அடைந்த கௌசல்யை அந்த குழந்தை இராமனுடைய அழகிய கண்ணாடிபோன்ற கன்னங்களில் ஆனந்தமாய் முத்தமிடவும், அக்குழந்தையை தசரதர் வாயார "ராமா! வாடா! என்று அழைத்து இன்புறவும், அந்த ஸ்ரீராமனுடைய பணிவிடைகளை செய்து இன்புற ஸ்ரீ லக்ஷ்மணனும், ராம லக்ஷ்மணர்களின் அழகைக்கண்டு உள்ளம் பூரிக்க விச்வாமித்திர முனிவரும், தனது மகத்தான சாபத்தை ராமனுடைய திவ்ய சரண கமலத்தால் தீர்த்துக்கொள்ள அகலிகையும் அதே திருவடியினால் மிதிக்கப்படும் பாக்யம் பெற்ற சிவதனுசும், தன்னருமை மகளை பாணிக்ரகணம் செய்துகொடுத்து கண்ணாரக்கண்டு பூரித்த ஜனகமகாராஜனும், அந்த பரமாத்மாவின் கரங்களைப்பற்றி இன்பமடைய ஸ்ரீ ஜானகியும், என்ன தவம் செய்தார்களோ! என்ன பேறு பெற்றார்களோ!......

# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனை

யதுகுலகாம்போதி. ஜம்பதாளம்

ஸ்ரீராம ரகுராம! சிருங்கார ராமயனி
சிந்திம்ஸராதே ஓ மனஸா!

1. தனுக்கு செக்குல முத்து பெட்ட
கௌஸல்யமுனு தபமேமி ஜேஸெனோ, தெலிய...

2. தசரதுடு ஸ்ரீராம! ராரா யனிபிலுவமுனு
தபமேமி ஜேஸெனோ! தெலிய...

3. தனிதபர பரிசர்ய ஸேயஸௌமித்ரிமுனு...த

4. தனவெண்டகன ஜுசி பொங்க கவுசிகுடுமுனு......த

5. தாபம்பணகி ரூப வதி யௌட அகல்யமுனு—த—

6. தர்மாத்மசரணம்பு ஸோகசிவ சாபம்பு...

7. தனதனயு நொஸகி கனுலாரகன ஜனகுண்டு......த...

8. தகரம்பு கரக கரமுனு பட்டி ஜானகி......த......

9. த்யாக ராஜாப்தாயனி பொகட நாரதமௌனி......த...

ஸ்ரீமதி வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

# மாமல்லபுரத்தில் மகாமகம்

நம் நாட்டில் பொதுவாய் ஜனங்கள் எல்லோரும் திடீரென்று அவனுக்கு எங்கிருந்தோ அதிர்ஷ்டம் வந்துவிட்டது. லக்ஷ்மி தாண்டவமாடுகிறாள். இவன் திடீரென்று கண் இமைக்கும் நாழியில் வீடு வாங்கிவிட்டான் என்று சொல்கிறார்களே, அப்படிச் சொல்லும்பொழுது எல்லாம் திடீர் என்று வந்துவிட்டது என்கிறார்களே எங்கிருந்துவரும் அதிர்ஷ்டம்? என்ன ஆகாயத்திலிருந்து குதித்திடுமா என்ன? ஒரு வேளை இந்த பதம் நடைமொழியில் பழகிவிட்டதோ என்னவோ என்று நினைத்துக்கொண்டிருப்பேன்.

25-ந் தேதியன்று எங்க வீட்டில் எல்லோரும் மஹாமகத்திற்கு திருக்கடல் மல்லைக்குபோவதாய் தீர்மானித்து இருந்தார்கள். ஆனல் நான் போவதாய் நான் நினைக்கவும் இல்லை. அவர்களும் என்னை அழைக்கவில்லை. அவர்கள் செல்வதற்கு 2 மணி காலத்திற்கு முன்பு என் மாமியார் வந்து 'பத்மினி நீயும் கிளம்புகிறாயா?' என்றார். எனக்கு சந்தோஷம் தாங்கவே முடியவில்லை. அரை மணியில், துணிகளை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டேன். உடனே பஸ்ஸும் வந்தது. கட்டு சாதம், பக்ஷணம், துணிமூட்டைகள் எல்லாம் எங்களுக்கு முன்பு ஓடி பஸ்ஸில் ஏறிக்கொண்டன. நாங்களும் பஸ்ஸில் ஏறிக்கொண்டோம். பஸ்ஸும் சிங்கப்பெருமாள்கோவிலிலிருந்து புறப்பட்டு செங்கல்பட்டு போய் சேர்ந்தது. அங்கு

பஸ்ஸு மாறி திருக்கடல்மல்லைக்கு புறப்பட்டோம். பழைய காலத்தில் எங்கள் பாட்டிமார்கள் 'கட்டுசாதம் கட்டிக்கொண்டு, கட்டைவண்டி சவாரியில் உல்லாசமாய் நாங்கள் பத்ரிஹாஸ்ரமம் இன்னும் முதலிய இடங்களுக்குப் பிரயாணம் செய் தோம்' என்று சொல்லும்போதெல் லாம் எனக்கும் அந்தமாதிரி போக வேண்டுமென்று ஆசையாய் இருக் கும். அந்த ஆவலை இந்த பிரயா ணத்தில் பூர்த்திசெய்துகொண்டு விட்டேன். நாங்கள் இரவு 9 மணிக் குமேல்தான் திருக்கடல்மல்லைக்குப் புறப்பட்டோம். நல்ல நிலவு. அந்த நிலவு எங்களுக்கு இன்னும் பன் மடங்கு குஷியைத்தான் கிளப்பி யது. எங்கு பார்த்தாலும் மலைகள், செடிகள் எல்லாம் வெள்ளியை உருக்கி வார்த்தார்ப்போல் மின்னிக் கொண்டு இருந்தன. செடிகளின் இலைகள் எல்லாம் காற்றில் அலை வது எங்களுக்கு இரண்டு கைகளை யும் விரித்து 'வாருங்கள். ஸமுத்திர ஸ்நானம் செய்யுங்கள்' என்று ஆனந்தமாய் அழைப்பதுபோல் இருந்தது. எங்களைப்போல் இன் னும் எத்தனையோ பேர்கள் இரட்டை மாட்டுவண்டி, ஒத்தை மாட்டுவண்டி, ஜட்கா, சைக்கல், கால்நடையில் இன்னும் எத்தனை விதங்களில்தான் போகமுடியுமோ அத்தனைவிதத்தில் ஜனங்கள் திரண்டு உருண்டு போய்க்கொண்டிருந் தார்கள். அந்த நிலவும், ஜனங்கள் போகும் அழகும் சொல்லிமுடி யாது. வழி பூராவும் கும்மாளமடித் துக்கொண்டு திருக்கடல்மல்லையை அடைந்தோம். அங்கு ஊர் இருந்த அழகைச் சொல்லிமுடியாது. இந்த கிரோஸினயில் ரேஷனில்கூட எங் கிருந்து இத்தனை விளக்குகள் சம் பாதித்தார்களோ! பஸ் உள்ளே செல்வதற்குக்கூட விடாது எங்கு பார்த்தாலும் தேங்காய்க்கடைகள், வளையல்கடைகள், விதவிதமாய் ராட்டினங்கள், ஊர் முழுதும் பெட் ரொமாக்ஸ் விளக்கு அலங்கரித்து இருந்தது. அன்றுதான் அங்கு ஸ்தல சயனப் பெருமாளுக்குதெப்பமாம். நாங்கள் போய் சேருவதற்கும் அவர் தெப்பம்விட்டு இறங்குவதற் கும் சரியாய் இருந்தது. போய் ஸ்வாமியை தரிசனம் செய்து கொண்டு, அங்கு கடைத்தெரு பூரா வும் சுற்றிப் பார்த்துவிட்டு இரவு 11 மணிக்கு வீட்டை அடைந்தோம். அங்கு எங்களுக்காக தனி பங்களா ஏற்பாடு செய்திருந்தார்கள். அங்கு போனதும் எங்கள் மாமியார் கட்டு சாதங்களை எல்லாம் அவிழ்த்து வைத்தார். எல்லோரும் பங்களா படியில் வரிசையாய் நிலவில் உட் கார்ந்து ஆனந்தமாய் சாப்பிட் டோம். பஞ்ச பக்ஷ்யபரமான்னம் கூட அத்தனை இனிப்பாய் இருக் காது. அந்த கதம்பம், தத்யோனம் அவ்வளவு ருசியாய் இருந்தது. எல் லோரும் புசித்துவிட்டு கொஞ்ச நேரம் பேசிக்கொண்டு இருந்து விட்டு, பிறகு படுத்துக்கொண்டோம் தூக்கம் ஏன் வருகிறது? எப்பொ ழுது உதயம் ஆகும்; எப்பொழுது ஸமுத்திரம் போவது என்ற நினை வாகவே இருந்தது. அதே நினைவி லேயே தூங்கிவிட்டேன்.


உதயம் ஆனதும் எல்லாரும் சர சரவென்றுபல்லை துலக்கிக்கொண்டு துணிகளை எல்லாம் ஆளிடம் தந்து விட்டு ஸமுத்திரத்திற்கு புறப்பட் டோம். அந்த உதயத்தில் சூரியனின் தங்க கிரணங்கள் பட பெருமாள் ஸமுத்ரத்திற்கு எள்ளிய அழகு கண் கொள்ளா காட்சியாய் இருந்தது. இரண்டு கருடசேர்வை, ஸ்தல சயனம், ஞானப்பிரான் ஒருவர் பின்

ஒருவராய் அத்தனை அழகாய் ஏள்ளி னார்கள். பெருமாளை சேவித்து விட்டு குளத்திற்கு சென்றுஸ்நானம் செய்துவிட்டு ஸமுத்ரத்திற்கு போனோம். கூட்டம் எள்போட்டால் எள் விழாது. அந்த ஜல சமுத்ர திற்கு எதிரில் ஜன சமுத்ரம் புரண்டு இருந்தது. ஸ்வாமி தீர்த்தம் ஸாதித்ததும் எல்லாரும் ஸமுத்ரத்தில் இறங்கி விட்டோம். எங்களை விட ஸமுத்ர ராஜனுக்குச் சந்தோஷம்: தன் ஒவ்வொரு அலையையும் எவ்வளவு எழுப்பமுடியுமோ அத்தனை பெரிதாய் எழுப்பி ஜனங்களை தீர்த்தமாட்டியது. அதை விட்டு வர மனதில்லாது அரைமணிக்கு மேல் துளைந்து விட்டு கரை ஏறி துணிகள் மாற்றிக் கொண்டு பகவானிடம் சடாரி, புஷ்பம் வாங்கிக்கொண்டு, சமுத்ரக் கரையில் இருக்கும் கோவிலுக்குப் போய்விட்டு வீட்டுக்கு புறப்பட்டோம். போகும் பொழுது பார்த்தால் எல்லாரும் சமுத்ரம் போவதும் திரும்பும் பொழுது எல்லோரும் ஈரதுணிகளுடன் போவதும், சிலர் ஸ்வாமியை தரிசித்துவிட்டு பிறகு வயிற்று ஸ்வாமியை பூஜிக்க கல்லுகளை சேர்த்து அடுப்பு மூட்டி காப்பியோ, சாதமோ எதோ வழி எல்லாம் செய்து கொண்டிருந்தார்கள்.

இன்னும் ஒரு தேர், திருநாள் வந்தால் பார்க்காதமனிதர்களை எல்லாம் பார்க்கலாம் அல்ல்வா? அதே போல் வருடக்கணக்கில் பார்க்காதவர்கள் எல்லாம்வந்து இருந்தார்கள். யாரைபார்த்தாலும் நீயும் வந்தாயா, நீயும் வந்தயா என்ற பேச்சுதான். விடுவந்ததும் காப்பி, டிபன் சாப்பிட்டு விட்டு கல்வெட்டுகளைப்பார்க்க சென்றோம். ஒவ்வொரு கல்வெட்டிலும் ஒலிக்கும் அழகைச் சொல்லிமுடியாது. அதை நேரில் பார்த்தால் தான் தெரியும். பஞ்ச பாண்டவர்களின் ஐந்து ரதங்கள் ஒவ்வொன்றும் தனி அழகுடன் சோபிக்கின்றது. பசுவின் நாக்கு வளைவுகூட அத்தனை அழகாய் இருக்கிறது. யானைகல்வெட்டு நிஜயானை நிற்பதுபோலவே இருக்கிறது. அங்கு ஞானப்பிரான் சன்னிதிக்கு போனோம். ஒரே கோவிலில் ஞானப்பிரான், விஷ்ணு, சிவன், ப்ரம்மா, காளிஇத்தகைய தெய்வங்களும்ஒன்றாய் சேவை சாதிக்கிறார்கள். இந்த கல்வெட்டுகளை பார்க்கும்பொழுது அவைகளை இன்னும் பாதுகாத்து வைத்தால் எத்தனை அழகாய் இருக்கும். சில சிற்பங்கள் பின்னப்பட்டு கிடப்பதை பார்த்தால் வருத்தமாய் இருக்கிறது. அவைகளை எல்லாம் பார்த்துவிட்டு வந்து சாப்பாட்டை முடித்துக் கொண்டு கடைத்தெருக்களை எல்லாம் சுற்றி பசங்களுக்கு எதோ சாமான்களை வாங்கித் தந்து விட்டு ஸ்தலசயனம் மூலவரை தரிசித்துக் கொண்டு வீடு வந்தோம். எங்களுக்கு ஒருவிதத்திலும் துளி கஷ்டம் தெரியாது எங்களை இந்த ப்ரயாணம் ஏற்பாடுசெய்து அழைத்துக் கொண்டு போன டி. வி. ஜயலக்ஷ்மி—திருவேங்கடாசாரி அவர்களுக்குத் தான் இந்த ப்ரயாணத்தில் ஏற்பட்ட புண்ணியம் முழுதும். அவரது கணவர் போலீஸ் உத்யோகஸ்தராதலால் எல்லாம் போலீஸ் பந்தோபஸ்துடன் இத்தனை சௌகர்யமாய் நடந்தது. இன்னும் எங்களுடன் மிஸஸ்.எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்களும் வந்திருந்தார். அவர் எங்கள் அனைவருக்கும் தாயாரைப் போல்தான் தோன்றினார். எங்களிடத்தில் சர்வசாதாரணமாய், மிகவும் ப்ரியமாய் நடந்து கொண்டார்.

சாயங்காலம் பஸ்ஸு வந்ததும் ஏறிஊருக்குபுறப்பட்டோம். திரும்பு

காலில் நாங்கள் போகும் பொழுது போனவண்டிகள் எல்லாம் திரும்பியது. யாரை பார்த்தாலும் தூங்கி ஆடிக் கொண்டு வந்து கொண்டு இருந்தார்கள். 3மாதகுழந்தை முதல் கிழம்வரையில் வந்து இருந்தார்கள். இந்த மஹாமகத்திற்கு வராதவர்கள் எல்லாம் கவலைப் படாதீர்கள். இதோ 12வருஷம் ஓடிவந்துவிடுகிறது. அதற்குள் உலகம் இன்னும் புதிதாய் மாறிவிடும். இப்பொழுது தவிறினவர்கள் எல்லாம் அப்பொழுது கட்டாயம் போய் வாருங்கள்.




இவைகளுக்கும் "க்யூ" வந்துவிட்டால்!

# கற்பனை

## 1

### ஸ்ரீமதி பி.என். லக்ஷ்மி

கற்பனை என்றால் என்ன? மானிடராய்ப் பிறந்த எல்லாரிடமும் கற்பனை செய்யும் சக்தியுண்டு செய்யவும் செய்கிறார்கள். இல்லாததையெல்லாம் உண்டுபண்ணும். இருப்பதில் இன்னும் சித்திர விசித்திரங்களை உண்டுபண்ணும். பிறரது நவரஸ பாவனைகளைப் புகுத்தி உண்மைபோலத் தோற்றுவித்து நம்மை அந்தந்த உணர்ச்சிகளுக்குத் தக்கவாறு ஆட்டிவைக்கும் ஓர் சக்தி. கற்பனை அதிகமானாலும் குறைந்தாலும் ஓர் உருவமாகாமல் சிதறிச் சின்னபின்னமாகிவிடும்.

எல்லாரிடமும் கற்பனை உண்டென்றால் பின் ஏன் கலைகள்மூலம் வெளிவருவதில்லை என்று ஒரு சந்தேகமும்கூட எழுகிறது. அநேகர் கனவு காண்கிறார்கள். ராத்திரி காணும் கனவை அனுபவித்து பயம், துக்கம், ஆனந்தம் என்ற உணர்ச்சிகளை அடைகிறார்கள். ஆனாலும் கனவு காணும் சிலர் தான் காலையில் (ஏன் சில நாட்களுக்குப் பிறகும்கூட) வேறொருவரிடம் (அழகாக) சொல்லுகிறார்கள். சிலருக்கு வெட்கத்தாலோ, நினைவில்லாமலோ, சொல்லத் தெரியாமலோ வெளியே சொல்லாமல் தான் மட்டும் அனுபவித்துவிட்டுப் பேசாமல் இருந்துவிடுகிறார்கள். அதுபோல் கற்பனை செய்பவர்களும் தங்கள் தங்கள் கலைகள் மூலமாக வெளிப்படுத்துவார்கள். சிலர் அதற்கு ஏற்ற கல்வித்திறன் இல்லாமலோ, சரியான வழி தெரியாமலோ, வெட்கத்தாலோ வெளியிடாமல் தனக்குள்ளேயே வைத்துக்கொண்டுவிடுகிறார்கள்.

அநேக இடங்களில் நீர் ஊற்றுக்களும் நதிகளும் இருக்கின்றன. ஆனாலும் தகுந்த முறைகளில் அணை போட்டு வாய்க்கால் வெட்டி அதன் வழியே தண்ணீரைப்பாய்ச்சிபயன் படுத்திக்கொண்டால் எவ்வளவு நன்மை ஏற்படும்? ஆச்சர்யமான மாறுதல் ஏற்படும்! அதுபோல் கற்பனை ஊற்றையும் தகுந்த முறையில் கொண்டுவர முயற்சித்தால் ஆச்சர்யமான மாறுதல் (கலை என்ற நிலத்தில்) ஏற்படும். நிற்க,—

கற்பனை அவசியமா? என்று சந்தேகமும் தோன்றுகிறதல்லவா? எல்லாருக்கும் கற்பனை முக்கியமாக வேண்டுவதேயாகும் ஆனால் ஒவ்வொருவருடைய கற்பனைத்திறன் ஒவ்வொருவிதமாக சிருஷ்டிகர்த்தாவாக இருக்கிறது. கற்பனை இல்லாவிடில் கதை, பாட்டு, படங்கள், சித்திரம், சிற்பம் இவைபோன்ற அனேக கலைகள் ரஸனை குறைந்துவிடும். படித்ததையே படித்தும் கேட்டதையே கேட்டும், பார்த்ததையே பார்த்தும் சலித்து பழய பால் புளித்துப் போம் என்பது போலாய்விடுமல்லவா?

ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு விதமாக கற்பனை தோன்றுகிறது ஒரு பாடகர் தான் பாடும் ராகத்தில் ஆலாபன சாஹித்தியத்தில் நிரவல், ஸ்வரம் என்று மனோதர்மத்திற்கு மீறவிடாமல் கற்பனை செலுத்துகிறார்... இன்னோர் இடத்தில்

நடிகர்களாகிய ஆண்கள் பெண் வேடத்தில் தோன்றி ஆண்களிடத்தில் பெண் தன்மையுடன் பேச நேருகிறது. துக்கமில்லாதவர் துக்கத்துடன் அழவேண்டியிருக்கிறது. இவர்களைப்போல் இயற்கையாக நடிக்கவேண்டுமெனில் அந்தந்த பாத்திரங்களாகத் தம்மை கற்பனை செய்துகொண்டால்தான் முடியும். ஆனால் சித்திரம், சிற்பம், கவி இவற்றை ரஸிப்பதற்கு ஆக்கியோனின் கற்பனை மட்டும் போதாது; பார்ப்போனும் அதைப்பற்றிக் கற்பனை செய்தால்தான் ஆக்கியோனின் கற்பனை பூராவும் சினிமா ஃபிலிமை திரையில் காட்டி அதனுள் உள்ள கருத்துக்களை நமக்கறிவிப்பதுபோல் சித்திரம், சிலை, காவியங்கள் மூலமாகத் தெளிவுபடுத்தும்.

ஒரு சமயம் பாலக்காட்டிற்கு அடுத்த ஊரில் ஓர் பௌராணிகர் புராணம் வாசித்துக்கொண்டிருந்தார். உத்தர ராமாயணத்தில் யாக சாலையில் ராமன் சீதையை அக்னியில் குளிக்கச் சொல்லும் கட்டத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார். சிலர் புராணத்தை ரசித்தும் சிலர் வம்பு பேசிக்கொண்டுமிருந்தார்கள். திடீர் என்று புராணம் சொல்பவர் சீதையாகத் தன்னை கற்பனைசெய்து கொண்டுவிட்டார். சோகம், துக்கம் என்ற பாவனைகளுடன் சீதையாக நடித்து எல்லோரையும் அழவைத்து விட்டார். இது நடந்து சில வருஷங்கள் சென்றுவிட்டன; ஆனாலும் கதை கேட்ட பலரும் பௌராணிகரின் திறமையையும் சமயோசித கற்பனையையும் இன்றும் சொல்லுகிறார்கள்.

இன்னும் நாம் அநேக பாட்டுக்களை கேட்கிறோம். சாஹித்திய கர்த்தாக்கள் புருஷர்களாக இருப்பார்கள் ஆனால் நாயகி நாயக பாவத்திலும், தலைவி, தோழி, குற்றவாளி நீதிபதி என்ற பாவங்களிலும் பாட்டின் கருத்து அமைந்திருக்கிறது. இம்மாதிரி பாட்டுக்கள் அந்தந்த பாவங்களுடன் வெளிவர வேண்டுமெனில் அந்தந்த பாத்திரங்களாகத் தன்னை கற்பனை செய்து கொண்டால் மாத்திரமே நவரஸ பாவனைகளுடன் வெளிப்படும். இம்மாதிரி ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து பார்த்தால் கற்பனை நம் எல்லோருக்கும் இன்றியமையாத ஒன்றாகும். ஆனால் அளவுக்கு மீறினால் அமிர்தமும் விஷம் என்பது போல் ஓர் அளவுக்குள் இருக்க வேண்டும். அதை மீறி முட்கள் நிறைந்த வழியாக செல்லத்துடங்கினால் நமக்கும் ரஸிக்கமுடியாது. ஆகையால் கற்பனை ஓர் வரம்புக்குள் இருத்தல்வேண்டும்.

## 2

## ஸ்ரீமதி. N. தில்லையம்மாள்

விற்பனையென்ற தொழிற்பெயர் போன்ற சொல் "கற்பனை" என்பதும், வில், விற்றல் என்பதுபோன்ற கல், கற்றல் என்ற சொற்களிலிருந்து விளங்குவது 'கற்பனையும்' ஆனால் கற்றலுக்கும் கற்பனைக்கும் சிறிது வேறுபாடுண்டு. கற்றல் என்பது பிறர் உள்ளத்தைத் தான் அறிதல். கற்பனையோ தன் உள்ளத்தைப் பிறர்க்குக் காட்டலாம். இதனை ஆங்கிலத்தில் Imagination எனவும் விளங்கும் தமிழில் எண்ணம் (அ) நினைவு எனவும் கூறினால் அதில் ஒன்றும் குற்றமில்லையாம்.

கற்பனை, உள்ளத்தில் விளைவதாகும். ஏன்! அதனை உள்ளத்தின் சாயல், உள்ளூற்று எனக் கூற

லாம். அது வாழ்வின் மரப்பயனைக் கனிவிக்கும் நீராகும். அறிவின் ஒளி இயற்கையன்னை மக்கட்களித்த தோர் நல்வரம். உண்மையின் புற விதழ். நன்மை தீமை இரண்டையும் ஏற்கும் குழந்தையின் மாசற்ற உள்ளத்தின் ஒளியும் ஆகும்.

கற்பனை, உள்ளத்தே ஓங்குவ தென இப்பொழுது யாவரும் அறிவோம். அவ்வுள்ளம் பொதுவாக விலங்குகட்கும் சிறப்பாக மக்கட்கும் இயல்பாயமைந்ததாகும். நம் மதக் கொள்கையின்படி முற்பிறப்பிலிருந்து உயிரைத் தொடரும் நிழலாகும். ஆனல் அது முற்பிறப்பில் வளர்ந்ததைப்பொறுத்தே உயர்வோ தாழ்வோ உடையதாயிருக்கும். விலங்குகளில் கற்பனைத் திறன் உண்டு. அதிலும் யானை, குரங்கு, நாய், கிளி முதலியவற்றிற்கு மற்றவற்றினும் அதிகம். ஆனல் மனிதன் அவற்றினின்றும் உயர்ந்தவன். அவனுக்கு அவ் யானை முதலியவற்றினும் அதிகமே.

பகுத்தறிவுடைய மனிதன் கற்பனையைப் பண்படுத்தும் உழவன். கற்பனை இளங்கன்றுபோல துள்ளும் உணர்ச்சியுடைத்து. அதனைத் திருத்துவது பகுத்தறிவே. மேற்றோலின் உறுதிகொண்டு பழத்தின் முதிர்ச்சியையறிதல்போல, அறிவின் விளக்கத்தைக் கொண்டு ஒருவனுடைய கற்பனைத் திறனை மதிக்கிறோம். அறியாமையில் எழுங் கற்பனை மங்கலானது. அது பழியையும், வாழ்வில் அழிவையும் தரும். அறிவில் ஊறுங் கற்பனை ஒளியும், புகழும் வாழ்வில் இன்பத்தையும் மலர்த்தும் இயல்பினதாகும். இதனல் கற்பனை ஓர் ஆற்றுநீர்போன்ற தெனவும் அதனை மனிதன் பண்புக்கேற்ப, நஞ்சை நிலத்திலோ அன்றிப் பாலையிலோ பாய்ச்சலாம் எனவும் தெரிகிறோம்.

என்றும்நிலைத்திருப்பது உண்மை கற்பனை அதாவது கற்பித்தல் என்பது தோற்றுவிப்பது. தோன்றுவது அழியும். ஆகையால் கற்பனையென்பது பொய். இவ்வுலகமுங் கற்பனையே (பொய்யே) எனக் கற்பனையைப்பற்றி வேதாந்த மதம் (மாயாவாதம்) கூறுகிறது. இளிஞ்சலில் வெள்ளியும், கயிற்றில் பாம்பும், கற்பனையென அம் மதங் கூறும். ஆனல் அது உண்மையாயினும், வெள்ளியும் பாம்பும் ஆராய்ந்துணருங்கால் உண்மையானக் கிளிஞ்சல், கயிறு இவற்றின் வெளித்தோற்றமின்றி ஒன்றுமில்லாததோர் காட்சியின்மை போலக், கற்பனையும் ஓர் உண்மையை யுணர்த்தும் நற்காட்சியே யாகும்.

அஃதின்றி, வாழ்வில் உண்மை காண்டல் இல்லை. அதுபோலக் கற்பனையின்றி வாழ்வில் அறிவென்பதில்லை. கற்பனை என்பது பொதுவாக நினைவு. அது ஒளியுடன்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. மங்கலாகவும் இருக்கலாம். மங்கலைக் கழுவி மணியொளியை வெளிப்படுத்துவதே மனிதனின் கடமை. 'கல்' என்றுல் வெளிப்படுத்தல் என்பதுதானே பொருள்.

மனிதன் உறங்கும் போதும், இறக்கும்போதுந் தவிர அவன் உள்ளத்தே கற்பனையைப் பெருக்குவதே தொழிலாக இருக்கிறுன். எந்த வேலையும் நிற்கும். அவ் வேலைமட்டும் நிற்காது. நிறுத்தவும் முடியாது. வானெலி அலைகள் உலக முழுதும் பரவுதல்போல் கற்பனை அலைகளும் (நினைவு அலைகள், மனேவுலகத்திலே, உலக முழுதும் பரவுகிறது. அதனுற்றன் உலகமெங்கும் அடிப்படையான உண்மைகளைப்

பற்றிய கொள்கைகள் ஒன்றுயுள்ளன என்பது பல மனேதத்துவ அறிஞரின் கொள்கையாகும், அயர்லாந்தின் A. E. என்ற ஆங்கில மெய்யறிஞர் இவ்வுண்மையைத் தமது நூலில் நன்கு விளக்குகிருர். ஆதலின் உலகை வளர்க்கும், அறிவை, வாழ்வை உருவாக்கும் கற்பனைகள் செம்மையாகஇருத்தல் வேண்டும். உலகில் ஒவ்வொரு மனிதனும் அதற்குப் பொறுப்பாளி. தர்மகர்த்தா. உலகிற்ரேன்றும் ஒவ்வொரு தீய கற்பனைக்கும் ஒவ்வொருவனும் பதில் சொல்லவும், அதற்குத்தானும் ஓர் குற்றவாளியே என ஒப்புக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிருன்.

யுத்தவெறி பிடித்தவர்களின் தீய கற்பனைகள் இன்று உலகிற் பிளவினையும் போரையும் ஆக்கி அழிவைத்தேடின. காந்திஜி, புத்தர், ஏசு இவர்களின் கற்பனைகள் உலகையன்பாற் பிணைத்து வளர்க்கின்றன, அறிஞர், மெய்ஞ்ஞானிகள், கவிஞர் இவர்கள் கற்பனையின் செல்வர்கள். அவர்கள் உள்ளம் சொல், நூல்கள் எல்லாம் கற்பனைக் களஞ்சியங்கள்.

இறைவன்கற்பனைக்கடந்தசோதி (உண்மை) உலகம் இயற்கையின் (இறைவனின்) கற்பனை. வாழ்வு அறிஞரின் கற்பனை. நூல்களும் கவிதைகளும் புலவனின் கற்பனைகள். மாயாவாதிக்கு உலகமே கற்பனை. இன்பமும் துன்பமும் உள்ளக் கற்பனை. வெற்றி, தோல்வி கோழையின் கற்பனை. பொய்யென்பது அறியாமை சூழ்ந்தோரின் கற்பனை. இறைவனுக்கு உருவம் மதங்களின் கற்பனை. சட்டங்கள் அநீதியுடையோரின்கற்பனை இக் கட்டுரை என் கற்பனை. ஆனல் அக் கற்பனையே உண்மையின் வெளியுருவம் அதுவே வாழ்வில் இன்பம். இன்பம், கற்பனை, கல்வி, கலைகள், கேள்வி, நற்காட்சிகள், சிந்தித்தல், யோகம் இவற்ருல் மலர்ந்து கனிவதாகும்.

---


## புதிய பதிப்புகள்

| | |
|---|---|
| பிரதிக்ஞை | 1—0—0 |
| மலர்ந்த இதழ் 1. | 1—4—0 |
| இதய ஒலி | 1—12— |
| புகழ்மாலை | 1—12— |
| அமுதமொழி | 2—8—0 |
| (மலிவுப் பதிப்பு) | 2—0—0 |
| உதய சூரியன் | 1—4—0 |

## முக்கிய அறிவிப்பு.

சந்தா அனுப்புவோர் ஒரு வருடத்திற்குக் குறைந்து அனுப்பக் கூடாது என்பதை கவனிக்கவும். சில்லரை சில்லரையாக அனுப்புவதால் கணக்கு வைத்துக்கொள்வதில் வீண் சிரமமேற்படுவதுடன் பின்னர் சஞ்சிகை கிடைக்குமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது.

—மானேஜர்

# மலர்ந்த இதழ்

38

அதிகாலையின் அத்புதத்தோற்றம் மொத்தத்தில் எல்லோருடைய உள்ளங்களையும் பரவச முறச் செய்யும் என்றாலும், சிறந்த பக்திமான்களையும், அபார அறிவாளிகளையும், பரிசுத்த இதயத்தையுடைய யோகிகளையும், துறவிக்குச் சமதையான வைராக்யம் படைத்த சிலர்களையும். பச்சை பாலகர்களையும் ஆகர்ஷிப்பதுபோல் மற்றவர்களை ஆகர்ஷிப்பது கிடையாது.

சாதாரணமனிதர்களில் சிலருக்கு அத்புதமான அதிகாலை நேரத்தில் தான் ப்ரம்மானந்தமான தூக்கம் வருகிறது, அத்தூக்கமே அவர்களுக்கு சொர்க்கப் பதவியாயிருக்கும்போது மற்ற எதுதான் வேண்டும்? குளிர்ந்த ஜலத்தில் நீராடி ஆரோக்யத்தையும் பக்தியையும் அடைந்து பகவத்யானம் செய்யும் யோகிகளுக்கும், யோகிகளின் பரிசுத்த இதயத்தில் ஒரு சிறிது பெற்றுள்ள மகான்களுக்கும் அதுதான் பேரானந்தம் என்று கூறவேண்டுமா?

அத்தகைய அத்புதமான காலை நேரத்தில் கோழி கூவலும், பக்ஷியினங்களின் பேராரவாரமும் செவியுற்றுக் கதிகலங்கி புறக்கடைப் பக்கம் ஓடிய அகிலாவின் உள்ளம் புசல் காற்றில் அகப்பட்டுத் தவிக்கும் மரக்கலம் போல் தத்தளிக்கின்றது. கிணறுதான் தனக்கு அடைக்கலமும் ஆச்ரயமும் கொடுக்கும் சாந்தி தெய்வம் என்று எண்ணிக் கண்மூடித்தனமாகக் கிணற்றருகில் சென்றாள். குதித்து விடவே எண்ணினாள்....

அடுத்த நிமிடமே அவள் நிற்கும் இடம் பிறருடையது என்பதும் அயலார் வீட்டுக் கிணற்றில் விழுந்து செத்தால் தன் ஆவி பேயாயலையும் என்றும் அதனால் வீட்டுக்காரருக்கு என்றென்றும் வீண் நஷ்டமும், அபகீர்த்தியும், கிலியும் உண்டாக்கும் பாபத்தை வேறு கட்டிக் கொள்ள வேண்டுமா! செத்தும் ஊரார் வாயிலரைபட்டும் "பாவி படுபாவி!" என்று பெயர் பெற்றும் ஏன் உபத்திரவப்படவேண்டும்? பொது இடங்களிலுள்ள குளம் குட்டை, ஏரி, சமுத்திரம் இவைகள் கூடவா எனக்குச் சொந்தமில்லை... கால் போன வழியே போனால் கடவுள் வழி காட்டாமலா போவான்?"

என்கிற தைரியத்தை யடைந்துத் திரும்பி பார்க்காமல் விடுவிடென்று நடந்தாள். தான் எங்கு போகிறோம்... என்ன செய்கிறோம் என்பதே தோன்றாமல் அயோமயமான நிலைமையில் தான் ஒருவர் கண்ணிலும் படாமல் எங்காவது ஓடி விட்டால்... ப்ராணனை விட்டு விட்டால் போதும்... என்கிற ஒரே துடிதுடிப்புடன் ஓடினாள். துக்கம் அக்கினி போல் அவளை எரிப்பதால் காலை நேரத்தின் சிலு சிலுப்பான காற்றுகூட அவள் சரீரத்தில் படாமல் வெயர்வை வெள்ளம் ஓடியது.

தான் தினம் ஜலம் கொண்டு வரும் காவேரிக்குச் சென்றாள். அவளுக்கும் முன்னால் இரண்டு பேர்கள் காவேரியில் பெரிதாக உதயராகம் பாடிக் கொண்டே குளிப்பதை யறிந்து மனவருத்தத்துடன்... உம் என் பாபத்தின் நிழல்தான் இப்



படி ஆட்கள் மூலம் மறைக்கிறதா! என்று திகைத்து நின்ருள். பொழுது விடிந்து வெளிச்சமாகிக் கொண்டுவருவதால் என்னசெய்வதென்று தோன்ருமல் மீண்டும் வேறு கிணத்தை நோக்கி ஓடினுள்.

அக்கிணத்தில் ஏத்தம் இரைத்து நீர் பாய்ச்சிக் கொண்டிருப்பதைக் கண்டு "அடதலைவிதியே!......சாகத் துணிந்தவனுக்குச் சமூத்திரம் முழங்கால் என்கிற பழமொழி எனக்காகத்தான் ஏற்படுத்தினர்களோ! என்று மனது உடைந்து சலித்துவிட்டது. ஓட்ட ஓட்டமாக மீண்டும் ஓடினுள். அருணேதயம் ஆகிச் சிறிது வெளிச்சம் படராரம்பித்

ததும் அகிலாவின் வேதனை பன் மடங்காகப் பெருகியது.

அச்சமயம் சிறிது தூரத்தில் ஏரா ளமான ஜனங்கள் நடப்பது போன் றும் சல சல வென்று பேசுவது போன்றும் அரவம் கேட்டது. அவளை யறியாமலேயே அவள் கால்கள் வேகமாக அப்பக்கம் இழுத்துச் சென்றன.

சிறிது தூரம் போகும் போதே அந்த கும்பல் முற்றும் பெண்கள் மயமாயிருப்பதை தூரத்திலிருந்து அறிந்த அவள் உள்ளத்தில் விவ ரிக்க வியலாத ஒரு உத்வேகம் திடீ ரென்று கிளம்பியது. சுமார் 200 பெண்களுக்கு மேலிருக்கும் போல் தோன்றியதால் அவர்கள் யாரு, எங்கே போகிறார்கள், என்ன கார ணத்தினால் இத்தனை காலையில் போகிறார்கள் என்று அறிய மிகவும் ஆவல் உண்டாகியது.

ஒருவேளை அக்கூட்டத்தில் தன் னைத் தெரிந்தவர்கள் யாரேனும் இருந்தால் என்ன செய்வது? சாகக் கிளம்பிய எனக்கு ஏன் சித்த உறுதி குலைந்து சஞ்சலம் உண்டாகிறது?... எதற்கும் இக்கும்பலின் தகவலை யறிந்து கொண்ட பிறகு தான் நாம் எதாவது தீர்மானத்திற்கு வரவேண் டும்'' என்று முடிவு கட்டிக்கொண்டு வெகு வேகமாக நடந்து அந்த கும் பலுடன் கும்பலாகத் தானும்கலந்து கொண்டாள்.

இதயம் என்னவோ பட பட வென்று அடித்துக் கொள்கிறது. கால் என்னமோ நடக்கிறது. சிறிது தூரம் கூட நடந்தாள். அங்கு செல் கிறவர்களில் சற்று வயது முதிர்ந்து காணப்பட்ட அம்மாளை நெருங்கிய அகிலாபாய் "அம்மணி! நீங்கள் எங்கு போகிறீர்கள்? எங்கேனும் திருவிழா நடக்கிறதா! நானும் வர லாமோ என்று கேட்கிறேன்." என்று மிக்க சிரமப்பட்டு தைரி யத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

அதற்கந்தம்மாள் நகைத்துக் கொண்டே "நீ யாரம்மா! வழி யோடு போகிறவளா... அன்றி எங்கள் கூட்டத்தை வேடிக்கைப் பார்க்க வந்திருக்கிறாயா?...கோயிலு மில்லை. திருவிழாவுமில்லை. ஸ்வா மியை நேரில் ஸேவிப்பதைக்காட்டி லும் இதய பூர்வமான பரிசுத்த அன்புடன் அவனை ஸேவித்தபடியே பரோபகாரம் இதம் சரீரம் என்கிற படி உலகத்திற்கு உபகாரமாக ஒரு காரியத்தைச் செய்தால் அதுதான் பகவானுக்கு மிக மிக உகப்பானதா கும். அந்தமாதிரி திருப்பணி செய் வதுதான் எங்களுக்குத் திருவிழா வைவிட மேன்மையானது. பெண்ணே! இந்த பெண்களின் துர்ப்பாக்யத்தையும் அனாதைத்தன் மையையும் கேட்டால் நீ கண்ணீர் வடிப்பாய், இவர்களில் பாதிபேருக் குமேல் கணவனால் விலக்கித் தள் ளப்பட்டவர்கள். சிலர் விதந்துக்கள்; சிலர் கன்னிப்பெண்கள். சிலர் கல் யாணமாகி கணவனின் அட்டுழியங் களைச் சகிக்காமல் குடும்பத்தையும் தாங்க சக்தியில்லாமல் குழந்தைக ளுடன் நல்லதங்காள் போல் தவிப்ப வர்கள்.

இம்மாதிரியான நிராசைப் பிண் டங்கள் நம் நாட்டில் எத்தனையோ இருக்கின்றன. கூடுமானவரையில் இவர்கள் போன்றவர்களின் துன் பத்தைத் தீர்த்து ஆதரவளித்துக் கல்வி போதித்துக் கைத்தொழிலும் கற்பித்து அந்தந்த துறைகளில் அவ ரவர்களைக் கைதூக்கி விடுவதற் காக ஒரு புனிதமான சங்கத்தை கலியுக மீராபாய் என்று போற்றப் படும் ஒரு அம்மாள் ஏற்படுத்தியிருக் கிறார்கள். அந்த தேவியைப்பற்றி

பேசுவதென்றால் நாட்கணக்கில் ஆகும்.

[குறிப்பு. மதுரகீதம் என்கிற அத் புதமான நாவலைப் படித்து கலியுக மீராபாயின் ஆச்சரியமான சரித்தி ரத்தை அறிந்து இன்புறலாம்.]

அந்தம்மாளின் அபாரமான த்யா கத்தின் ப்ரகாசம் இப்படி எல்லாம் பரவி ஜ்வலிக்கின்றது. அவர்களி டம் சம்பளம் பெற்று வேலை செய் யும் ஸேவகிதான் நான். அவர்க ளின் ஆணைப்படி இவர்களை ஸ்ரீ கோகுலம் என்கிற ஊருக்கு அழைத்துச் செல்கிறேன். நீயும் வருவதாயின் தாராளமாகவரலாம்'' என்றாள்.

இந்த விஷயத்தைக் கேட்டவு டனே அகிலாவின் மனத்தில் எண் ணிலாத எண்ணங்கள் அலைமோதிக் கொந்தளித்தன. இப்படியும் ஒரு திருப்பணியும் சங்கமும் இருக் கிறதா என்று ஆச்சரியக் கடலில் மூழ்கினாள். உடனே அந்தம்மாளை நோக்கி, "அம்மணி! இப்போது கூடவரும் பெண்கள் அத்தனை பேரும் தாமாகவே வந்து சேர்ந்த வர்கள்தானா?...

என்று முடிப்பதற்குள் அந்தம் மாள் சற்று சிரித்தவாறு..."ஐயோ! பேதையே! நாங்களாக கங்காணி போல் இழுத்துக்கொண்டு வந்துவிட் டதாக நினைக்கிறாயா...அப்படிப் பட்ட எண்ணமிருந்தால் அதை உடனே போக்கிக்கொள்ளு. இத் தனை பெயர்களும் அவரவர்களின் பூர்ண சம்மதத்துடனும், பெரியவர் களின் முழு சம்மதத்துடனும் கவுர வமாயும் கம்பீரமாயும் வந்திருக்கி றார்கள். இவர்களில் ஏழைகளும் இருக்கிறார்கள். மிக்க பணக்காரர் களும் இருக்கிறார்கள். ஏன்... இத் தனை கேள்வி கேட்கிறாய்?... நீயும் வந்து சேருகிறாயா...என்றாள்.

அதைக் கேட்ட அகிலாவின் உடம்பே சிலிர்த்துத் தூக்கிவாரிப் போட்டது. "தற்கொலை புரிந்து கொள்ளவந்த எனக்கு ஏன் மனம் இப்படி திடீரென்று சபலித்து ஊச லாடுகிறது? பிறந்தது முதல் இன்ற ளவு ஒரு விதத்திலும் கடுகளவுகூட உபயோகமும் உபகாரமும் இல் லாது பாழாய்ப்போன ஜன்மம் எடுத்து முடிவில் தற்கொலையும் புரிந்து செத்து பிசாசாக அலைந்து அப்போதும் துன்பப்பட்டுச் சாவது தான் என் கதியா! என் விதியா! ஏன் நானும் ஒரு உபகாரமான காரி யத்தைச் செய்துப் பின் சாகக் கூடாது? இனி என்னை யார் என்ன சொல்லவிருக்கிறது? ஒண்டிக் கட் டைப் பிழைப்பான பிறகு யாரு டைய தாக்ஷிண்யத்தைதான் நான் எதிர்பார்க்கவேண்டும்? ஆத்மார்த் தமான வேலையைச் செய்து தொண்டுபகவானுக்குமுகோல்லாஸ மாய் பரிசுத்தமாக என் காலத்தை நான் எங்கு கடத்தினால் தான் என்ன? இனி நான் யாருக்காக பயப்படவேண்டும்? யாருக்காக ஒளியவேண்டும்? ஊரைவிட்டு ஊர்போய் என் வேஷத்தையே மாற்றிக்கொண்ட பிறகு என்னை யார் கண்டுகொள்ள முடியும்?... நானும் வருகிறேன் என்று ஏன் சொல்லிவிடக்கூடாது?...

என்று பலமான யோசனை செய் துக் குழம்பினாள். அடுத்த க்ஷணமே தன்னுடைய கைவிரலின் அலங் கோலத்தைக் கண்டு துடித்தாள். முடத்திற்குச் சமானமாக உள்ள நான் எந்த காரியத்திற்கும் லாயக் கில்லாது போய்விடுவேனே! என்று தோன்றியபொழுது துக்கம் துக்க மாகப் பீறிக்கொண்டு வந்தது. மறு படியும் "ஏதாவதொரு காவல் வேலைக்குக்கூட உதவ மாட்

டோமா ?" என்று எண்ணியவளாய் அந்தம்மாளை நோக்கி "அம்மணி! என்னைக்கூட சேர்த்துக் கொள்கிறீர்களா! நான் திக்கற்ற அனுதை. என் கணவன் சண்டைக்கு பட்டாளத்தில் சென்றவர் வெகு நாளாக வரவே இல்லை. தகவலும் இல்லை. ஆகையால் நான் இந்த ஸேவையிலீடுபடுகிறேன். என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள்' என்றுள்.

அந்தம்மாளும் சர்வசம்மதத்துடன் அவளையும் கூட்டத்துடன் சேர்த்துக் கொண்டு ரயிலுக்கு ஓடினுள். சிறிது தூரத்திலே ரயில்வே ஸ்டேஷன் இருந்ததால் ஏற்கனவே ஒரு தனி பெட்டியை ப்ரத்யேகமாய் ஏற்பாடு செய்திருந்தபடி இவர்கள் மொத்த பேரும் பெரிய வண்டியில் ஏறிக்கொண்டார்கள்.

சாவதானமாகரயிலில் உட்கார்ந்த உடனே அந்த பெரியம்மாள், அகிலாவின் பக்கத்தில் வந்து "உன் பேர் என்ன... ஊர் எது?" என்று விசாரித்தாள். அகிலா சற்றும் தயங்காமல் "எனக்கு ஊருமில்லை. பேருமில்லை. நான் திக்கற்ற அனுதை. உற்ருர் உறவினர் யாருமே கிடையாது. சகலமும் கணவன்தான் என்றிருந்தேன். அவனும் ஏமாற்றி விட்டான். ஆகையால் எனக்கு இந்த உலகமே பிடிக்காது, உண்மையில் நான் தற்கொலை புரிந்து கொள்ளவே ஓடிவந்தேன். ஒளிக்காமல் சொல்லி விட்டேன். என் உயிர் இத்தனை நேரம் பிரிந்திருக்கும். தூரத்தில் உங்களைப் பார்த்த பிறகு என்னை எங்கே பார்த்து விடுவீர்களோ என்கிற அச்சத்திஞல் பேசாமல் மறைந்தேன். ஒரே மட்டாக இத்தனை பெண்களைப் பார்த்ததும் எனக்கே ஏதோ மாதிரி மனது சபலித்தது. மதம் விட்டு மதம் மாற்றுவதற்குக் கூட இப்படி அழைத்துப் போவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபோலிருக்குமோ! என்று கூட ஐயமுற்று நாஞக வந்தேன். எனக்கும் உலகமே வெறுத்து விட்டதால் மனது குழம்பியது...என்று ஏதோ தாறுமாருக மெஷின் போல் பேசிஞள்.

'ஐயோ! பாவம்! அசட்டுப் பெண்ணே! தற்கொலை புரிந்து கொள்வதாகவிருந்ததை போலீஸார் பார்த்தால் கூட உன்னை கைதியாக்கிக் காவலில் வைத்து விடுவார்கள் தெரியுமா... ஏதோ பூர்வ ஜென்மத்தின் கர்மபலஞல் நீ அதிக கஷ்டங்களை அனுபவித்திருக்கலாம். அந்த பாபத்திற்கு இந்த ஜென்மாவில் பரிகாரங்கள் நல்ல மார்க்கத்தில் காலத்தைக் கடத்தி இகத்திற்கும் பரத்திற்கும் ஸார்த்தகத்தைத் தேடிக் கொள்ளாமல் இதென்ன துணிபு. இதஞல் யாருக்குத் தான் என்ன லாபம்?" என்றுள்.

அகிலாவின் குழப்பமும் ஆவலும் அவள் முகத்தில் ப்ரகாசித்தது கண்ட அந்தம்மாள் "என்ன யோசனை செய்கிருயம்மா?" என்றுள். "ஒன்றுமில்லை. நானும் கூட வருகிறேன்" என்று தைரியமாகக் கூறிஞள். உடனே ஒரு பதிவு புத்தகத்தை எடுத்து "உன் பெயர், ஊர். முதலியன சொல்லும்மா!" என்றுள்.

"என் பெயரா! எனக்கு என் தாய் வைத்த பெயரால் ஒருவித மான சுகத்தையும் நான் இதுவரையில் அடையவில்லை. எனக்கு அப்பெயரிலேயே வெறுப்பு வந்துவிட்டது. ஏதோ.....மண்ணு, கல்லு.... என்று உங்களிஷ்டப்படியே எழுதிக்கொள்ளுங்கள்" என்று மிக்க சலிப்புடன் கூறிஞள்.

இதேபோல் எத்தனையோ பேர்கள் சொல்லிக் கேட்டுக் கேட்டுத் தலை பொட்டை பிறந்து போனதால் அதைக் கேட்டு தலைவி ஒரு சோகச் சிரிப்பு சிரித்து பரிதாபமாய் பார்த்தாள் "அம்மணீ !......உன்னிதயம் எவ்வளவு நொந்துபோயிருக்கிறது என்பதை உன் முகமும் உன் வார்த்தையுமே நன்கு காட்டுகின்றன. உன்னை நான் தொந்தரவு செய்ய முயலவில்லை. தற்சமயம் அதிகாலை நேரமாதலால் தாமரைகள் சூரியனைக் கண்டு மலரும் நேரம்...உன் முகம் தாமரையைப் போல அழகாகவிருந்தும் அதை மலரச் செய்யும் சூரியனே இதுவரையில் உதயமாகவில்லை என்று நினைக்கிறேன். என் தலைவியின் ஆதரவும் சங்கமும் இன்று உன் வாழ்வில் சூரியனைப் போல் தோன்றி உன்னகத்தையும் முகத்தையும் மலர்ந்த இதழ் போன்று பிரகாசிக்கச் செய்திருப்பதால் உனக்கு புஷ்பம் என்கிற பெயரே வைக்கிறேன். என்ன !... சரிதானே !...என்று சமத்காரமாகப் பேசினாள்.

இதைக்கேட்ட அகிலாவின் உள்ளம் பரமானந்தமடைந்து அபாரமாய் பூரித்தது. தலைவியின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு "தாயே! தாங்கள் வைத்த பெயராவது உபயோகமானதாக அமைந்து அப்புஷ்பம் பகவானின் திருவடிகளுக்கு அர்ப்பணமாகவேண்டும். பிணத்தின்மீது தூவும் புஷ்பமாக ஆகாமல் அவனருள் சுரக்கவேண்டும்" என்று வேண்டினாள். அப்போது அவள் கண்களில் பலபலவென்று நீர் வழிந்து ஓடியது.

இரண்டு மூன்று நாட்கள் கடந்துவிட்டன. அகிலாவின் வாழ்க்கைப் பாதை முற்றிலும் புதிய ஜென்மம் எடுத்ததுபோன்று மாறி ஆனந்த பிம்பமாக ஆய்விட்டாள். கலியுக மீராவின் பரிசுத்த பிம்பத்தின் தரிசனமும் அவளுடைய தூய சேவையின் மகிமையையும் அந்த ஆச்ரமத்தின் மகோன்னத நிலைமையையும் கண்டு கட்டுக்கடங்காத பூரிப்படைந்து மீராவின் திருவடிதான் தனக்குத் தஞ்சம் என்று அடைக்கலம் புகுந்துவிட்டாள்.

தானும் வடநாட்டார்போல் உடையணிந்துகொண்டதோடு தன்னை எந்த காலத்திலும் யாரும் கண்டு கொள்ளமுடியாதிருக்கும்பொருட்டு கருப்புக் கண்ணாடியொன்று சதா கண்களில் ப்ரகாசிக்கும்படிக்குச் செய்தாள். பழயதுக்கங்கள் சிறுகச் சிறுக மறைந்துபோனதாகவே அவளுக்குத் தோன்றியது.



# 39

அமராவின் மனத்துடிப்பும் படபடப்பும் விநாடிக்கு விநாடி கனவேகமாகி விட்டது. தன் பர்ஸிலிருந்து கடிதத்தை எடுப்பதும் மீண்டும் வைப்பதுமாகக் குழம்பித் தவிப்பதை எங்கே அவன் பார்த்து விடுவானோ! என்கிற கலக்கமும் உண்டாகியது. மெல்ல கடிதத்தை எடுத்து தைரியமாகக் கொடுத்தே விடுவது என்று துணிவுடன் வெளியில் கவரை எடுத்தாள்.

அதேசமயம் இவள் சற்றும் எதிர்பாராத விதம் கார் ஒரு தோட்டத்திற்குள் நுழைந்து சிறிது தூரம் சென்றதும் தடாரென்று நின்றுவிட்டது. தான் வரவேண்டிய இடம் இதற்குள்ளாகவா வந்துவிட்டது என்று திடுக்கிட்டவளாய் கடிதத்தை சடக்கென்று மறைத்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். எதிரில் கட்டடமே தென்படாது வெறும் தோட்டமாகக் காணப்பட்ட இவளுக்கு மிக்க சந்தேகமும் ஒருவிதமான பயமும் உண்டாயின.

இதற்குள் அந்த வாலிபன் காரை விட்டிறங்கியதும் மிக்க மரியாதையுடன் ஒரு கடிதத்தை அமராவின் முன்பு நீட்டி "அம்மணீ! தயவு செய்து இதைப்படித்து இப்போதே இதற்குப் பதில் கொடுக்க வேண்டுகிறேன்" என்று கூறி கடிதத்தை அமராவின் முன்பு வைத்துவிட்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் தலை குனிந்தவாறு நகர்ந்தான்.

இந்த செய்கையின் மர்மமும் காரணமும் தெரியாத அமராபாயிக்கு ஒன்றுமே தோன்றாது திகைப்புண்டாகியது. கவரின்மேல் "ஸ்ரீமதி அமராபாய் அவர்கள்" என்றெழுதியிருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் கடிதத்தைப் பிரித்தாள். பயமும் திகிலும் ஒருபுறம் வாட்டுகின்றன. இதில் என்ன எழுதியிருக்கும்... ஒருவேளை எனது அந்தரங்க ரகஸியமறிந்து அதைப் பற்றித்தான் எழுதியிருப்பானோ?" என்று நினைக்கும்போது அவள் தேகமே நடுங்கியது. தன்னைப்பற்றித்தான் இழிவாயும் கேவலமாயும் நினைத்து தாறுமாறாய் எழுதியிருப்பானோ! அன்றி தன் தகப்பனருக்கும் இந்த விஷயத்தைத் தெரிவித்திருப்பானோ! என்றெல்லாம் பயமும் திகிலும் உண்டாகிக் கலக்கிவிட்டன. மெல்ல சமாளித்துக்கொண்டு கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள்.

"கண்ணியம் பொருந்திய பெண்மணியே!...நான் இம்மாதிரி ஒரு கடிதம் எழுதுவேன் என்று கனவில்கூட நீங்கள் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள். இம்மாதிரி செய்வதைக் குற்றமென்றுகூடச் சிலர் கண்டிக்கலாம். ஆனால் குற்றமென்றுக் கருதும் சில காரியத்தில்கூட நன்மை இருப்பதாயின் குணத்தையே ப்ரதானமாய் நோக்க வேண்டுமேயன்றி குற்றத்தை மறந்து விடலாமல்லவா! தங்கள் குடும்ப கண்ணியத்தைப் பற்றியும் தாங்கள் உயர்தர படிப்பு படித்தும் உத்தமகுணமும் ஒழுக்க சீலமும் சிறிதும் பிறழாமல் வெகு மேன்மையான முறையிலே இருப்பதையும் நான் ஆஸ்பத்ரியிலுள்ள நர்ஸ்கள் மூலம் அறிந்து பரம சந்தோஷ மடைகிறேன். படித்துவிட்ட கர்வத்தினால் தலைகால் தெரியாமல் நவ நாகரீகப்பேய் பிடித்து ஆடும் மங்கையர்களைப்போல் தாங்களும் இருந்தால் நான் இக்கடிதத்தை எழுதமாட்டேன். மகா சீலவதியாயுள்ள உங்களை நான் அசௌகரியப் படுத்த விரும்பவில்லை. தங்களை நான் என்னுடன் பிறந்த சகோதரி

யைப் போல் பாவித்து எனது வாழ்க்கை மர்மத்தைத் தங்களிடம் கூற முன் வந்தேன். இதைக் குற்றமாக எண்ணக்கூடாது.

நான் வெளிநாடு சென்றிருந்த போது என் மனதிற்கினிய ஒரு மங்கையை பரஸ்பர காதலுடன் கல்யாணம் செய்துகொண்டேன். அவள் வெள்ளைக்காரியாயினும் என்பாலுள்ள அன்பினால் அவள் ஹிந்துவாக மாறி சுசீலா என்கிற பெயருடன் விளங்கி என்னை மகிழ்விக்கின்றாள். எங்கள் அன்பால் பூத்த மலர்கள் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இருக்கின்றன. இந்த ரகஸ்யத்தை என் பெற்றோர்கள் அறிந்தும் ரகஸியத்தில் நடந்துள்ளதை ஒப்ப முடியாதென்றும் தமக்கு பகிரங்கமாக மருமகளும் பேரன் பேத்திகளும் வேண்டும் என்றும் விரும்பி அதைமறைத்து இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நானும் அதற்குக் கட்டுப்பட்டுத் தங்களை மணந்து விட்டால் பிறகு இந்த ரகஸியத்தை அறிந்து வாழ்க்கையில் கசப்பும் வெறுப்பும் கொண்டு வீணாக வாழ்நாளை பாழ் நாளாவதைவிட முன்னாலேயே இதைத் தெரிவித்து விடுவது உசிதமென்று தோன்றியதால் தெரிவித்து விட்டேன். தங்களுக்கு இது மிகவும் சந்தோஷத்தையே அளிக்குமென்பதை நானறிவேன். ஏனெனில் என்னை நீங்கள் விரும்பவில்லை என்பதை முகக் குறிப்பாலேயே நான் முதல் நாளே அறிந்துகொண்டேன். நான் தங்களிடம் அபாரமான அன்புடையவன் போல நடித்துத் தங்கள் முகத் தோற்றத்தை ஆராய்ந்தேன். மெத்த சந்தோஷமாயிற்று. தங்களுக்கு இஷ்டமில்லை என்பதைக்கூறி இந்த விபத்தை நிவர்த்திக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். இதற்குப் பதிலை உடனே எழுதிக்கொடுத்தால் நலம்.

இங்ஙனம் தங்கள்
சகோதரன்......"

அமராவுக்கு உண்டாகிய சந்தோஷத்திற்கு ஓரெல்லையே வகுக்க முடியாது. சற்று முன்பு துடிதுடித்த மனதிற்கு திடீரென்று அமுதப்ரவாகம் பாய்ந்தது போன்றும், ஸாம்ராஜ்யப் பதவியே தனக்குக் கிட்டி விட்டது போன்றும் அவளை ஆனந்தக்கடலில் மூழ்க்கியது. நல்லவேளையாகத் தான் கடிதத்தை முதலில் கொடுக்காதிருந்தோமே......என்று பூரித்தாள். இம்மாதிரி விஷயத்தில் உண்மையை உரைத்த அந்த மனிதனை மனமாறப் புகழ்ந்தாள். உடனே கடிதமெழுதினாள்.

"அன்பு அழைப்பிற்கு மிக்க வந்தனம். நான் கல்யாணத்திற்கு சம்மதிக்கவில்லை. என்னை மன்னிக்கவும்.

அமராபாய்."

என்று எழுதி அதைத் தனி உறையிலிட்டு வைத்தாள். சென்ற வாலிபன் வருகிறானா என்று வழி பார்த்தாள். அவன் சற்று தாமதமாகவேவந்தான். வரும்போதே அமரா அவனைப் புன்னகையுடன் வரவேற்று நமஸ்காரம் செய்து இந்த மகத்தான உதவியை நான் என்னாயுள் உள்ளளவும் மறக்கமாட்டேன் ஆண்டவன் உங்களைக் காப்பாராக. எனது சந்தோஷத்தை விவரிக்கப் பதங்களே கிடைக்கவில்லை. வெகு வெகுவந்தனம்"...என்றுகூறினாள்.

வாலிபனும் பரம சந்தோஷத்துடன் இந்தமாதிரி பதிலையே நான் எதிர்பார்த்தேன். என் மனைவியும் குழந்தைகளும் சீமையிலிருந்து வெகு விரைவிலேயே வருவார்கள். வந்தவுடனே தங்களைக் காண அழைத்து வருகிறேன்... சரி... இப்போது கார் எங்கு போகலாம்?...

அமராபாய் இப்போதுமுற்றிலும் மாறுபட்டு புதிய தெம்புடனும் சுறுசுறுப்பாயும் காணப்பட்டதால் சற்றும் சங்கோஜமோ, பயமோ, இல்லாமல் 'ஆஸ்பத்திரிக்கே போவது உசிதம். எனக்கு உடம்பு சரியாயில்லை என்றுகூறி இக்கடிதத்தைக் கொடுத்துவிட்டதாகச் சொல்லி விடுங்கள்' என்றாள். உடனே கார் பறந்தது. ஆஸ்பத்திரிக்கு வந்த ஜாடையே தெரியாமல் குஷியாக வந்திறங்கிப் பலமுறை வந்தனங்களும் சந்தோஷமும் தெரிவித்துக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு குசாலாய்ப்பாடிக்கொண்டே தடதடவென்று தன்னறைக்குச்சென்றாள்.

இதைத் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஆத்மநாதன் வியப்புடன் அமராவின் எதிரில் வந்து "இதென்ன! இப்போதுதான் போனாய்! இதற்குள் திரும்பி வந்துவிட்டாய்...என்ன சமாச்சாரம்?... என்று வியப்புடன் கேட்டார். அமராபாய் சிறு குழந்தையைப்போல் குதித்துக்கொண்டே "சமாச்சாரமா! ஒரு கூடை நிறைய இருக்கிறது. வாருங்கள்" என்று கூறியவாறு தன்னறைக்குள் சென்று உட்காரச் செய்து பிறகு "டாக்டர்! மக்கள் தம் தம் வாழ்க்கையில் தெய்வத்திற்கு எத்தனை மதிப்பும் நம்பிக்கையும் அந்தரங்கமான பக்தியும் வைத்திருக்கிறார்களோ, அதேபோல் தமது குடும்ப டாக்டரிடமும் வைத்திருப்பது தாமறிந்த விஷயமேயாகும். அத்தகைய பெரும் மதிப்பைத் தங்களிடம் நான் வைத்திருப்பதால்தான் உங்களிடம் என் பரம ரகஸியங்களையும் கூறத்துணிந்தேன். என்னைக் காப்பாற்றவேண்டும். இதோ இக்கடிதத்தை முதலில்படியுங்கள்...

வியப்பே வடிவமாய் ஆத்மநாதன் முதலில் கடிதத்தைப் படித்ததும் மூக்கின்மீது விரலை வைத்து ஆச்சரியத்தில் மூழ்கியபடி அமராவைப் பார்த்தார்...

அமராபாய் ஆனந்தப் பதுமைபோல் வீற்றிருப்பதைக் கண்ட டாக்டர் இக்கல்யாணம் நின்றுவிட்டதில் அவள் ப்ரம்மானந்தமடைந்துள்ளதை நொடியில் தெரிந்துகொண்டு "பேஷ்... ...சீமைக்குப் போய்வரும் கனவான்களில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது கனவான்கள் இதே கதியுடன்தான் திரும்புகிறார்கள். ஆனல் உண்மையை ஒளித்து இன்னொருத்தியை மணந்து பாழ்படுத்துகிறார்கள். இந்த பையன் பரமயோக்யன் என்று தெரிகிறது. இதில் உனக்கு சந்தோஷந்தானே......சரி......அப்பாவுக்கு இது விஷயமாக நீ எழுதுகிறாயா! நான் எழுதட்டுமா...உன் தாயாரின் விருப்பப்படியே இவ்வருஷம் கல்யாணத்தைச் செய்துகொண்டு அவர்களைச் சந்தோஷப் படுத்து. அவர்களுக்கு இஷ்டமான வேறு வரனைத் தேடும்படி எழுதுவதுடன் இந்த கடிதத்தையே அனுப்பிவிடலாம் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய் !" என்றார்.

அமரா:—டாக்டர்! இக்கடிதத்தை அனுப்பினல்தான் அப்பா நம்புவார். ஆகையால் அதை நீங்களே எழுதிக் கட்டாயம் அனுப்பிவிடுங்கள். ஆனல்...

ஆத்ம:—ஆனல் என்று ஏன் நிறுத்துகிறாய்?...சொல்லிவிடு. உனக்குத்தக்க கணவனை அப்பாவால் பார்க்க முடியுமோ முடியாதோ என்று சந்தேகப்படுகிறாயோ...என்று கேட்கும்போது அர்ஜண்டாக டாக்டரை அழைக்க ஒரு நர்ஸ் வேகமாகவந்து கூப்பிட்டாள்...சரி. நான் கடிதம் எழுதுகி

றேன்... என்று கூறிக்கொண்டு அவசரமாகப் போனூர்

எப்படியாவது அவரிடம் தனது அந்தரங்கத்தைச் சொல்லிவிட வேண்டுமென்று துணிந்தும் சமயம் தவறிவிட்டதே என்று அமராபாயிக்கு ஏக்கமே உண்டாகியது. அதோடு தனக்கு வரன் தேடும்படி எழுதிவிடப் போகிருரே! என்று பயமும் கவலையும் உண்டாயின. டாக்டரிடம் தனது மனத்திலிருப்பதைச்சொல்லி அவர் மூலமே இதை நடத்திக்கொள்வதுதான் உசிதமென்று தோன்றியதால் மறுபடியும் டாக்டர் எப்போது வருவார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

அன்று பூராவும் டாக்டரைப் பார்க்கமுடியாது போய்விட்டால் என்ன செய்வது...என்ற கவலை உண்டாகியதால் தானே நேரே டாக்டரின் தனியறைக்குப்போய் பார்த்துத் தன் தகப்பனருக்குக் கடிதம் எழுதும்போது வரன் தேடும்படி எழுதவேண்டாம் என்றும் மறுபடியும் உடம்பு சரியில்லாததால் இன்னும் சில மாதங்கள் கழித்து விவாகத்தைச் செய்யலாம். என்றும் டாக்டரின் யோசனை கூறுவதுபோலவே எழுதிவிடச் சொல்ல வேண்டுமென்று தீர்மானித்தாள். அந்த தீர்மானமே அவளுக்கோர் ஆறுதலாகத் தோன்றியது.

## 40

எத்தகையோருக்கும் சாதாரண நிலைமையில் இருந்தால் நேரம் போவதே தெரியாது. மனத்தில் பரபரப்பும் துடிதுடிப்பும் ஒருவித கவலையும் ஏக்கமும் இருக்கும் யாருக்கும் பொழுதுபோவது பெரிய பாரமாக விருப்பதோடு ஒவ்வொரு வினடியும் ஒவ்வொரு யுகமாகவிருக்கும் என்பதில் ஐயமுண்டா? நிமிடத்திற்கு நிமிடம் கடியாரத்தைப் பார்த்தால் அது எப்படி நிமிடம் நகராமல் மணிநேரம் கடக்க முடியும்?

வெகு ப்ரயாசையுடன் சிறிது நேரம் பார்த்த அமராபாயிக்கு அதற்குமேல் பொறுமை வகிக்க முடியவில்லை. நேரே தடதடவென்று டாக்டரின் தனியறைக்கு எழுந்து சென்ருள். டாக்டரிடம் மிகவும் ஸ்வதந்திரமும் மரியாதையும் கொண்டிருப்பதால் சொந்த மனிதர்களிடம் பழகுவதுபோலவே பழகி வந்தாள்.

டாக்டர் ரூமுக்குள் அமரா பரபரப்புடன் "டாக்டர்... என்று கூப்பிட்டவாறே போனுள். மேஜைமீது முழங்கைகளைத்தாங்கி அதன்மேல் தலையைச்சாய்த்துக்கொண்டு அபாரமானயோசனையில் உட்கார்ந்திருந்த டாக்டர் கோகுல்நாத் இக்குரலைக் கேட்டதும் கனவு உலகிலிருந்து சடக்கென்று தட்டிஎழுப்பப்பட்டது போல் அலறியவாறு... "ஆ... அமராவா!"...என்றுதலைநிமிர்ந்துகூறத் திறமற்ற வியப்பு...திகைப்பு... அன்பு...அளவற்ற ப்ரேமை...எல்லாம் ஒருங்கே ஜ்வலிக்கும் பார்வையுடன் பார்த்துத் தம்பித்தான்.

டாக்டர் ஆத்மநாதன் உட்கார்ந்திருக்கிருர் என்று எண்ணி வெகு பரபரப்புடன் கூப்பிட்டு நின்ற அமராபாயிக்கு அங்கு காட்சியளிக்கும் தன்னுயிர் மூர்த்தியைக் கண்டதும் இன்னதென்று விவரிக்க முடியாதவிதம் உணர்ச்சிப்பதுமை போல்...ஹா!...நீங்களா! மன்னிக்கவேண்டும்...பெரிய டாக்டர் என்று...என்று முடிப்பதற்குள் கோகுல்நாதன் அமராபாய்...பயப்படாதே...பாதகமில்லை...ஏன் இத்தனை பதட்டம்...ஆமாம்! இதற்குள்ளாகவா போய் விருந்து சாப்பிட்டுவிட்டு, காதல் மூர்த்தியுடன்...

அமரா இடைமறுத்து......"டாக்டர்! மன்னிக்கவும். அந்த பேச்சை இனி எடுக்கவேண்டாம். பகவானை நம்புகிற எவரையும் அவர் ரக்ஷித்தே தீருவார் என்பதை நான் நிதர்சனமாகக் கண்டுகொண்டேன்...அதிகம்வளர்த்துவானேன்...கல்யாணம் நின்றுவிட்டது''...என்று பெருமிதமான சந்தோஷத்துடன் கூறினாள்.

இதைக்கேட்ட டாக்டர் ஒரு துள்ளு துள்ளியவாறு...என்ன! என்ன...கல்யாணம் நின்றுவிட்டதா! எப்படி...இது உண்மையான செய்தியா?...என்று தன்னை மறந்து கேட்டார்: எக்காரணத்தினாலோ திடீரென்று இருவரிடையேயும் பெரும் மவுனம் குடிகொண்டது. ஆனால் விழிகள் நான்கும் செய்யும் யுத்தம் எழுத்தில் அடங்காது.

அமராபாய் அடுத்தக்ஷணமே நாணத்தினால் தாக்கப்பட்டுத் தலை குனிந்தாள். அவளையறியாது கண்களில் ஜலம் முட்டி அது கன்னத்தில் முத்துக்கள்போல் உருண்டதைக் கண்ட கோகுல்நாதன் ப்ரமிப்புடன் "அமராபாய்! கல்யாணம் நின்றுவிட்டதேஎன்பதால் இக்கண்ணீரா..என்று முடிப்பதற்குள் அமராபாய் சடக்கென்று..." இல்லை...நின்றுவிட்டதற்காக ஆனந்தக்கண்ணீர்'' என்று கூறி அவனையே இமை இசைக்காமல் பார்த்தாள். கோகுல்நாதனும் ஏதும் கூறமாட்டாது வாயடைத்தது..."சரி...நான் வருகிறேன். பெரிய டாக்டர் வந்ததும் நான் அவசர காரியமாக அவரைப் பார்க்கவேண்டும் என்று தெரிவித்ததாகத் தயவுசெய்து சொல்லுங்கள்'' என்று அவசரமாகத் திரும்பினாள்.

"தேவி! தயவுசெய்து சற்று இருங்கள்! இதோ நானே வந்துவிட்டேன்! உட்காரம்மா...என்று சிரித்தவாறே கூறிக்கொண்டு பெரிய டாக்டர் வந்து அமராவை உட்காரவைத்தார். இருவருக்கும் அவமானமும் அதிர்ச்சியும் உண்டாயிற்று. கோகுல்நாத் வெளியே போக மெல்ல நழுவவாரம்பித்தான்.

அதைக்கண்ட ஆத்மநாதன்... "ஸார்! நில்லுங்கோ ஸார்...வெகு கஷ்டமான ஒரு கேஸை பூதக்கண்ணாடிகளின் உதவியால் வெகு ப்ரயாஸையுடன் கண்டுபிடித்துவிட்டேன். அமரா! இத்தனை சுதந்திரமாக என்னுடன் நீ பெத்தபெண் போல் பழகுகிறவள் உன் அந்தரங்கத்தை இத்தனைநாள் ஏன் தெரிவிக்காமலிருந்தாய்? அதை நான் அறிந்திருந்தால் அப்போதே காரியத்தை வெகு த்ருப்தியாய் முடித்திருக்கமாட்டேனா! அன்று அவர்கள் வந்தபோது நீ அழுததையும் உன் மனமாற்றத்தையும் கண்டு சந்தேகித்தபிறகு நானாக உன்னை நீயறியாதவாறு கவனித்துவந்தேன்.

உன்னுள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்ளன் வேறு எங்கேயுமில்லை. இந்த இடத்திலேயே இருக்கிறான் என்பதை வெகு விரைவில் கண்டுகொண்டேன். அதன் பிறகு நானே பெரிய யோசனையிலிருந்தேன். எதற்கும் உன் தகப்பனாரின் ப்ரியப்படி இன்று போய் வந்த பிறகு, சகுனம்சரியாயில்லை, என்று நானே உன் தகப்பனாருக்கு எழுதி கல்யாணத்தை நிறுத்திவிட நினைத்தேன். பகவானே இதற்கோர் அபூர்வமான வழியைக் காட்டிவிட்டார். மெத்த சந்தோஷம். என்ன.. கோகுல்!...தலை ஏன் கவிழ்ந்தே இருக்கிறது?...

என்றுகூறி தானே தலையை நிமிர்த்திவிட்டு கடகடவென்று சிரித்தார். இம்மாதிரியும் ஒரு எதிர்பாராவிதம் காரியம் அனுகூலமாகும் காலம் வரும் என்று அமராவோ

கோகுல்நாதோ எதிர்பார்க்கவே யில்லையாதலால்இச்சம்பவம் அவர்க ளிருவருடையஉள்ளங்களிலும்ஒரே சமயத்தில் ஒரே உணர்ச்சியில் ஒரேவிதமான ஆனந்தம், வெட்கம், சந்தோஷம், ஆகியஎல்லாம் பெரும் புசல்போல் கொந்தளித்தன.

அவ்விரு ஆத்மாக்களும் ஆத்ம நாதனை சாக்ஷாத் பேசும் தெய்வமா யும் தங்கள் கவிதீர்த்த கலியுகக்கட வுளாயும் எண்ணிப் பூரித்தன. அம ராபாய் மிக்க லஜ்ஜையுடன் ஆத்ம நாதனை வணங்கி "டாக்டர்!" இனி மேல் சகல பொருப்பும் தங்களு டையது" என்றுகூறி சடக்கென்று ஓட்டமாக புள்ளிமான்போல் துள்ளி மறைந்தாள். அடுத்த நிமிஷமே கோகுல்நாதனும் மழுமழுவென்று மவுனமாக மறைந்தான். இக்காட்சி யைக்கண்ட ஆத்மநாதனின்உள்ளம் பூரித்தது. அச்சமயம் தனது ஆதி கால சம்பவம் பூராவும் அவனது மனக்கண் முன்பு திரைக்காட்சி போல் தோன்றி அலாதியான ஆனந்தத்தைக் கொடுத்தது.

## 41

சாதாரணமானஒருபெண்பிள்ளை பேசுவதாகவே ஸாமிநாதனுக்குத் தோன்றவில்லை. சாக்ஷாத் பெண் தெய்வம்தான் தனக்கு ஹிதோபதே சம் செய்து தன்னைத் திருத்துவதா கத்தோன்றியது. ரத்னப்ரபாவைப் பார்க்கப் பார்க்க இரவு சொப்பனத் தில் தோன்றிய காளிகாதேவியின் உருவம் போலவே பயங்கரங்கூட உண்டாகவாரம்பித்தது. அம்பாளி டம் ப்ரமாணத்தைத் தெரிவியும். என்று ரத்னப்ரபா சொல்லும் போது அவன் தேகம் சிலிர்த்தது; நடுங்கியது.

உடனே அன்னை பராசக்தியின் முன்பு வணங்கி ப்ரமாணமேசெய்து கொண்டான். உடனே ரத்தின ப்ரபா குழந்தையைத் தானே அன் போடு வாரி யணைத்துக்கொண்டு மூத்தமிட்டு "ஸ்வாமி! பிடியுங்கள். குழந்தையை நல்ல டாக்டரிடம் காட்டி சரியானபடிசிகிச்சைசெய்ய வேண்டும். உமது புளுகு புரா ணத்தை நம்பி நான் ஏமாந்தேன். இந்த இரண்டு ஆத்மாக்களேயும் தவிக்க விட்டுவிட்டுத் தாங்கள் இம் மாதிரி வேஷம் போடுவதை அறிந்தி ருந்தால் நான் உம்மைச் சேர்த்தே யிருக்கமாட்டேன்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண் மணிக்கு நீர் சிலநாள் முன்பு பாடம் கற்பித்தீராமே.. அந்த பெண் பட்டம் பெறுவதற்காக இவர்கள் ஊரில் கூடிய மகாநாட்டிற்குச் சென்றி ருந்தபோது தற்செயலாக இந்தம் மாளேப்பார்த்துச் சகல விஷயமும் அறிந்து பச்சாத்தாபப்பட்டு உம்மி டம் சேர்ப்பதாகக்கூறி இவர் களுடைய தகப்பனாரின் சம் மதம் பெற்று இவர்களே அழைத்து வந்து தமது ஆதரவில் வைத்திருந்து நீர் இங்குவந்து பாடம் சொல்லும் விஷயத்தை விசாரித்தறிந்து என் னிடம் கொண்டுவிட்டார்கள். நான் உம்மிடம் ஒப்படைத்துவிட்டேன். இனி ஒழுங்காய் உலகத்தவர்களேப் போல் ஒன்றுபட்ட மனத்துடன் குடும்பம் நடத்தும். இந்தம்மாளின் பரிதாபத்திற்காகவும் குழந்தையின் போஷணைக்காகவும் நான் தங்க ளேயே பழயபடி எனது குருவாக ஏற்றுக்கொள்கிறேன். உமது வீட் டிற்கு குடும்பசகிதம் க்ரகப்ரவேசம் செய்யுங்கள்."

என்று பெரிய உத்திரவு போடு வதுபோல் கூறி உடனே அவர்களே அழைத்துச்சென்று அவ்வீட்டில் தானே கொண்டுவிட்டாள். ஒரு பெரிய பசுவும் கன்றும் அவ்வீட் டில் இவர்களுக்காகக் கட்டப்பட்

டிருந்ததோடு ஸரஸாவின் சவுகரியத்திற்காக ஒரு ஆளையும் நியமித்திருந்தாள். புதிய குடும்பம் ஆரம்பமாகியது. மனைவியையும் குழந்தையையும் பார்த்த ஸாமிநாதனின் இதயத்தில் ஏதோ ஒன்று செம்மட்டியாலடித்துவேதனை செய்கிறது. உன்னையேநம்பியிருந்த தங்கையைநாசம் செய்து விட்டாயே...அவள் எங்கு எப்படியானாளோ! எவ்விதம் தற்கொலை செய்துகொண்டாளோ! என்ற நினைவு பலமாக பாதித்து நசுக்குகிறது.

ஸரஸாவுக்கு அகிலாவின் விஷயம் ஒன்றுமே தெரியாதாகையால் அவள் தானாகவே பேசவாரம்பித்து 'அக்காவை அழைத்துவரவில்லையா?' என்று கேட்டாள். ஸாமிநாதன் அவனையறியாது விம்மி விம்மி அழுதுகொண்டே நடந்த சகல விஷயத்தையும் கூறினான்.

இதுகேட்ட ஸரஸா தீயை மிதித்தவள்போல் அலறினாள். தாங்கவியலாத துக்கத்துடன் துடித்தாள். "அக்கா! அக்கா!" என்று கதறித் தவித்தாள். அயலார் வீட்டுப் பெண்ணுக்கு இருக்கும் அன்புகூட தன்னுடன்பிறந்தாளிடம் தனக்கில்லாது போய்விட்டதே என்ற வருத்தம் தான் அவனுக்கு ப்ரதானமாகத் தோன்றியது. இனி என்ன தோன்றி தான் என்ன செய்யமுடியும்?

ரத்தினப்ரபாவின் பூர்ண அன்பிற்கு ஸரஸா பாத்திரமாகிவிட்டதால் அவள் ஒரு தாசி, இவள் ஒரு குலப்பெண் என்கிற வித்யாஸமின்றி மனமொத்த ப்ரேமையுடன் பழகுவதுடன் அவளிடம் கல்வி கற்கவும் சங்கீதம் கற்கவும் நல்ல பொழுதுபோக்காக அமைந்தது.

ஸாமிநாதன் அகிலாவைப்பற்றி ரகஸியமாகப் பலவிடங்களிலும் தேடினான்.' போலீஸிலும் எழுதிவைத்தான். எத்தனை செய்தும் அகிலாவின் தகவலையறியவே முடியாதுபோய்விட்டது. ஸாமிநாதன் முற்றிலும் புதியவனாய் பரிசுத்த இதயத்துடன் கூடியவனாய் மாறிவிட்டதால் ரத்னப்ரபா பழயபடியே அவனிடம் பாடம் கற்றுக்கொள்வதோடு அவனுடைய குடும்பத்தை வெகு அக்கரையுடன் கவனித்துவரும்முறையிலீடுபட்டாள்.

பின்னர் சிலமாதத்திற்கெல்லாம் குழந்தை நன்றாகக் குணமடைந்தது. மாதங்கள் பலபல உருண்டோடி வருடங்களாக மாறிவிட்டன. ஆனால் அகிலாவின் தகவல் ஒன்றுமே இல்லாததால் அவள் தற்கொலை புரிந்ததாகவே எண்ணிக்கொண்டு, இறந்ததாகவே தீர்மானித்துச் சிறுகச் சிறுக அதே எண்ணத்தில் மனது ஊறி தேறுதலும் அடையவாரம்பித்தது. எனினும் ஸரஸாவின் மனதுமட்டும் அவள் பிரிவை மறக்க முடியாது தவித்தது.

இரண்டு வருஷம் கழித்து ஸரஸாவுக்குப் பிறந்த பெண்ணுக்கு அகிலா என்றே பெயர்வைத்து அதைவாயார அழைத்துவந்தார்கள்; அதுவே அவள் மனதிற்கு சிறிது சாந்தியளித்தத.

எவ்வளவு விசாரித்தும் போலீஸாரால் எவ்வித தகவலும் கண்டுபிடிக்க முடியாதுபோய்விட்டது. அவளுடைய கணவன் என்று வந்த மனிதன் பக்காத்திருட்டுப்பேர்வழி என்றும் கொலைக்கேஸில் சம்மந்தப்பட்டவன் என்றும் அவனை தண்டித்துவிட்டார்களென்பதையுமறிந்து ஸாமிநாதன் சந்தோஷமேயடைந்தான். எனினும் அந்த படுபாவியைத் தான் நம்பிக் கொண்டுவிட்டதனால் தானே அகில அகாலமரணமடைந்தது என்கிற விசனம் அவனை மிக்க பாதித்து வாட்டியது.

ஆத்மநாதனின் பெருமுயற்சியினுலும் ஆதரவினுலும் ஸம்ஸாரமென்கிற பெரிய வண்டியில் அமராபாயையும் கோகுலநாதனையும் இரு மாடுகளாகப் பிணைத்துவிட்டார். மனமொத்த தம்பத்ய வாழ்க்கை ஆரம்பமாகியபிறகு அமராபாயின் உடல் இரட்டிப்பாய் போய்விட்டது. அவள் முற்றிலும் ஆனந்தப்பதுமையாகவிருக்கிருள் எனினும் அகிலாவைப் பற்றியோ ஸரஸாவைப்பற்றியோ சிறிதுகூட மறக்கவே இல்லை எப்படித்தான் அவர்கள் மறைந்தார்களோ ! என்கிற எண்ணம் சதா தோன்றிக்கொண்டே இருக்கும்.

அதற்குக் காரணம் தான்தானே! என்று நினைக்கும்போது அவளையறியாது இதயத்தில் ஏதோ சங்கடம் செய்யும். ஆஸ்பத்திரியில் வந்து போனவனை சாமிநாதன்தான் கொன்றுவிட்டானே என்றும் ஒரு தோற்றம் தோன்றிக்கொண்டே இருந்தது. ஆனல் இதை வெளியில் சொல்லவும் முடியாமல் தவித்தாள். அவள் கணவனுடன் எத்தனையோ அன்யோன்யமாயும் உயிருக்குயிராகவிருந்தும் இதைக்கூற ஒரு வித சங்கோசமும் தன்னைப்பற்றி அவர் என்ன நினைத்துவிடுவாரோ என்கிற பயமும் தோன்றியதால் மவுனமாகவே இருந்தாள். புதிய இன்ப வாழ்க்கையின் சந்தோஷத்திலும் ஆஸ்பத்திரியில் நர்ஸாக வேலைசெய்யும் உத்ஸாகத்திலும் அவள் உலகையே மறந்துதானிருந்தாள். காதலின் கனிபோன்று ஒரு ஆண் குழந்தைபிறந்து அவர்களின் சந்தோஷத்தைப் பன்மடங்காகப் பெருக்கியது.

ரவிகாந்தனிடம் தம்பதிகள் விளையாடிக்கொண்டிருக்கையில் வழக்கம்போல் பத்திரிகை வந்தது. அமராபாய் போட்டி போட்டுக்கொண்டு தானே முதலில் படிக்க வாரம்பித்தாள். கொட்டை எழுத்துக்களில் பத்திரிகையில் கண்ட விஷயத்தைப் பார்த்ததும் அவள் சந்தோஷத்துடன் தன் கணவனை நோக்கி "இதோ ஒரு விநோதச் செய்தியைப் பாருங்க்ள்" என்று காட்டினள்.

## உங்களுக்குவேண்டுமா?

என்ற தலையங்கத்தைப் பார்த்து "என்ன அருமைப்பொருள் இருக்கிறதோ ! அதை நீயே படி"...என்றதும் அமரா வாசித்தாள்.

கோகுலம் என்கிற ஊரில் நடந்து வரும் பெண்களின் ரக்ஷகாலயம் என்கிற மகோன்னதமான நிலயத்தில் அனேக பெண்களைப் பல துறைகளிலும் உலகுக்கு உபகாரமான முறையில் கல்விபோதித்துக் கலைகளை ஊட்டிப் பயிற்சி கொடுத்திருக்கிறோம். எங்கள் ரக்ஷகாலயம் ஆரம்பித்து பத்தாண்டுகள் தானகின்றன. இதற்குள் ஆயிரக்கணக்கான அனாதைப் பெண்களுக்கு ஆதரவும் அன்பும் அளித்திருக்கிறோம். ஒழுக்கமும், சீலமும், பகவத் பக்தியும், சத்திய நெறியும் கொண்ட பெண் மணிகள் பல திறப்பட்ட தொழில்களில் தேர்ச்சிபெற்று தொழில் புரியத் தயாராயிருக்கிருர்கள். உபாத்தியாயினி, நர்ஸ், லேடி டாக்டர், தாதி, சமையல், சிற்பம், சித்திரம், எழுத்தாளர்கள், உயர்ந்த சங்கீத வித்வாம்ஸினிகள், கைவேலையில் தேர்ந்தவர்கள், கணிதசாஸ்திரம், ஜோதிஷசாஸ்திரம், பரத சாஸ்திரம் முதலிய அனேக தொழில்களில் தயாராகிய சிலவதிகள் எமது நிலயத்தில் இருக்கிருர்கள். அவர்களுக்கு ஒழுங்கான முறையில் ஆதரவும் அன்பும் காட்டி உதவுகிற

எந்த சங்கமோ, பள்ளிக்கூடமோ, ஆஸ்பத்திரியோ எதுவாயினும் எமது தலைவிக்கு,— ஸ்ரீமதி. கலியுக மீராபாய். ரக்ஷகாலயம் கோகுலம். என்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்,

இங்ஙனம்
உமாபாய்
உபதலைவி,

அதைப் படித்துக் கேட்ட தம்பதிகள் உள்ளம் பூரித்தார்கள். தமது ஆஸ்பத்திரிக்கு இன்னும் சங்கீதம் பாடக்கூடியகாயகிகள்தேவை என்றும் லேடி டாக்டர், நர்ஸ்கள் திறமையுள்ளவர்கள் கிடைத்தால் அவர்களைக்கொண்டு இதேபோன்ற ஆஸ்பத்திரி இன்னும் பல இடங்களில் நிறுவி உலகுக்கு உபகாரம் செய்யலாம் என்றும் நமது பெரிய டாக்டர் அடிக்கடி சொல்கிறார்களே இந்த விளம்பரத்தை அவர்கள் பார்த்தார்களோ இல்லையோ! நாம் கொண்டு காட்டலாம் வாருங்கள்" என்று கூறியவாறு அமராவே முன்னால் எழுந்து ஆத்மநாதனிடம் ஓடினாள். கூடவே கோகுலநாதனும் சென்றான்.

ஆத்மநாதன் ஆனந்தமாகத் தனக்குத்தானே பாடிக்கொண்டு ஆநந்த நிலையிலிருந்தான். அச்சமயம் தம்பதிகள் சென்று "டாக்டர்! இதோ ஒரு அபூர்வ விஷயம் வந்திருக்கிறது நீங்கள் பார்த்தீர்களா!" என்று கூறியவாறு காட்டினாள்.

ஆத்மநாதன் நகைத்துக் கொண்டே, "ஆ! அபூர்வமா!... ஏதாவது காதல் மணம்...என்று முடிப்பதற்குள் அமராபாய்வெட்கத்துடன்...போங்கோ டாக்டர்! இன்னுமா பரிகாஸம் செய்வது? இனிமேல் பரிகாசம் செய்தால் ரவி உங்களை சும்மாவிடமாட்டான் ஜாக்ரதை...இதோ பாருங்கள்." என்று பத்திரிகையைப்படித்துக்காட்டினாள் இதைக்கேட்ட ஆத்மநாதனின்வியப்பும் ஆனந்தமும் கரைகடந்தன. பத்திரிகையை வாங்கித்தானே மறுபடியும் படித்துப்பார்த்து, "பேஷ்! அமராபாய்! கடவுள் எப்போதும் என் பங்கில் இருக்கிறார் என்பதை நான் பலவிதத்திலும் உணர்ந்திருக்கிறேன். இப்போதும் ப்ரத்யக்ஷமாகக் கண்டு களிப்பெய்துகிறேன். நான் இன்றே நேரில் புறப்பட்டு அந்த ஊருக்குப்போய் தலைவி மீரா தேவியிடம் சகலத்தையும் பேசி நமக்குத் தேவையான பெண்மணிகளைத் தக்க ஆதரவுடன் அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறேன்.

சிறந்த எழுத்தாளர்கள்கூட அந்த நிலயத்திலிருப்பதாகக் கண்டிருப்பதால் நாம் சுகாதாரத்தை போதிக்கும் உயரிய பத்திரிகையொன்று கூட ஆரம்பித்து உலகத்திற்குச் சேவைசெய்யலாம்என்று தோன்றுகிறது. ஆகையால் ஆஸ்பத்திரி நிர்வாகத்தை நீங்கள் எல்லோரும் கவனித்துக்கொள்ளுங்கள். நான்போய் வருகிறேன்" என்று சிறு குழந்தையைப்போல் துள்ளிக்குதித்தான். தான் எதிர்காலத்தை நோக்கி கனவு கண்டுகொண்டிருந்த மனக்கோட்டைகள், ஆசைகள், ஆதர்சங்கள் எல்லாம் நினைவில்உருவாகி உடனே கண்கொள்ளாக் காட்சியுடன் பலனளித்துவிட்டதாகவே ஒருதோற்றம் தோன்றியது. அதே வேகத்தில் கிளம்பிவிட்டான். அவன் மனத்தில் எதிர்கால நிர்மாண திட்டங்கள் பரம த்ருப்தியுடன் உருவாகிக் கொண்டுவருகின்றன. மனது அந்த கற்பனையிலேயே லயித்தது.

## 43

வைராக்யப்பதுமையாய் ஞானச் ஜோதியாய் ப்ரகாசிக்கும் கலியுக மீராபாய் அன்று முகத்தில் ப்ரம்மா

ணந்தமானதேஜஸ் ஜ்வலிக்க ப்ரம்மாண்டமான ஹாலில் வந்து நடு நாயகம்போல் உட்கார்ந்தாள். அந்த ஹாலில் ஏராளமான பெண் ரத்தினங்கள் நிரம்பியிருந்தார்கள் மீராபாயை ஒரு தெய்வம் போலவே அப் பெண்கள் நம்பி மதித்துவந்தார்கள்.

“என்னருமைச் சகோதரிகளே! உங்களுக்கோர் சந்தோஷச்செய்தியைத் தெரிவிப்பதற்காகவே நான் உங்களை இங்கு ஒன்றுசேர்த்தேன். ஏதோ, ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா தம் கருணையால் உங்களுக்கெல்லாம் வாழ்க்கையில் ஒரு உத்க்ருஷ்டமான பாதையைக்காட்டி மகத்தான அருள்புரிந்திருக்கிறார். நல்ல உத்தமமான மனிதர்களிடம் நீங்கள் உங்கள் தொழிலை நடத்தி பகவானுடைய முகோல்லாஸத்திற்கும் அன்பிற்கும் பாத்திரமாகக்கூடிய சத்திய நெறியில் பழகி காலத்தைப் பரோபகாரமாகக் கழியுங்கள். எத்தகையோருக்கும் ஒரு தொழிலைக் காட்டி ஊனையும் உயிரையும் வளர்த்து இகத்திற்கும் பரத்திற்கும் நல்ல வழியைத் தேடிக்கொள்ள பகவான் மார்க்கத்தை வகுக்கிறான். பகவானே ஒரு இமைப்பொழுதும் விணக்காமல் ச்ருஷ்டி, சம்ஹாரத்தைச் செய்துகாட்டுவதே நமக்குச் சான்றாகும்.

உங்களுடையபோஷணையை உத்தேசித்தே பத்திரிகையில் விளம்பரம் செய்தேன். ஒரு ப்ரபல டாக்டர் தாமே சொந்த ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள், கைவேலைச் சங்கங்கள் முதலியன நடத்துவதாயும் அதற்கு வேண்டியவர்களை நேரில் பார்த்து அழைத்துச்செல்வதாயும் இன்று காலையில் வந்திருக்கிறார். அவர் மிக்க கண்ணியம் வாய்ந்தவர். நோயாளிகளுக்கு அவுஷதத்தைக் கொடுத்து நோயைக் குணப்படுத்துவதுபோல் சங்கீத மருந் கொடுத்து நோயைத் தீர்க்கும் சிறந்த முறையை அனுபவ பூர்வமாகக் கையாண்டு நல்ல பலனும் அபாரமான புகழும் பெற்றிருக்கிறாராம்.

அவருடைய ஆஸ்பத்திரியில் ஏராளமான சங்கீதக்காரர்கள் தேவையாம். சிறந்த முறையில் பாடக்கூடியவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுபோகப்போகிறாராம். ஆகையால் உங்களில் நன்றாகபாடக்கூடியவர்கள் இன்று பிற்பகல் 5-மணிக்கு பூஜாமண்டபத்தில் ஒன்றுகூடி ஆளுக்கொரு பாட்டும் ராகமும் பாடி அந்த கனவானுக்குக் காட்டுங்கள். மற்றவர்கள் உங்கள் நற்சாக்ஷிப்பத்திரங்கள், பரிக்ஷையி தேறிப் பரிசுபெற்ற பத்திரங்க பதக்கங்கள் முதலியவற்றைக் க டுங்கள்.

உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது ஒரே ஒரு வார்த்தை தான். அதாவது, நீங்கள் போகிய இடங்களில் உங்கள் கடமைகள். சரிவரச்செய்தும் மகா றும் டிக்காரிகள், மகா சீலவதிக்கத் பக்த சிகாமணிகள், ஒழுக்க தில் நெருப்புக்குச் சமமானவர்க இருந்தாலும் இப்படியல்லவா இருக்கவேண்டும், என்று உலகம் கொண்டாடும்படி கற்புக்கரசிகளாய் வைராக்ய ப்ரதிமைகளாய் நல்ல பெயரெடுக்கவேண்டும். அதை என் காதில் கேட்டால் அதுவே எனக்கு ப்ரம்மாநந்தமாகவிருக்கும். என்னை நீங்கள் ஏதோ தெய்வமாகப் போற்றுவதிலும் சதா கும்பிடுவதிலும் என்னுள்ளம் த்ருப்தியடைந்துவிடாது. உங்களைப்பற்றிப் பிறர் கூறும் உத்தம வாக்யங்களால் தான் என் இதயம் உண்மையில் நிரம்பிப் பூரிக்கும்.

# சோம்பேறியாய்

## இருப்பதற்கு இது காலமல்ல

**பெண்கள் ஆக்ஸிலியரி கோர் (இந்தியா) வில் வேலை செய்ய பல ஆயிர பெண்கள் தேவையாய் இருக்கிறது. வேலை மிகசுவாரச்யமுள்ளதாயும் நல்ல சம்பள முள்ளதாயும் இருக்கும். 17 முதல் 50 வயதுக்குள்ளும் இங்கிலீஷ் (ஆங்கிலம்) நன்ருய் பேசவும் எழுதவும் தெரிந்திருக்கும் பெண்கள் மட்டிலுமே விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும்.**

வஸதியான ஹாஸ்டல்கள்: பொது சேவையிலிருக்கும் W. A. C. (I) அங்கத்தினர்களாயுள்ள பொறுப்பு வாய்ந்த பெண்களின் மேற்பார்வையில் இருக்கும் வசதியுள்ள ஹாஸ்டல்களில் குடியிருக்கச் செய்கிறார்கள்.

பற்றி: சமாதானம் திரும்ப ஏற்பட்டதும் ரோதிகளிடமிருந்து நிபந்தனையற்ற சரணடைதலை பெறுவதற்கு தங்களால் இயன்றதைச்செய்த இந்த இந்திய பெண்களுக்குத்தான் சமாதான பலன்களை அனுபவிக்க அரும் பாத்தியதை உண்டு.

ங்காலத்து ஜீவனோபாயம்: வியாபாரத்திலும் கைதொழிலிலும் இந்தியா அதிவிரமாக முன்னேறி வருகிறது. நிலைமை சமாதானத்திற்கு வந்ததும் சிவில் உத்தியோகங்களுக்கு அநேக நன்குதேர்ச்சி பெற்ற ஆணும் பெண்ணும் தேவையாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. W.A.C. (I)யில் பெரும் பயிற்சியும் இந்த கோரில் வேலை செய்யும் சமயம் பெரும் அனுபவமும் அனேக பெண்களுக்கு யுத்தமில்லாத காலத்தில் வெற்றிகரமான ஜீவனோபாயம்பெற தேவையான யோக்யதாம்சங்களையும் நிர்வாக அனுபவத்தையும் கொடுக்கிறது.

**விண்ணப்பித்துக்கொள்ள வேண்டிய முறை:** உத்தியோகத்தின் நிபந்தனைகள் இன்னும் மற்ற விவரங்களையும் W. A. C. (I) யின் மெம்பர்களான A.T.R.O'S/W.A.C. (I) களிடமிருந்து ஒருவித நிபந்தனை யின்றியும் பெறலாம். உங்களுக்கு வேண்டிய W.A.C. (I) யைப்பற்றிய சகல தகவல்களையும் கொடுப்பதற்கு இந்தப் பெண்கள் ஆவலாய் இருப்பார்கள்.

**A.T.R.O./W.A.C. I விலாசங்கள்:**

**பம்பாய்** A.F.I. பில்டிங், ஹாஸ்பிட்டல் லேன், டோபிடலாவ்.

WAC INDIA

கல்கத்தா C/O D.T.R.O. 28, கிரேட்டர் ரோட், லக்னோ C/O T.R.O. ஈஸ்டர்ன் ஹஸரத்கஞ்ச். பாட்னு C/O D.T.R.O. எக்ஸிபிஷன் ரோட். ராவில்பிண்டி க்ல்வன் தாமஸ் ரோட். பெங்களூர் கண்டோன்மென்ட கப்பன் ரோட். லாகூர் 22, டேவிஸ் ரோட். பூனு ஷ்டான்டன் ரோட். மதருஸ் 3/18 மவுன்ட் ரோட்.

## பெண்கள் ஆக்ஸிலியரி கோர் (இந்தியா) வில் சேருங்கள்.

AAA-1593-A.TM



JAGANMOHINI is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, Vaithamanidhi Cottage, Station Road, Singaperumalkoil. JAGANMOHINI is owned and edited by Mrs. V. M. KOTHAINAYAKI AMMAL, assisted by the Editor-in-charge V. M. SRINIVASAN, M. A., B. L.

# பாலர் மோகினி



## உங்கள் குழந்தைகளுக்கென்றே குட்டிப் பிரசுர

**பதிப்பாசிரியர் : வை. மு. ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்**

தமிழ்நாட்டின் இளஞ்சிங்கங்களைத் தட்டி எழுப்பும் நோக்கத்து வெளியிடப்படும் இந்த பாலர் அறிவு வளர்ச்சித் தொகுதிக்கு கவியே சுத்தானந்தபாரதி, கலாநிதி பி. ஸ்ரீ, காப்டன் சேஷாத்திரிநாதன் முத பிரபல அறிஞர்கள் பல அரிய விஷயங்களைக் குறித்து எழுதுகிறார்க குழந்தைகளின் நண்பர் சூடாமணியும் நமது சித்திர நிபுணர் ராகவ பெரிய பங்கெடுத்துக்கொள்கிறார்கள். 12 வயதுக்குட்பட்ட, படிக் தெரிந்த எல்லாக் குழந்தைகளுக்கும் பெரும் விருந்தாக விளங்கும். துறைகளிலும் ஒரு வழிகாட்டியாக நின்று பாலர் உலகில் ஞானச் ரேற்றிவைத்து நம் நாட்டின் மதிப்பைத் தூக்கிவைக்கும் அறிவுக் களஞ் சியம். விரைவில் வெளிவரும், பார்த்திப ஹு முடிவுக்குள் 6 புத்தகங்கள் வெளிவரும். ஒவ்வொன்றும் விலை அணா 6 தான். பேப்பர் கட்டுப்பாட்டின் படி அதிகப்படியான பிரதிகள் வெளியிட இயலாததால் தங்கள் குழந்தை களின் அபிவிருத்திக்காக அன்பர்கள் முன்பணமாக ரூ. 2—4 மணியார் டர் செய்து ஆறு புத்தகங்களும் கட்டாயம் கிடைக்கும்படிப் பதிவுசெய்து கொள்ளவும். ஒவ்வொரு பிரதியும் ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங் வாங்கி அனுப்பப்படும். தனித்தனியாக ஒவ்வொரு புத்தகமாக வரவழைப்பவர்கள் தபால் செலவுக்காக ஒரு அணா சேர்த்து 7 அணாவாக அனுப்பவும்.

**CHILDREN'S BOOK OF KNOWLEDGE**

**THE BALAR MOHINI EDUCATIONAL SERIES**